T. 1535

ளியீடு : கூஅ

# அப்பர் சுவாமிகள்



10 DEC 1948

கழக வெளியீடு - சுஅ

உ

திருச்சிற்றம்பலம்

# அப்பர்சுவாமிகள் சரித்திரம்

*

சென்னை
சட்டகலாசாலைப் பேராசிரியராயிருந்த
**திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை**
எம். ஏ., எம். எல்., அட்வகேட்
அவர்கள் எழுதியது

*

: திருநெல்வேலி, தென்னிந்திய :
: **சைவசித்தாந்த** :
**நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்**
திருநெல்வேலி :: சென்னை

*Second Edition June* 1927

[ *3rd Edition* ]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS

Paper Issue Card No. MS. 95-B (1000—12-1-47)

[ *Copy-right* ]

KABEER PRINTING WORKS, MADRAS MS. 524

# பதிப்புரை

சைவசமயத் தலைவராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், செந்தமிழ் நாட்டின்கண் மிக்கு வளர்ந்து செழிப்புற்றோங்கிய சைவ வான் பயிர்க்குக் களைகளாகத் தோன்றி இடுக்கண் விளைத்துவந்த புத்தம், சமணம் முதலிய புறப்புறச் சமயங்களை வேரொடு கல்லி எறிந்து சைவசமயத்தை மலைமேலிட்ட விளக்குப் போல யாண்டும் ஒளிவிளங்கச் செய்து, செயற்கருஞ் செயல்கள் பல புரிந்து, தேவார திருவாசகச் செழுந்தமிழ்ப் பாடல்களைப் பொழிந்துள்ளார்க ளென்பது யாவரும் அறிந்ததே. இந்நால்வர் வரலாறுகளையும் நுட்பமாகக் கற்றுணர்வார்க்கு அவர்கள் காலத்தில் நம் நாட்டு வரலாறும், நம் நாட்டினர் பழக்க வழக்கங்களும் நன்கு புலனாகும். ஆகவே அவற்றைச் சரித்திர ஆராய்ச்சி கருதி எச்சமயத்தவரும் விரும்பிக் கற்றுவரினும் சைவசமயத்தார் சமயங் கருதிச் சிறப்பாகக் கற்று வருகின்றார்கள். அதற்கு இதுகாறும் வெளிவந்துள்ள வரலாற்று நூல்களனைத்தும் ஆராய்ச்சியுரை ஏதுமின்றிப் புராணத்தை அப்படியே தழுவி எழுதப்பட்டனவாகும். ஆகலான் வரலாறுகளில் ஆங்காங்குப் பொதிந்து கிடக்கும் நுட்பவுண்மைகளை யெல்லாம் திருந்திய கல்வி யறிவுடையாரேயன்றி ஏனையோர் ஒரு சிறிதும் அறிந்துய்ய ஏலாதாயிற்று. அக்குறையினை நீக்கவே தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும், சட்டநூற் புலமையும் ஒருங்கே சிறக்கப் பெற்ற உயர் சைவத்திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் நால்வர் வரலாறுகளையும்

ஆராய்ச்சிக் கருத்துக்களுடன் வெளியிடக் கருதி, முதற்கண் அருள்ஞானத் தந்தையாகிய அப்பர் பெருமான் வரலாற்றினைக் கற்றார் கல்லாதாராய எத்திறத்தாரும் கற்றுங் கேட்டும் இன்புறத் தக்கதாய் எழுதி அதன் முதற்பதிப்பு குரோதன ஆண்டு பங்குனித் திங்களில் வெளியிடப் பெற்றது.

அவ்வாராய்ச்சி யுரையினை இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள தமிழ்ப் புலவர்களிற் பெரும்பான்மையோர் படித்து வியந்து மகிழ்ந்து அதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டி வந்தமையால் முதற்பதிப்பின் படிகள் முழுதும் விரைவிற் செலவாயின. மேலும் கி. பி. ககூஉகூ-ம் ஆண்டு கல்லூரி முதற்றேர்வு (Intermediate Examination)க்குப் பயிலும் மாணுக்கர்க்குப் பாடமாக அமைக்கப் பெற்றிருக்கின்றது.

முதற்பதிப்பு விரைவாகப் பதிக்கப்பட்ட மையால் அதன்கண் ஏற்பட்ட சில திருத்தங்களை இப்போது செய்தும், பொருள் நோக்கிச் சில தலைப்புக்களைப் புதுவனவா யமைத்தும், சில தலைப்புக்களை மாற்றியமைத்தும் இவ்விரண்டாம் பதிப்பினைச் செவ்விதாக வெளியிட்டிருக்கின்றோம். இவ்வரும் பெரும் ஆராய்ச்சியுரையினை எழுதியுதவிய ஆசிரியரவர்கட்கும், இப்பதிப்பிற்குத் திருத்தஞ் செய்துதவிய தமிழறிஞர்கட்கும் யாம் எழுமையும் மறவா நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம்.

திருநெல்வேலி,
27-6-1927 } சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 7 |
| | அப்பர் புகழ்மாலை | ... | 9 |
| க. | தோற்றுவாய் | ... | 13 |
| உ. | பிறப்பு வரலாறு | ... | 17 |
| ௩. | சமண் சமயம் புகுதல் | ... | 26 |
| ச. | சமணர் தீமைகளும் நாயனுர் அருள் வெற்றியும் | ... | 39 |
| ரு. | திருப்பதிகள் சென்று சிவவழிபாடாற்றல் | ... | 54 |
| சு. | ஆளுடைய பிள்ளையாரோடளவளாவுதல் | ... | 59 |
| எ. | திருவடி மலர் சூடப்பெறல் | ... | 66 |
| அ. | அப்பூதியடிகளார் அன்பின்றிறம் | ... | 68 |
| கூ. | பிறபதிகள் சென்று போற்றல் | ... | 79 |
| க0. | திருக்கயிலைத் திருக்கோலக் காட்சி | ... | 94 |
| கக. | ஞானசம்பந்தரை மீண்டுங் காணல் | ... | 108 |
| கஉ. | திருநாவுக்கரசரது சிறப்புப் பெயர்கள் | | 119 |
| க௩. | தேவார ஆராய்ச்சி | ... | 123 |
| கச. | தேவாரத் திருக்குறட் கருத்தொருமை | | 159 |

# முன்னுரை

சைவசித்தாந்தப் பெருநெறித் தலைவராகிய திருநாவுக்கரசரது வரலாற்றினை உரை நடையில் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளுதற் பொருட்டும் அதன் நுணுக்கங்களை என் சிற்றறிவிற்கு எட்டியவளவு சுட்டுதற்பொருட்டும் இச் சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இது தற்கால ஆராய்ச்சி முறையையும் தழுவியுள்ளது. இதன் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள தேவார ஆராய்ச்சி மிகவும் சுருக்கமாகவே வரையப் பெற்றது.

இவ்வரலாறு பெரியபுராணத்துள்ள நாயனார் சரிதத்திற்குச் சிறிதும் வேறுபடாத வண்ணம் இதனை மூலத்தோடு திட்பநுட்பமாக ஒத்துப் பார்த்து உதவிய டாக்டர் திருவாளர் C. சின்னசாமிப் பிள்ளை (M.B., C.M.,) அவர்களுக்கும், இதனை எழுதி அச்சிடும் வேலையைத் தனதாகக் கொண்ட நண்பர் திரு. V. சங்கரலிங்கம் பிள்ளை B. A., அவர்களுக்கும் நான் நன்றி யுணர்வுடையேன்.

கா. சுப்பிரமணியம்.

# அப்பர் புகழ்மாலை

—————

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை யுணராதேன்.

(பெரியபுராணம்)

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

(கந்தபுராணம்)

அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறு வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

(திருவிளையாடற்புராணம்)

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு
முழவா ரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம். (காஞ்சிப்புராணம்)

விஞ்சை கற்பன வேறிலை விடையவன் பதங்க
ளஞ்சு மேயென வறியவெவ் வுலகுங்கற் புணையா
நெஞ்சு துட்கெனு நெடும்புனல் வேலையும் பிறவி
வஞ்ச வேலையு நீந்திய மன்னனைப் பணிவாம். (பேரூர்ப்புராணம்.)

ஆலநிழ லமர்ந்தபிரா னருளி னாலே
யன்றொருகற் புணையாக வாழி நீந்தி
ஞாலமுழு துய்ந்தருள நவையி லாத
நறுந்தமிழின் பலமினிது நாளு நல்கிச்
சாலமிகு பாவமுது வேனில் வெம்மைத்
தழலாற வாகமநாற் றமருஞ் சான்ற
சீலநிறை சைவநெறி நிழல்ப ரப்புந்
திருநாவுக் கரசினடி சிந்தை செய்வாம்.
(திருவாரூர்ப்புராணம்.)

புத்தியற் றிருக்கும் பொய்யர் புறச்சம யத்தை நீங்கிச்
சத்தியப் பொருளை யோர்ந்து தலைவனை யறிந்து சைவ
பத்தியிற் கனிந்த ஞானப் பழத்தினை யொருகற் றூணை
லத்தியைக் கடந்த நாவுக் கரசினை வணங்கு வோமே.
(செவ்வந்திப்புராணம்.)

மண்ணாசை பெண்ணாசை மூன்று நீத்து
மனத்தாசை யறவெறிந்தா னந்த நீர்பாய்
கண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கிக்
கருத்தாசை யவனருட்கே கைம்மா றாக்கி
யுண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்னு
முழவாரப் படையாளி யுருகிப் பாடும்
பண்ணாசைத் திருநாவுக் கரையன் பாதம்
பத்திபழுத் தொழுகநெஞ்சிற் பதித்து வாழ்வாம்.
(திருவாப்பனூர்ப்புராணம்.)

அருள்பெருகுந் திலகவதி யாரருளா லமண்சமய மகற்றி யன்பாற்
கருதரிய கற்புணையாற் கடனீந்திக் கருவேலை கடப்பான் சீர்த்தி
மருவுதிரு வாமூரில் வைதிகசை வந்தழைப்ப வந்து தோன்றித்
திருவதிகைப் பதிவருசெந் தமிழ்நாவுக் கரையர்பதஞ் சிந்தை செய்
[வாம்.

(திருப்பூவணப்புராணம்.)

திருநீற்றை மெய்யழுத்தி யஞ்செழுத்தை
நெஞ்சழுத்திச் சிலைக்கை மார
னுருநீற்றும் பெருமானை யுறவழுத்திச்
சமணரெனு மொன்னார் மூட்டும்
பொருநீற்றுக் குடவறையுங் கடகரியும்
விடவரவும் புறங்கண் டாழிக்
கருநீத்தங் கடப்பவொரு கற்றோணி
யுகைத்தானைக் கருத்துள் வைப்பாம்.

(திருக்குற்றாலப்புராணம்.)

பாலிடை நஞ்சங் கண்டு பதைபதைத் தோடி யோர்பா
னாலிடை யவருண் பாக்கு நுவன்றமா லயனுண் ணுணப்
பாலிடை நஞ்சங் கண்டு பதைப்பின்றித் தாமுண் டோர்பா
னாலிடை யவரே யென்னப் பொலியுநோன் மையர்தாள் போற்றி.

(திருப்பெருந்துறைப்புராணம்).

எழுபது வெள்ளஞ் சேனை யெடுத்திடு பலகற் கொண்டு
செழுமணிப் பரவை யொன்றே கடந்தவெஞ் சிலையோ னுண
வழுவம ணிடுகல் லொன்றுன் மறிகடல் பிறவி வேலை
முழுவதுங் கடந்த வெங்கண் முதல்வனுக் கன்பு செய்வாம்.

(திருநாகைக்காரோணப்புராணம்.)

கந்தைமிகை யாங்கருத்துங் கையுழவா
ரப்படையுங் கவின்வெண் ணீறுஞ்
சிந்தையிடை யறுவன்புஞ் சிவஞானம்
பழுத்தொழுகு செய்ய வாயுந்

தந்தையொடு தாயிலான் றிருவடிதை
வருமனமுந் தாரைக் கண்ணு
நிந்தையறு முழுத்துறவு முடையபிரா
னடிபணிந்து நீடு வாழ்வாம். (உறையூர்ப்புராணம்.)

இருளென்று சொலத்திரிவார் மனம்வேவ
நீற்றறையு ளிருந்து முற்றேம்
வெருளென்று துயர்க்கடலு ளவராழுந்தக்
கருங்கடற்கன் மிசைமி தந்து
மருளென்று மாருத வெண்ணீறுங்
கண்மணியு மைந்தெ ழுத்தும்
பொருளென்று தெரிவித்த புண்ணியவா
கீசர்பதம் போற்றி வாழ்வாம்.

(திருக்குறுக்கைப்புராணம்.)

குறித்தகுலத் திலகவல்லிக் கிளைவளைப்ப
வளைப்புண்டு கொடிய நாகம்
பறித்தகுருந் தினைமீட்டு நீற்றறையின்
வன்னிவென்று படருங் கோட்டு
வெறித்தமத மாக்களையும் விலக்கிமுழங்
கியவத்தி மீதே குண்டர்
செறித்தகல்லான் மிதந்துவருந் திருநாவுக்
கரசுநிழற் சேர்ந்து வாழ்வாம்.

(திருக்கழுக்குன்றப்புராணம்.)

உ

திருச்சிற்றம்பலம்

# அப்பர் சுவாமிகள் சரித்திரம்

இடையருப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு
முழவா ரத்திண்
படையருத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே
பதித்த நெஞ்சு
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாட்ற்
றொடையருச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம்.

(காஞ்சிப்புராணம்)

## க. தோற்றுவாய்

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்றார் திருவள்ளுவர். 'அரிய' என்பது பிறரால் எளிதாக அறியப்படாத உண்மைகளை ஒருவன் உணர்ந்து பிறர்க்கு உணர்த்துதலும் பிறர் எளிதில் ஆற்றமுடியாத செயல்களைத் தனக்கும் பிறர்க்கும் நன்மை விளையத்தக்க முறையில் செய்தலுமாம். அரிய உண்மை யுணர்ச்சியால் நல்லறிவும் அரிய செயல்களால் நல்லொழுக்கமும் உயிர்கள்பெற்று உயர் நெறியிற் சென்று நிலைத்த இன்பம் எய்தும். இந் நிலவுலகத்திலே வாழ்கின்ற எல்லா உயிர்களும் எளிதாகத் தாமே உண்மை யுணர்ந்து நன்முயற்சி செய்தல் அரிது.

மக்களுள்ளும் சிலரே கல்வி அறிவு ஒழுக்கங்களுக்கு அரிய எடுத்துக்காட்டாக இலங்குகின்றார்கள்.

செய்தொழிலால் உயிர்களுக்குச் சிறப்பு ஏற்படுகின்றது. உயிர்கள் யாவும் துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெற விருப்பமுடையன. இவ்வுலகத்தில் இன்பம் எய்துவதற்குக் கருவியாக வுள்ளது பொருள். அப்பொருளை ஈட்டுவதற்குத் தக்கமுறையைக் கற்கவேண்டும். தக்க முறையும் அறவழிப்பாலதா யிருத்தல்வேண்டும். அறவழியால் ஈட்டப்படாத பொருள் இன்பம் ஈவது போற்றோன்றித் துன்பத்தைப் பயக்கும். இவ்வுலக இன்பத்தை அறவழியில் ஈட்டிய பொருளுதவியால் அடைந்தாலும், யாக்கை நிலையாமையால் அவ்வின்பம் சிற்றின்பமேயாகும். கடவுளுடைய திருவடிப்பேற்றாற் பெறும் இன்பமே வீடெனப்படும். ஆதலால் உயிர்க்கு உறுதி பயப்பன அறம், பொருள், இன்பம், வீடு என்று பண்டைத் தமிழ்ப் பெரியோர் வகுத்துள்ளார்கள். இந்நான்குமே ஒவ்வொன்றும் பலவகைப்பட்டதாய் விரிந்து நிற்பன. அவற்றை எய்தும் வாயில்களும் வழிகளும் பல. ஒவ்வொரு வழியிலும் தலைநின்றாரது பெருமையை அவ்வழி நிற்பார் சீராட்டிப் பாராட்டுவது வழக்கம். அடையும் பயனுக்கு ஏற்றவாறு வழிகளும் ஏற்றத்தாழ்வுடையன.

தந்நயங் கருதாது பயனிலாதன செய்து ஒழுகும் சிறியோரினும் அறிவோடு தந்நயங் கருதுபவர் பெரியராக மதிக்கப்படுவர். அவருள்ளும் நிலையில்லாத சிற்றின்பத்திலே தம்மிடம் உள்ள பொருளைச் செலவழிப்போரைப் பார்க்கினும் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும் அப்பொருளைத் தேடுபவர் சிறந்தவராவர். உடல்நலம் பயத்தற்கேதுவாகிய பொருளீட்டல் ஒன்றினையே பொருளாகக் கருதாது உள்ளக்கண்ணைத் திறக்கும் கல்விப்பொருளையுந் தேடுவோரை அவரினும் பெரியரென்ப. கல்வி பயில்

கின்றவர்களுள்ளும் கற்கத் தக்கனவற்றைத் தெரிந்து கற்போரே சிறந்தோராவர். அனைய கல்வி மாத்திரம் உடையாரினும் கற்றவழியில் நிற்பவர் பெரியோராவர். இவ்வுலகிலும் விண்ணுலகிலும் உயர்பதங்கள் பெறக் கருதி அறவழி நிற்கின்றவர்களைப் பார்க்கிலும் எக்காலத் திலும் அழியாத இன்ப நிலையை ஈயவல்ல வீட்டுநெறியில் நிற்பவர் பெரியோராவர். நமது **மணிவாசகப்பெருமான்** இறையவர் பதங்களை விரும்பும் வானவர்க்கும், வீடு பேற்றினில் அவாமிக்க தமக்கும் உள்ள இடையீட்டைத் **திருவாசகத்துள்** ஓர் திருப்பாட்டால் இனிது விளக்கு கின்றார். அது

> வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
> றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
> சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
> பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

என்பதாம். வீட்டுநெறியும் பல பல சமயத்தாரால் வெவ் வேறாகக் கூறப்படுகின்றது. அங்ஙனம் கூறப்படும் பல நெறிகளும் தன்னிடத்திலே முடிவதாய்த் தான் எவ் வுயிரையும் முழுமுதற் கடவுளது திருவடி சேர்க்கும் பான்மையதாயுள்ள செந்நெறியே பெருநெறியாகும். அப் பெருநெறி நின்று பெரும்பயன் பெற்றோரே யாவரினும் பெரியோராவர்.

இன்னொரு முறையாலும் பெருமையின் படிமுறை ஆயற்பாலது. தந்நயங் கருதுவோரினும் பிறர்நயங் கருது வோர் பெரியோராவர். பிறர் நயமானது குடிநலம், மரபு நலம், குலநலம், ஊர்நலம், நாட்டுநலம், உலகநலம் எனப் படிப்படியாக உயர்ந்து செல்லும். அவ்வாறே பிறருக்குச் செய்யப்படும் நலத்தின் உயர்விற்கேற்ப அதனைச் செய் வோரும் பெருந்தன்மையில் மேம்பட்டவராவர். இம்மை,

மறுமை, வீடு என்னும் மும்மைப் பயனையும் பெறுவிக்கும் பேரன்பையும் பேரறிவையும் உலகினர் யாவர்க்கும் தமது சொல்லாலும் செயலாலும் அளிக்கின்ற துறவறப் பெருநெறிப் பெரியோரே அருமை பெருமை என்பவற்றிற்கு எஞ்ஞான்றும் அழிவில்லாத எல்லையாக இலங்குகின்றார்கள். அங்ஙனம் இலங்கும் பெரியோரிற் பெரியோரே நமது திருநாவுக்கரசு நாயனார்.

அவருக்குத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் அளிக்கப்பட்ட திருப்பெயராகிய அப்பர் என்ற நன்மொழியே, அவர் யாவர்க்கும் அருள் ஞானத்தந்தை எனப்படும் பெற்றி வாய்ந்தவரென்பதைக் குறிக்கும். அவரது வரலாற்றின் நுணுக்கங்களை இயன்றவரை தொகுத்து மொழிவதே இவ் வுரைநடை நூலின் நோக்கமாகும்.

## உ. பிறப்பு வரலாறு

*பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி*
*பரசுநா வரசான பரமகா ரணவீச*
*னதிகைமா நகர்மேவி யருளினு லமண்மூட*
*ரவர்செய்வா தைகடரு மனகன்வார் கழல்சூடி*
*னிதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை*
*நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால*
*மதியரா குவரீச னடியரா குவர்வான*
*முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே.*

**(திருவேகாதசமாலை)**

தமிழ் நாட்டிலே சமண சமயமானது மன்னர்களாற் போற்றப்பெற்றுச் சிவநெறிக்கு இடையூறு செய்யும் இயல்பினதாய்ப் பரவிய காலமாகிய கி. பி. ஏழாவது நூற்றுண்டிலே, சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையிலுள்ள நடுநாடாகிய **திருமுனைப்பாடி** நாட்டிலே **திருவாமூரிலே**, சைவவேளாளர் மரபிலே, குறுக்கையர் குடியிலே **புகழனர், மாதினியார்** என்னும் இருவருக்கும் அருள் நலஞ் சிறந்த அருமைப்புதல்வராக நமது அப்பர் சுவாமிகள் தோன்றி யருளினர். அவருக்கு முன்பிறந்தார் **திலகவதியார்** என்னும் பெயர் பெற்ற கற்பரசியார் ஆவர். நமது நாயனரது நாடானது ஒழுக்கத்தில் நலஞ்சிறந்த குடிகள் நிறைந்த பல்வளமுஞ் செறிந்து திருமகள் குதித்து விளையாட அமைந்தாற்போல விளங்கிற்று. ஆதலால் **திருமுனைப்பு ஆடி நாடு** என்று பெயர் பெற்றது போலும். நமது சுந்தரமூர்த்தி நாயனர் தோன்றிய நாடும் அதுவே. கோழை படாத மேழிச் செல்வமிக்க வேளாளர் வண்மையுடன் வாழ்ந்த அந்நாட்டின் செழிப்பைச்

சேக்கிழார் பெருமான் நமது நாயனுர் புராணத்தே மிகவும் புகழ்ந்து அதனை அழகு பெறப் புனைந்து கூறியுள்ளார்.

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவா நிறைமருதம்.

(செ. ௯)

வாழைக் குலைகள் வளம்பொருந்தி நெடிதாயிருப்பதனுல் யானைத் துதிக்கை போன்றிருப்ப, செந்நெற்கதிர்கள் வளர்ந்து பொலிவுற்று வளைந்திருப்பது குதிரை முகம் போன்றிருப்ப, பெரிய வண்டிகள் தேர் போன்றிருப்ப, உழவர்களது முழக்கம் படைவீரர் ஆரவாரம் போன்றிருப்ப மருதநிலமானது நால்வகைச் சேனைகள் ஒருங்கு சேர்ந்துள்ள இடத்தை யொத்திருந்தது.

செந்நெல் வளமும், முக்கனிச் செழிப்பும், கரும்பு, கமுகு, தெங்கு முதலியன செறிந்த பொழில் வனப்பும், பெண்ணைமாநதிப்பெருக்கும், குயிலொலியும், மயிலாட்டமும், வானளாவிய மாடங்களும், அம்மாடங்களில் உலாவும் கவின்மிகுந்த மகளிர்கூட்டமும் அந்நாட்டை அணிபெறச் செய்தன.

நீர்வளமிக்க அத்திருநாட்டில் ஏரிகள் பெருங்கடல் போலவும் அதனுட்புகுந்து நறும்பூக்களை மேயும் எருமைகள் கடலிற்படியும் மேகம் போன்றும் அவ் வெருமைகளின் மடிகளை முட்டுகின்ற வரால்மீன்கள் எருமைக் கன்றுகள் போன்றுமிருப்பதாகவும், அவற்றைத் தமது கன்றென நினைந்து எருமைகள் சொரிந்த பால் கரையெங்கும் அலையடிப்பதாகவும் ஆசிரியர் புனைந்து கூறிய பாடல்கள் மிகவும் பாநயஞ் சிறந்திருத்தல் காண்க.

மருமேவு மலர்மேய மாகடலி னுட்படியும்
உருமேக மெனமண்டி யுகைத்தகருங் கன்றுபோல்
பருமேனிச் செங்கண்வரான் மடிமுட்டப் பால்சொரியுங்
கருமேதி தனைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி.

(செ. அ)

இப் புனைந்து கூறும் அழகு எழிலுடன் மிளிர்கின்ற மற்றோர் பாட்டு வருமாறு.

மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களின்லையச்
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையி னகஞ்சிறப்ப
மொய்யொளியி னிழற்காணு மாடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை.

(செ. கூ)

இப்பாட்டின்கண், வண்டின வரிசைகள் நிலமகளது முழுவட்டமாகிய நீல வளையல்கள் போலவும், அல்லது தோண் மாலைகள் போலவும் அசையா நிற்பனவாகவும், திங்கள் மண்டிலமளவு உயர்கின்ற பொழில்கள் அவளது மேலேநீட்டிய கைகள்போல் தோன்றுவனவாகவும், செவ்விய தளிர் அவளது விரல்போலவும், விரலின் நுனியில் நகஞ் சிறந்து விளங்குவதுபோல அத்தளிர் மருங்குள்ள செழுமையாகிய அரும்புகள் சிறிது விரிந்து தமது உட்பகுதியைக் காட்டிக்கொண் டிருப்பனவாகவும், நிலமகள் தனது உருவத்தின் சாயலைக் காணுதற்பொருட்டுக் கையினுற் பிடித்த கண்ணுடியாகத் திங்கள் விளங்குவதாயுங் குறித்தமை மிகவும் நயம் பயத்தல் காண்க. நிலவுலகத்திற்குத் திங்கள் கண்ணுடி யென்பது ஒருவகையால் நோக்கு மிடத்துப் புனைந்துரையாவதன்றி உண்மையாதல் கருதற்பாலது. அஃதெவ்வாறெனில், கிரகணகாலத்தில் புவியின் நிழலே திங்கள் மண்டிலத்தின் மேற்பட்டுத் தோன்றுதல் வானநூலார் கண்ட உண்மையாதலின் என்க.

திருநாவுக்கரசு நாயனுர் புராணத்துள் உழவின் சிறப்பையும் சோலைகளின் வளங்களையும் சிறப்பாக எடுத்துக் கூறுவதற்குக் காரணம் புராணத்திற்குரிய தலைவர் வேளாளராதல் பற்றிப்போலும். அஃது அந்தணர் தலைவராகிய ஞானசம்பந்தர் புராணத்து நாட்டுவருணனையுள் வேள்வியின் சிறப்புக் கூறினமையாலும் தடுத்தாட் கொண்ட புராணத்து நாட்டுவருணனையுள் மகளிர் சிறப்புக் கூறினமையாலும் நன்கு புலனுகும். உதாரணம்.

பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலைக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்குந் தகையவென மணந்துளதால்.

(திருஞான சம்பந்தர்புராணம் எ)

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
அங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ளுடுந் திருமுனைப் பாடி நாடு.

(தடுத்தாட்கொண்டபுராணம் செ. க)

இங்ஙனம் சரித்திரத் தலைவரது தன்மைக்கேற்ப நாட்டு வளத்தையும் நயம்படக் கூறுதல் சேக்கிழார் பெருமானது நூல்நயத்திற்கு அறிகுறியாகும். இது நிற்க.

மேலே சிறப்பிக்கப்பட்ட திருமுனைப்பாடி நாட்டிலேயுள்ள நமது நாயனுரது ஊராகிய திருவாமூர் மிகப் பொருத்தமான பெயரையே யுடையது. எல்லாவகைத் திருவினுஞ் சிறந்த சிவஞானத்தை உதிப்பிக்கும் பெரியவர் பிறக்கும் ஊரென்பதை அச்சொற்றொடர் (திரு ஆம் ஊர்) இனிது குறிப்பது காண்க. கடவுளுண்மை உணராத புறச்சமயங்களாலாய கேடுகள் நீங்கவும் மங்கலப் பொருளாகிய சிவத்தினது அருளொளி எங்கும் பரவவும்

இடமாயுள்ள ஊர் என்பதும் அப்பெயரின் பொருளாகக் கொள்ளலாம். ஆதல்பற்றி நமது சேக்கிழார் பெருமான்,

சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினல்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்

என்றருளிச் செய்தனர்.

அவ்வூரின்கண்ணே இருபெருஞ் செல்வமு மொருங்கு பெற்று விருந்தோம்பி வேளாண்மை செய்தலிற் றலை சிறந்த நற்குடித்தலைவராய் விளங்கிய நமது நாயனரின் தந்தையார்க்குப் புகழனர் என்ற திருப்பெயர் மிக்க பொருத்தமுடைத்து. எவ்வாறெனில், தாமே தமது அருஞ் செயல்களாற் புகழ்படைத்ததுமன்றித் தமது புதல்வரது ஒப்பற்ற சால்பு காரணமாக ‘இவன் தந்தை என்னேற் றான்கொல்’ என்று உலகினர் தம்மைப் போற்றும் பெருமையையும் பெற்றவராதலி னென்க. நன்மக்கட் பேறுடைய பெண்மணிகளே இனிய மாதராவர். நமது அப்பர்பெருமானை உலகத்தார்க்கு ஈந்த மாதினும் இனியார் இலராதலின் புகழனர் தேவியார்க்கே மாதினியார் என்ற பெயர் பெரிதுந் தக்கதாகும். பெண்டிர்க்கு அழியாப்புகழை நிலைநாட்டுங் கற்பிற்கு ஒப்பற்ற எடுத்துக் காட்டாக நாயனரது தமக்கையார் இலங்கினமையால் அவர்க்குத் திலகவதியார் என்னும் பெயர் அமைந்தது போலும். அது மகளிர் கூட்டத்திற்கு அவர் திலக மென்பதைக் குறிக்கும். கல்வி, அறிவு, ஒழுக்கம், தவம், உயர் ஞானம் என்பவற்றை நாடிச் செல்வோரது மயக்கத்தை ஒழித்துச் சிவப்பேரொளி பரப்பும் ஆண்தகையராகிய நமது நாயனர்க்கு வாய்த்த இயற்பெயர் மருணீக்கியார் என்பதும் வியப்பிற்கிடமாக இருக்கின்றது. இக் கருத்தைப் புராண ஆசிரியர்,

அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரு மிருணீக்கி யொளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்

என்று விளக்கிப் போந்தமை காண்க.

மருணீக்கியாரது பெற்றோர்கள் அவரைப் பொன் போலப் போற்றி வளர்த்து ஐந்தாண்டிற்குட் செய்ய வேண்டிய மங்கலச் செயல்கள் யாவுஞ் செய்து முடித்த பின் அவர் கலைபயிலத் தொடங்கினர். தமது தாய் தந்தையர் உள்ளம் மகிழும்படி சிறந்த கலைகள் யாவற்றையும் முறையாகப் பயின்று களங்கமற்ற மதிபோல் அவர் விளங்கினர். பின்னர் அவரது தமக்கையார்க்கு மணம் பேசுங் காலம் வந்தது. அரசரால் மிக மதிக்கப் பெற்றவராய், வேளாண் குடித்தலைவராய் விளங்கிய கலிப்பகையார் என்பார் அவரை மணக்குங் கருத்தினை அவர் தந்தைக்குத் தெரிவித்தார். புகழனாரும் திலகவதியாரை அவருக்குக் கொடுக்க இசைந்தார். இதைக் கலிப்பகையார் உணர்ந்தும் மணம் உடனே நிகழ்வதற்கு இடமில்லாமல் அவர் அரசரது படைத்தலைவராக வடநாட்டிற்குச் சென்று பகைமன்னரோடு நெடு நாள் போர் நடத்த வேண்டியிருந்தது. அக்காலத்தே புகழனார் பிணியுழன்று விண்ணுலகெய்தினர். அவரது இன்னுயிர்க்காதலியாரும் கற்புநெறிவழுவாமற் கணவனாருடன் சென்றார். தந்தையையும் தாயையும் ஒருங்கு இழக்கப்பெற்ற திலகவதியாரும் மருணீக்கியாரும் அவரது சுற்றத்தாரும் பெருங் கவலை அடைந்தனர். பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடன்களைச் செம்மையாக மருணீக்கியார் செய்து முடித்த பின் அன்னோர் இறந்த துயரம் நீங்குவதற்குள் கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ்கொண்ட செய்தி அவர்க்கும் அவரது தமக்கையாருக்குந் தெரிய வந்தது. இச்செய்தி திலகவதியார்க்கு நொந்த புண்ணில்

வேல் நுழைந்ததுபோல் அளவற்ற மனவருத்தத்தை உண்டாக்கிற்று. உடனே அவர் தமது உயிரைக் கலிப் பகையாரது உயிரோடு இசைவிக்கத் துணிந்தனர். ஆய காலை தம்பியாராகிய மருணீக்கியார் அவரது அடியிணை யில் வீழ்ந்து, 'தாயும் தந்தையு மிழந்த தமியேன் உம்மை வணங்கப் பெற்றதனால் உயிர் தரித்தேன். என்னைத் தனியே விட்டேகக் கருதினீராயின் உமக்கு முன்னரே யான் உயிர் துறப்பன்' எனச் சூளுரைத்தலும் தம்பியார் உயிரோடிருத்தல் வேண்டுமென்ற கருணையினால் திலக வதியார் உயிர்தாங்க இசைந்தனர். ஆயினும் மண வாழ்க்கை நடத்த இசையவில்லை. கற்பரசியார் கலன் கழிந்த தோற்றத்தினராய் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டு இல்லின்கண் தவம்புரியத் தலைப்பட்டனர்.

*தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா*
*வும்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி*
*அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கு மருடாங்கி*
*இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்.* (செ. ௩௪)

நமது சுவாமிகளது பெற்றோர்நிலை பண்டைத் தமிழ ரது உயர்தர இல்வாழ்க்கைக் கொள்கைகளின் நலங் கனிந்து இலங்கியதென்னலாம். எழுமையும் தொடர்ந்த உழுவலன்பு காரணமாகக் குலனும், நலனும், உருவும், திருவு முதலிய பல்லாற்றானும் ஒற்றுமையுடைய தலை வனும் தலைவியும் இரண்டுடற்கு ஓருயிர்போல இயல் புடைய மூவர்க்கும் நற்றுணை புரிந்து நனிநடாத்திய இல்லறத்தின் பயனாக

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற*

என்ற பொய்யாமொழியின் பெற்றியை நன்கு விளக்குவான் ஒப்பற்ற புதல்வியையும் புதல்வனையும் தோற்றுவித்த

பெரும்புகழ் நமது நாயனூரது பெற்ருேர்க்கே உரிய தாகும்.

தலைவராகிய புகழனுரை என்றும் பிரியாத மாதினி யார் அவருடன் சென்றதாக ஆசிரியர் ஓதினுர். ஆனல் அவ்வம்மையார் எவ்வாறு உயிர் நீத்தார் என்பதை விரித் திலர். ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்த காலத்தே அவனது கோப்பெருந் தேவியும் தீக்குழி புகாமல் தனது உடம்பை நீத்து உடன்சென்றமை போல மாதினியாருஞ் செய்திருத்தல் கூடுமென்று ஊகிக்க இடமுண்டு. தலைவன் உயிர்நீப்ப அவனேடு இரண்டறக் கலந்து ஒற்றுமைப்பட்ட தலைவியினது உயிரும் அவள் உடற்கு யாதொரு ஊறுமில்லாத வண்ணம் அதனின்றும் பிரிந்தேகுதல் தலையன்பின் செயலாகும். அன்பு காரண மாக நெருப்பில் புகுந்து தலைவி தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் இதற்கு அடுத்த அன்பு நிலையாகும். இவ் விரு முறையும் பிரிவாற்ருமையின் காரணமாகவே நிகழ் வன. அங்ஙனமன்றிப் புகழ் எனவும் புண்ணியம் எனவுங் கருதி உயிர் விடுத்தல் அன்பின் செயலாகாது. அவ்வாறு தற்கொலை செய்வதினும் கைம்மை நோன்பு சிறந்ததாகும். இது நிற்க.

இனி, திலகவதியார் மணம் புரிவதற்கு இசைந்திருந்த கலிப்பகையார் விண்ணுலகஞ் சென்றதைக் கேட்ட மாத் திரத்தில் அவர்பால் தனது உயிரையும் இசைவிக்கக் கரு திய மனப்பான்மை வேறு எச் சரித்திரத்திலும் கேட்கப் படாததொன்று. ஒரு தலைவற்குத் தாம் உரியராதல் கூடும் என்று அறிந்த அளவிலே அவர்பால் தலைவியின் மனம் செல்லுதல் இயல்பு. தலைவரைக் காணின் உழுவ லன்பு தோன்றுதல் கூடும். அவரைக் காணுதவிடத்தும் அவர்பால் மனஞ்சென்ற காரணம் ஒன்றேபற்றி அவரோடு விண்ணுலகுக்குச் செல்லக்கருதும் உள்ளநிலை

கற்புநெறியில் ஒப்புயர்வற்றுத் தலைசிறந்த பெண்மணியாகிய திலகவதியார் ஒருவர்க்கே எளிதாமன்றி ஏனைய பெண்மணிகள் யாவர்க்கும் அரிதாவதொன்றும். உள்ளத்தால் ஒரு தலைவனை உள்ளிய அளவே அவனைத் தாம் மணந்ததாகக் கருதி அவர் இறந்த காலை வேறு ஒருவரையும் மணஞ்செய்யக் கருதாத நிலையே பிற்சரித்திரங்களில் காணுதல் அருமையினும் அருமையாகும். இத்தகைய உயர் நிலையை உள்ளம் அடைவதற்கு அது காம வெகுளி மயக்கத்தினின்றும் விடுபட்டுக் கடவுளுடைய திருவருள் பதிதற்கேற்ற பான்மையை யுடைத்தாயிருத்தல் வேண்டும். அப் பான்மைசான்ற பெண்மணியாகிய திலகவதியார் உயிர் தரித்ததும் தந்நலங் கருதியன்று என்பது மேற்கூறப்பட்டது.

தமக்கையார் இவ்வாறு மனைத்தவம் புரிந்து நிற்ப, தம்பியாராகிய மருணீக்கியார் நிலையாமை உணர்ச்சி மிக்கவராய் எவ்வுயிர்க்கும் துன்பநீக்கமும் இன்பவிளைவும் நேர்தற்குரிய பேரறங்களையே செய்துவந்தனர். அறச் சாலைகள் தண்ணீர்ப்பந்தல்கள், பூங்காவுகள், குளங்கள் முதலிய அமைத்தும், வறியவர்க்கு வேண்டுவன கொடுத்தும், கற்றவர்க்கு உற்றுழி உதவியும், ஒருவர்க்கும் இல்லையென்னாத வண்மையைக் கடைப்பிடித்தார்.

மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார். (செ. ௩௫)

காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்றார். (செ. ௩௬)

## ௩. சமண்சமயம் புகுதல்

உயிர்கள் மாட்டுக் கருணைசெலுத்துதலே குறிக்கோளாகக் கொண்டமையால் அதன்சார்பாய அறவுரைகளை மிகுத்துக்கூறும் சமண சமயத்தை மருணீக்கியார் கைக்கொண்டனர். இதுகண்டு கவலையுற்ற திலகவதியார் சிவபெருமான் திருவடிக்கே தமது உடல், பொருள், ஆவி மூன்றும் ஏற்பித்துத் திருவீரட்டானத் திருக்கோயிலில் தொண்டு செய்யும் ஞான வாழ்க்கையையே மேற்கொண்டனர். சமணசமயம் புகுந்த தம்பியார் பாடலீபுத்திரம் என்னும் பதிக்குச் சென்று அங்குள்ள சமணமுனிவரோடு கூடியிருந்து அவர்களது சமய அடையாளங்களை அணிந்து கொண்டு அச்சமய நூலனைத்தும் நுணுகியுணர்ந்து அவர்கட்குத் தலைவராய்த் தருமசேனர் என்னும் பட்டம்பெற்றுத் தேரர் என்னும் புத்தருள் ஒரு சாராரை வாதில் வென்று புகழொடு திகழ்ந்தார். இஃதுணர்ந்த திலகவதியார் புறச்சமயத்துள் விழுந்த தம்பியை எடுத்தாள வேண்டுமென்று சிவபெருமானிடம் பன்முறையும் பணிந்துவேண்டி வருநாளில் அவர் ஒருநாள் கனவின்கண் அவர்க்குத் தோன்றி, 'நீ மனக்கவலை யொழி. நினது இளவலைச் சூலைநோய் மடுத்து ஆட்கொள்வேன்; அவன் முன்னமே என்னை யடையத் தவஞ்செய்துள்ளான்' என்று உறுதி கூறி மறைந்தனர். அவ்வாறே தருமசேனர் வயிற்றிற் சூலைநோயானது 'கடவுளது நெற்றிக் கண்ணினெழுந்த கனல் போலப்' புகுந்து அவரது குடரின் அகங் குடைந்து துன் புறுத்திற்று. அதனால் அவர் அளவற்ற இடருற்றுச் சமணசமய மந்திரங்களால் அதனைத் தடுக்க முயன்றும், சமண முனிவரது கமண்டல நீரைக் குடித்தும், அவர்களது பீலிகொண்டு உடம்பு முழுதும் தடவப்பெற்றும், முன்னினும் தமது நோய் மிகுதிப்படுவதைக் கண்டு

க்கவலைக் கடலில் ஆழ்ந்தனர். சமணமுனிவர்கள் தம்மைக் கைவிட்டபின் முன்செய் நல்வினையின் பயனாகத் தமக்கையார்பால் நாயனாரது உள்ளஞ் சென்றது. உடனே அவர் பால் தனக்கு உணவுபடைக்கும் வேலையாளனை அனுப்பினார். அவன் போய்த் திருவதிகையிலே ஓர் நந்தன வனத்தின் பாங்கர் திலகவதியாரைக் கண்டு வணங்க, அவ்வம்மையார் ஏதாவது தீங்குண்டோவென்று வினவினார். அங்ஙனங்கேட்டது கடவுள் தமக்குக் கனவிற் கூறியருளினதை நினைவுற்றுப்போலும். அவன், நாயனார் சூலையால் வருந்துவதையும் சமண முனிவர் அதைத் தீர்க்க முடியாமற் கைவிட்டமையையும் எடுத்தியம்பினான். அதனைக் கேட்ட திலகவதியார் தாம் சமண்பாழிக்கு வர இயலாதென்பதைத் தம்பியார்க்கு அறிவிக்கும்படி பணித்தார்.

அச்செய்தியை ஏவலாளன் மீண்டுபோய்த் தருமசேனருக்கு உரைப்ப, அவரும் தமது தமக்கையாரது திருத்தாள் சேருவதே நலமென்ற கருத்தையுடையவராய், சமண சமயக்குறிகளை யொழித்து, வெள்ளிய ஆடை தரித்து, தமக்குக் கைதருவாரைத் துணையாக்கொண்டு, இரவிலே பிறர் அறியாமலே புறப்பட்டுத் திருவதிகையிலே திலகவதியார் இருந்த திருமடத்தைச் சேர்ந்தார். தமது குலவிளக்காகிய தமக்கையாரது திருவடியில் வீழ்ந்து வணங்கித் தமக்குற்ற சூலைநோய் நீங்கும் வழியை உரைத்தருள வேண்டுமென்று வேண்டினர். அவர்மேற் கருணை கூர்ந்த திலகவதியார் அவரை எழுந்திருக்கும்படி பணித்துச் சிவபெருமானது திருவருளையே உன்னி இறைபணி நிற்கும்படி கட்டளையிட்டு அவரது பேரருளை நினைந்து திருநீற்றை அஞ்செழுத்தோதித் தம்பிக்குக் கொடுத்தார். சிவதீக்கையின் பயனாகக் கருதி யளிக்கப்பெற்ற அத்திருநீற்றினை அவர் அன்புடன் ஏற்று உடம்பு முழுவதும்

மணிந்து தமக்கையார் பின்னே திருக்கோயிலுக்குச் சென்றனர். நமது நாயனாரது அகத்திருளும், புறத்தேயுள்ள இரவின் இருளும் நீங்குதற்குரிய திருப்பள்ளியெழுச்சிக் காலத்திலே திருவலகையும் திருமெழுக்குத் தோண்டியையும் எடுத்துக்கொண்டு திலகவதியார் திருவீரட்டானத் திருக்கோயிலினுள்ளே தம்பியாரையும் அழைத்துச் சென்றனர்.

தம்பியார் அங்கு வீற்றிருந்தருளும் பெருமானாரது திருமுன்பு நிலமிசை வீழ்ந்து வணங்கியவுடன் கடவுளது திருவருளாலே செந்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வெய்தினர். உடனே 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைத் தமது பிணியும் ஏழுலகத்திலுள்ளாரது துயரும் தீரும்படி பாடினர். பாடியதும் சூலை நோயறப்பெற்றுத் தமக்கு நேரே நின்ற சிவ பரம்பொருளது இணையற்ற பேரருட் கடலிற் றிளைத்தாடினர். அத்தகைய பேரருட் பெருவெள்ளத்தில் தாம் மகிழ்ந்தாடுதற்குக் காரணமாயிருந்த சூலைநோயினைத் தமக்குப் பேருதவி செய்ததாகக் கருதி அதற்குப் பதில் நலம் தாம் யாது இயற்றுதல் கூடுமென்று திருவருளை வியந்தனர். வியத்தலும் சிவபெருமானது கருணையால் வானத்தில் ஒரு வாக்கெழுந்தது. அஃதாவது 'இனிய செந்தமிழ்ப்பதிகம் பாடியதனால் திருநாவுக்கரசு என்ற பெயர் நின்னுமமாக ஏழுலகத்திலும் நிலைபெறுவதாக' என்பதே. அது கேட்டு யாவரும் வியப்புற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்தனர். நெடு நாளாகப் புறச்சமயத்தினின்று பெருமானைத் தொழாத தமக்கு ஒப்பற்ற திருவருள் கிடைத்தது கடவுளை இகழ்ந்த இராவணனுக்கு அவரருளிய கருணைத்திறத்திற்கு ஒப்பாகு மென்றெண்ணி அதனைத் தமது ஒவ்வொரு பதிகத்தி னிறுதியிலும் பாராட்டுவாராயினர். இவர் இங்ஙனந் திருவருள் பெற்ற

பெருமையைத் திருவதிகையிலுள்ள அடியாரெல்லாருந் தெரிந்து 'உலகம் உய்ந்தது, உய்ந்தது' என்று பலவகை மங்கல வாத்தியங்களால் வெற்றி முழக்கஞ் செய்தனர். பின்னர்த் திருநாவுக்கரசர் தமது உள்ளம், மொழி, மெய் மூன்றினாலும் கடவுளுக்குத் தொண்டுசெய்யக் கருதிச் சிவசின்னங்க ளணிந்து, உள்ளத்தில் இடையருப் பேரன்பு மிக்க நினைவும், நாவினில் அமுதக்கடல்போல் எழுகின்ற தேவாரப்பதிகமும், கையில் உழவாரப்படையு முடையவராய் விளங்கினர். இது நிற்க.

பல சமயங்களையும் ஆராய்ந்து உண்மை அறிவான் புகுந்த நாயனார், அப்புறச் சமயத்திற் புகுதற்குக் காரணம் அவர் முற்பிறப்பிற் செய்த தவத்தின் ஒரு சிறிது வழுவினமையேயாம். அது,

பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுந்
தொண்டரையா ளத்தொடங்குஞ் சூலேவே தனைதன்னை (செ. சுக)

என்ற ஆசிரியர் சேக்கிழார் திருவாக்கால் விளங்கும். அவர் எவ்வாறு வழுவினரென்பது நன்கு விளங்கவில்லை. அவர் முற்பிறப்பிலே சமயநூல்கள் யாவற்றிலும் வல்ல வராய்ச் சைவமுனிவர் ஒருவருக்கு எதிரிடையாக வாது செய்த சமணப்புலவர் ஒருவரோடு தாமும் சேர்ந்து வழக் காட, அச்சைவ முனிவர் வெகுண்டு அவரை வெஞ்சொற் கூறியதாக ஓர் தலபுராணங் கூறுகின்றது. அவ்வாறு யினும் இப்பிறப்பிலே சிவஞானம் பெறுதற்குரிய அள வில்லாத பெருந்தவத்தை முன்னமே நமது நாயனார் ஆற்றி யிருந்தனரென்பது,

முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்றான்
அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வம்........... (செ. சஅ)

என்று சிவபெருமான் திலகவதியாருக்குக் கனவிற் றோன்றி அருளிச் செய்ததின் வைத்து உணரப்படும்.

சிவபெருமானது திருவருள் சிறிது மறைந்த காலத்து விதிவழி மதி செல்லும் என்பதைச் சேக்கிழார் சுவாமிகள், "நம்பரரு ளாமையினாற் கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம் குறுகுவார்" என்ற சொற்றொடரால் விளக்கினர். அமணர்களது அறவுரை கேட்டுத் தான் அலமந்ததாகத் திருவையாற்றுத் திருப்பதிகத்து முதற்றிருப்பாட்டிலே நமது நாயனார் கூறியுள்ளார். சமண சமயத்திற்குச் சென்றது தமது தீவினைப் பயனென்பதை,

......................அருள்செய்த ஆரூரர்தம்
முன்னிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைபின் போனவாறே

என்றும்,

............................பிணிதீர்த்த ஆரூரர்தம்
அருகிருக்கும் விதியின்றி யறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட [வாறே

என்றும்,

மதிதந்தவாரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகியுய்யும்
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக்
காய்ந்தவாறே

என்றும் தமது திருப்பதிகங்களுள் திருவாய்மலர்ந்தருளியதனால் விளங்கும். சமணசமயத்தில் தமது வினைக்கேற்பத் தம்மைப் புகுத்தியதற்கும், பின் நோய் மடுத்து ஆட்கொண்டு அதனை நீக்கியதற்கும், தமக்கு எல்லையில்லாத சிவானுபவத்தைக் கொடுத்ததற்கும் காரணமாயிருந்தவர் சிவபெருமானே என்பதைத் தமது திருப்பதிகங்களிற் பலவிடங்களிலும் விதந்தோதியுள்ளார். அதுபற்றிய ஓர் திருப்பாட்டு வருமாறு.

ஓதுவித் தாய்முன் னறவுரை காட்டி யமணரோடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே.

இச்செய்யுளுள், 'நின் பணி பிழைக்கில் புளியம் வளாரால் மோதுவிப்பாய்' என்று நகைச் சுவை பொருந்தக் கூறியது முற்றவத்திலே தாம் சிறிது வழுவினதற்கு இப்பிறப்பில் சமணசமயத்துள் தன்னைப் புகுவித்தமையைக் குறிக்குமெனலாம். இதற்கடுத்த செய்யுளில்,

எத்தைக்கொண் டெத்தகை யேழை
 யமணொ டிசைவித்தெனைக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு
 வித்தென்னைக் கோகுசெய்தாய்

என்றதுங் காண்க.

பின்வரும் பகுதிகளிலே சமணரினின்று தம்மைக் கடவுள் பிரித்ததும், தாம் அவருடைய தாளில் அடைக்கலம் புகுந்ததும், அவர் தந் தன்மையைத் தமக்கு உணர்த்தியதுங் கூறினமை காண்க.

குண்டனாய்ச் சமணரோடே கூடிநான் கொண்டமாலைத்
துண்டனே.........
தட்டிடுஞ் சமணரோடே தருக்கிநான் றவமென்றெண்ணி
யொட்டிடு மனத்தினீரே.........
திருந்தா வமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்.........
தக்கார்வ மெய்திச் சமண்டவிர்ந் துன்றன் சரண்புகுந்தேன்.
குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா
மிண்ட ரோடெனை வேறு படுத்துய்யக்
கொண்ட நாதன்.........
குண்டு பட்டகுற் றந்தவிர்த் தென்னையாட்
கொண்டு நற்றிறங் காட்டிய கூத்தனே.
ஏவ மேதுமி லாவம ணேதலர்
பாவகாரிகள் சொல்வலைப் பட்டுநான்
றேவ தேவன் றிறநெறி யாகிய

பூவனூர்புகு தப்பெற்ற நாளின்றே.

குறியி னின்றுண்டு கூறையி லாச்சமண்
நெறியை விட்டு நிறைகழல் பற்றினேன்.

உரங்கொடுக்கு மிருண்மெய்யர் மூர்க்கர் பொல்லா
   வூத்தைவாய்ச் சமணர்தமை யுறவாக் கொண்ட
பரங்கெடுத்திங் கடியேனை யாண்டு கொண்ட
   பவளத்தின் றிரள்தூணே.

ஊனிகந்தூ ணுறிகையார் குண்டர் பொல்லா
   வூத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகஞ் சேர்த்துள்ள வயிரத்தை நண்ணு
   நாயேனைப் பொருளாக வாண்டு கொண்ட.

எண்ணில்சமண் தீர்த்தென்னை யாட்கொண்டான் காண்.

குண்டரொடு பிரித்தெனையாட் கொண்டார் போலும்.

எத்திக்கு மாய்நின்ற விறைவன் றன்னை
   யேகம்ப மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
   புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
   பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துளே யூறுந் தேனைச்
   செங்காட்டங் குடியதனிற் கண்டே னனே.

தம்முடைய நுகர்ச்சியின் பயனைப் பிறர் அறிந்து உய்யவேண்டுமென்னுங் கருணையினாலே சமணர் சாக்கியர் முதலியோரது உரைவழி நிற்றல் அடாதென்பதைப் பல இடங்களில் நாயனார் போதித்துள்ளார்.

குண்டரே சமணர் புத்தர் குறியறி யாதுநின்று
கண்டதே கருதுவார்கள் கருத்தெண்ணு தொழிமி னீர்கள்.

இடுவா ரிட்ட கவளங் கவர்ந்திரு
கடுவா யிட்டவர் கட்டுரை கொள்ளாதே.

பொய்யெலா முரைக்குஞ் சமண் சாக்கியக்
கையன் மாருரை கேளா தொழிமினே.

மெய்யில் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்குடன் வீடன்மின்.

மனை துறந்த வல்லமணர் தங்கள் பொய்யு
மாண்புரைக்கு மனக்குண்டர் தங்கள் பொய்யுஞ்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யு
மெய்யென்று கருதாதே போது நெஞ்சே.

திருவீரட்டானம் ஏழைத் திருத்தாண்டகத்தின்கண் தாம் பண்டு கடவுளை இகழ்ந்ததாக ஒவ்வொரு திருப்பாட்டின் இறுதியிலும் குறிக்கப்பட்டிருக்கிறது. சமண சமயஞ் சேர்ந்தமை அதன் ஏ, அ, கக-ம் பாட்டுக்களிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே 'ஏழையேனான் பண் டிகழ்ந்தவாறே' என்பது இப்பிறப்பைக் குறிக்குமோ முற் பிறப்பைக் குறிக்குமோ தெரியவில்லை. தமது இளமையான காலமெல்லாம் சமண் சமயத்திலே வீணாகக் கழிந்ததைப் பற்றி வருந்துவதைக் குறிக்கும் திருப்பாட்டுகளுள்ளன.

கையெலா நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கால்நிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன
பொய்யெலா மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரா லகப்படா துய்யப் போந்தேன்.

முன்பெலா மிளைய கால மூர்த்தியை நினையா தோடிக்
கண்கண விருமி நாளுங் கருத்தழிந் தருத்த மின்றிப்
பின்பக லுணங்க லட்டும் பேதைமார் போன்றே னுள்ள
மன்பனாய் வாழ மாட்டே னதிகைவீ ரட்ட னாரே.

பல்லுரைச் சமண ரோடே பலபல கால மெல்லாஞ்
சொல்லிய செலவு செய்தேன் சோர்வனா னினைந்த போது.

*அறந்தெரியா வூத்தைவா யறிவில் சிந்தை*
*யாரம்பக் குண்டரோ டயர்த்து நாளு*
*மறந்தும்அரன் றிருவடிக ணினைய மாட்டா*
*மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேற்*
*பிறந்தநா ளுளல்ல வாளா வீசன்*
*பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு*
*செறிந்தெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்*
*செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னனே.*

அப்பர் பெருமான் திருவருள் பெற்ற வரலாற்றினை உற்று நோக்குவார்க்குக் கடவுள் வழிபாடு கூறாத சமயங்கள் பொய்ச் சமயங்களென்பதும், பல கடவுளர் வழிபாட்டினும், தனக்குவமையில்லாத முழுமுதற் கடவுளது வழிபாடே சிறந்ததென்பதும் மலையிலக்காக விளங்கற்பாலதே. அன்றியும், கடவுளுடைய திருவருளின் உதவியின்றி மக்கள் தமது சிற்றறிவினாலே எவ்வளவு முயன்றாலும் அவனை அறியமுடியாதென்பதும், அவனது திருவருள் உதவிய காலத்தே கடவுள் உணர்ச்சி ஏற்படுதலும், அஃது இல்லாத காலத்து அவ்வுணர்ச்சி மாறுதலும் மக்கட்கு இயல்பென்பதும் தெளியப்படும். இக்கருத்துப் பற்றியே சுவாமிகள், 'காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே' என்று திருவாய்மலர்ந்தருளியதூஉமென்க.

உலகத்தில் சமயங்கள் பலதிறத்தன. ஒவ்வொரு சமயவாதிகளனைவரும் தாந்தாம் கண்ட முடிபையே பெரிதாகக் கூறுவார்கள். 'சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்' என்ற மணிவாசகமும் 'தொன்னூற் பரசமயந்தோறும் அது அதுவே, நன்னூலெனத் தெரிந்து நாட்டுவித்து' என்ற கந்தர் கலிவெண்பாப் பகுதியும் இவ்வுண்மையை வற்புறுத்துவன. ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு நிலையிலுள்ள மக்கட்பகுதியார்க்கு ஏற்

புடைத்தாகப் பயன்படும். அவ்வச்சமயக் கொள்கைகளின் உயர்வுதாழ்வுக் கேற்றபடி அவற்றைத் தழுவி ஒழுகும் உயிர்களுக்கு உறுதிப்பயன் எய்தற்பாலது. ஆதலால் ஒரு சமயமும் தள்ளற்பாலதன்று என்னுங் கருத்தை அப்பர் சுவாமிகள் தேவாரத்தில்,

> விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும்

என்றருளிச் செய்தது காண்க. இன்னும்,

> ......ஆறு சமயத் தவரவரைத்
> தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
> ஏற்றுந் தகையன வின்னம்ப ரான்ற னிணையடியே

என்றும்,

> ஆறொன்றிய சமயங்களி னவ்வவர்க் கப்பொருள்கள்
> வேறொன்றிலாதன......

என்றும் வருவன காண்க. இவ்வுண்மை யுணர்ந்தோர் யாதொரு சமயத்தினிடத்தும் பகைமைகொள்ளார். இதனை யறியாமையால் உலகத்திலே சமயப்பகைமை ஏற்பட்டு அதனால் விளைந்த தீங்குகள் பல. அவை சமயத்தைச் சார்ந்தாரது செருக்கினாலும் தப்புணர்ச்சியினாலுமே விளைந்துள்ளன. ஆதலால் சமயப் பொறுமையைப் பழகுதல் நமது கடமையாகும். நமது நாயனாரது சமயவாழ்க்கை அக்கடமையை நன்கு வற்புறுத்துகின்றது. முற்பிறவியிலே அவர் எண்ணரிய தவங்கிடந்தும் இப்பிறப்பிலே கலைகள் யாவுங் கற்றுத் தெளிந்தும் பண்டைத்தவத்தின் ஓர் சிறிது வழுவினமையால் சைவம்விட்டுச் சமணம் புக நேர்ந்தது. இது பின்வருஞ் செய்யுட்கருத்தை நினைவூட்டுகின்றது.

உன்றிரு வடிக்கீ ழூறுதியா மன்பு
 முன்றிரு வருளினற் கிடைப்ப
தன்றிநூல் பலவு மாய்ந்ததா லுரைசெ
 யளப்பருந் திறமையான் மதியான்
மன்றவே கிடைப்ப தன்று.........

(சிவதத்துவவிவேகம்)

இக்காரணத்தால் ஒருவர் பிறந்த சமயங் காரணமாக வாதல் அவர் கொண்ட கொள்கை பற்றியாதல் அவரை இழித்துக் கூறுதலும் பகைத்தலுந் தவறு. ஆனால் சமயக் கொள்கைகளுள் ஒன்று உயர்வு ஒன்று தாழ்வு என்று தமது ஆராச்சியிற் கண்டபடி ஒருவர் கூறுதல் குற்றமாகாது. உலகத்திலே பிறப்பினுடைய உயர்வு தாழ்வுகளைக் கருதாது நல்லொழுக்கங் காரணமாகவே மக்களை மதித்தல் பொருத்த முடையது. அதுபோலவே உயர்ந்த சமயத்திலாதல் தாழ்ந்த சமயத்திலாதல் பிறந்ததினல் மாத்திரம் ஒருவனை இழித்துக் கூருது அவனுடைய ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவனை மதித்தலே சால்புடைத்தாம். உயர்ந்த கொள்கையுடைய சமயத்தில் பிறந்தும் ஒழுக்கத்திற் சிறவாதவன் தாழ்ந்த சமயத்திற் பிறந்து ஒழுக்கத்திற் சிறந்தவனைப் பார்க்கிலும் இழிந்தவனேயாவன். ஒரு சமயத்தில் ஒருவன் பிறக்கவேண்டுமென்று கருதிப் பிறப்பதில்லை. ஆதலால் ஒருவன் பிறந்த சமயத்தின் தாழ்வு அவனுக்கு ஏற்படாது. கடவுளைப் பற்றிய கொள்கைகள் மக்களது அறிவின் அளவில் அடங்குவன வல்லவாதலால் தன் சமயக் கொள்கையை நம்புவதற்காக ஒருவனைக் குற்றங் கூறுதல் கூடாது. தன் சமயக் கொள்கைகளை நன்கு உணர்ந்தபின் பிறிதொரு சமயக் கொள்கைகளை ஆராய்ந்து அவைகள் மிக நல்லவை யென்று கண்ட ஒருவன் தன் சமயத்தை விட்டு அதனுட் புகுதலையும் குறைகூற இடமில்லை. தமது சமயத்தை

நன்கறியாத பலரை ஒரு சிலர் தமது சமயத்திற்கு வலிந்து இழுத்தலும் முன்னவரது சமயக்கொள்கையை அறியாது அன்னோரைப் பழித்தலுமே சமயப் பிணக்கிற்கெல்லாம் அடிப்படையான காரணமாகும்.

பிறசமயத்தைப் பழித்தல் கூடாதென்பது உண்மையேயாயினும் ஒவ்வொரு சமயவாதிகளும் தத்தஞ் சமயத்தைப் பாதுகாக்கும் கடமையு முடையவராவர். ஓர் உயர்ந்த சமயத்தின் உண்மைகளை உணர்ந்தவர், அச்சமயத்திலுள்ள ஏனையோர்க்கு அவற்றைப் போதித்தலும் அவர்கள் பிறசமயத்தாரது பற்றுரைகளால் ஏமாறுவண்ணம் அவர்களைப் பாதுகாத்தலும் செய்வது அவரது விழுமிய நற்பணியேயாகும். உயிர்கள்மேல்வைத்த இரக்கத்தால் இக்கடமை யாற்றும் பெரியோரைச் சமயப்பகை விளைவிப்பவராகக் கருதலாகாது. சைவநாட்டிற் புகுந்து தமது அறிவுரைகளால் சைவராய்ப் பிறந்தாரைத் தஞ் சமயத்தே ஈர்த்த சமணர், புத்தர் முதலாயினோரைச் சைவ சமயத் தலைவர் மறுத்துக்கூறிய அருள்மொழிகள் சைவ சமயத்தாரைப் பாதுகாக்கவும் சமண சமயத்தினரது அற்றைக்காலச் சீர்கேட்டினை வெளிப்படுத்தவும் எழுந்தனவென்றே கருதற்பாலன. அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று ஐம்புலனையும் அடக்கி மெய்ஞ்ஞானத்தால் முழுமுதற்கடவுளை வழிபடும் பெரியோர்க்குச் சமணர், புத்தர் முதலியோரிடம் இரக்கம் நிகழற்பாலதேயன்றிப் பகைமை நிகழக் காரணமில்லை. இஃதறியாதார் சைவசமயப் பெரியோரைச் சமயப்போர் செய்யும் ஒடுங்கிய சிந்தையர் என்று பிழைபடக் கூறுவர். அது பெருந்தவறாகும்.

இனி, புறச்சமயத்தினின்று சைவசமயத்துட் புகக் கருதுவாரைச் சைவசமயத்தார் அன்போடு ஏற்று அவர்களை முறைப்படி திருநீறு அணிவித்துச் சமய உரிமைகள்

யாவற்றையும் அவர்க்களித்தலே தக்கதென்க. அது நமது நாயனரை அவர் தமக்கையார் ஐந்தெழுத்தோதித் திருநீறணிவித்துத் திருக்கோயிலுள் அழைத்துச் சென்றமையால் நன்கு காட்டப்பட்டதாகும். ஆதலால் புறச்சமயத்தினின்று நம் சமயத்திற்கு வருவாரை நமது சமய உரிமைகளைப் பெறவொட்டாமற் றடைசெய்தல் இரக்கமற்ற செய்கையென்பதும், அது நமது சைவ சமயப் பெருந்தலைவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனரது வரலாற்றுண்மையை மறுக்கும் குற்றம் வாய்ந்ததென்பதும் யாவரும் உணரக்கிடப்பனவாகும். தற்காலத்திலே கிறித்துவ மத முதலிய ஏனைச்சமயங்கட்குச் சென்று மனந்திரும்பி மீளும் நம்மவரை நாம் நம்மோடு சேர்த்துக் கொள்ளுதலே விரும்பற்பாலதாகும். கொலையும் புலையுங் கடிந்து ஐந்தெழுத்து உபதேசம் பெறக்கருதும் அத்தகையார்க்கு யாதொரு இடையூறும் விளைத்தல் கூடாது. குலத்தினும் ஒழுக்கமே சிறப்புடையதாகலானும், உடம்பைப்பற்றிய சாதியினும் உயிரைப்பற்றிய சமயமே சிறந்ததாகலானும் பிறசமயங்களினின்று நமது சமயத்தைக் கைப்பற்றுங் கருத்துடையாரைச் சாதி குல முதலியவற்ருல் தாழ்ந்தவரென்று இகழ்ந்து அவர்கட்கு நமது சமய உரிமைகளைக் கொடாது மறுத்தல் தவறென்பதை நம்மவர்கள் உய்த்துணரவேண்டும். இதற்கு மேற்கூறியபடி நமது அப்பர் பெருமானது சமய வாழ்க்கையே நமக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகப் பயன்படுதல் காண்க.

## ச. சமணர் தீமைகளும் நாயனர் அருள் வெற்றியும்

நமது நாயனர் சிவநெறிக்கு மீண்டு இறைவரது பேரருள் பெற்றுச் சூலே நீங்கிய செய்தியைப் பாடலீ புத்திர நகரிலுள்ள சமணர்கள் கேள்விப்பட்டுத் தங்கள் சமயப் பெருமை தொலேந்ததே யென்று கவலேயுற்று மயங்கினர். எவ்வாற்ருனும் தமது சமயத்தைப் பெரிதாக உலகில் நாட்டவேண்டுமென்ற கருத்தால் அவர்கள் இரக்கமற்ற பொய்ச் சூழ்ச்சிகளே மேற்கொள்வாராயினர். அவர்கள் யாவரும் ஒருங்குகூடிப் பல்லவ மன்னனிடஞ் சென்று தருமசேனர் சூலே நோயால் வருந்தியதாகவும் அது தீர்ந்திலதெனவும் நடித்துச் சைவசமயம் புகுந்து 'சடையானுக் காளாய்நின் சமயம் அழித்தார்' என்ருர். உடனே அரசன் வெகுண்டெழுந்து இதற்கு என் செயற்பாலது என்று அவரை விஞவினன். நினது சமயத்தை அழித்தவனே வருத்தி ஒறுக்கவேண்டுமென்று அவர்கள் அஞ்சாது பதிலுரைத்தார்கள். அரசனும் உண்மை உணரும் நல்லறிவின்றி அவர்கள் வஞ்சனேயால் மயங்கித் தன் மந்திரிகளே நோக்கித் தண்டனே விதித்தற்பொருட்டு நாயனரைத் தன்முன் அழைத்துவரும்படி பணித்தான். அவர்களுஞ் சேனேயோடு திருவதிகைக்குச் சென்று நாயனரைக் கண்டு 'உம்மை அரசன் அழைக்கும்படி எம்மை விடுத்தான்; போதுக' என்று சொல்லவும் சுவாமிகள் "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற முதற் குறிப்பையுடைய திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடியருளி அரசன் தம்மை அழைத்தற்குரிய பொருத்தம் யாது மில்லேயென்று மறுமொழி கூறினர். அவர்கள் அவரை அடிவணங்கி அழைத்துக் கொண்டுபோய்ப் பல்லவனுக்கு அவர் வந்த செய்தி தெரி

வித்தார்கள். அரசன் அமண் முனிவர்களை நோக்கி அவரை என்செய்யவேண்டுமென்று கேட்டான். நிலை தவறிய அப்புல்லறிவாளர் அவரை நீற்றறையில் விடுகவென்றார்கள். அவனும் அவ்வாறே ஏவலாளர்க்குக் கட்டளையிட, அவர்கள் பெருந்தகையாரை வெம்மைமிக்க நீற்றறையினுள்ளே அடைத்துத் தாழிட்டுக் காவல் வைத்தனர்.

திருநாவுக்கரசு நாயனார் பொன்னம்பலவரது தண்ணிய தாள்களைத் தலைமேற்கொண்டு அப்பெருமானையே தொழுதிருந்தமையால் அந்த நீற்றறையானது இளவேனிற் பருவத்திலே, மாலைக்காலப்போதிலே குளிர்ந்த தென்றல் வீசுகின்றதாய், செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து விளங்குவதாய் மாலைக்கால நிலாவும் வண்டின்னொலியும் இனிமை பயப்பதாயுள்ள தண்பொய்கைக் கரைபோல நன்கு குளிர்ந்திருந்தது. எல்லாம் இறைவனுடைய திருவடி நீழலாகக் கருதியே நாயனார் யாதொரு இடையூறுமின்றி அவண் ஏழுநாள் வீற்றிருந்தார். இது பெருமானது தேவாரத் திருவாக்கால் இனிது விளங்கும்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே.

பின்னர் அரசன் அமணரை யழைத்து நீற்றறையைப் பார்க்கச் சொன்னான். அங்கே சுவாமிகளுக்கு யாதொரு ஊனமுமில்லாமை கண்டு அவர்கள் மிக்க வியப்பெய்தினார்கள். எனினும், ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி நாயனார் பிழைத்தது அவர் சமணசமயந் தழுவி நின்ற காலை தான் பயின்ற மந்திரவலியாலும் அச்சமயத்திற்கு வாய்த்த விழுமியதோர் ஆற்றலாலுமே யன்றிப் பிறிதொன்றானுமன்று என்று கருதிய அமணர்கள் அவர்

பிழைத்திருந்தால் தங்கள் சமண சமயம் நிலைபெருது என்று நினைத்துக் கொடிய நஞ்சுகலந்த உணவை ஊட்ட வேண்டுமென்ருர்கள்.

அதிசயமன் றிதுமுன்னே யமண் சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தா னெனவேந்தற் குரைசெய்து
மதிசெய்யா தினிக்கொடிய வல்விடமூட் டுவதென்று
முதிரவரும் பாதகத்தோர் முடைவாயான் மொழிந்தார்கள்.

(செ. ௱௨)

அவ்வாறு நஞ்சுகலந்த பாலை உண்பிக்கவும் நஞ்சுண்ட கண்டற் கடியாராகிய நமது நாயனுர் அந்த நஞ்சுணவைத் தமக்கு அமுதமாகப் பெற்று அருந்தினர்.

வஞ்சனைபாற் சோருக்கி வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே.

இதனுலும் தங்கருத்து வாய்க்கப்பெருத சமணர் இனி இவன் பிழைத்தால் தமது உயிரும் அரச நீதியும் அழிந்துபோகு மென்ருர்கள். பின்னர் மதங்கொண்ட யானையை அவர்மேல் ஏவினுர்கள்.

அப்போது அம்மதக் களிருனது தான் நின்ற கூடத்தைக் கொம்பினுற் குத்தி மத அருவிபாயும் ஒரு மலை போலப் புறப்பட்டு மாளிகைகளையும் மண்டபங்களையும் தாக்கி யழித்துத் தனக்கு முன்னே செல்லும் குத்துக் கோற்காரர்களுடைய தலைகளையிடறிக் காலிற் பூட்டியிருக்கும் கயிறும் சங்கிலிகளும் அறுத்தெறிந்து கட்டுத் தறிகளை முறித்து மேலே பறக்கின்ற பறவைகள் அஞ்சும் படி துதிக்கையினைச் சுற்றிக்கொண்டு குதிரைகள் கண்டு கலங்கி யிறக்கவும், ஊழித் தீக்கொப்பான வேகத்தோடு பூமியதிரவும், மதில்களும் திண்ணைகளும் சரியும் படியாகவும் நடந்து சென்றது. அவ்வாறு சீற்றத்தோடு செல்லும் யானையானது நாவுக்கரசரை எதிர்நோக்கி யணு

கும்போது, நாயனார் விண்ணவர் பெருமானைத் தொழுது 'அஞ்சுவது யாதொன்றுமில்லை யஞ்ச வருவதுமில்லை' யென்ற ஈற்றடியை யுடைய பாடல்கள் அமைந்த திருப்பதிகத்தை அருளிச் செய்யவும், அம்மதக்களிறுனது அவரை வலம் வந்து எதிர்தாழ்ந் திறைஞ்சி நின்று பெயர்ந்தது. பெயரலும் யானைப் பாகர்கள் அதனை மீண்டும் நாயனாரை இடறும்படி வற்புறுத்தி உந்தினமையால் அது சீற்றங்கொண்டு, அப்பாகர்களையும் அமணர்களையுமே மிதித்துப் பிளந்து கொன்று அரசனது ஊர் முழுவதையுங் கலக்கிற்று.

தப்பிப் பிழைத்த அமண்கையர் அரசனோடு பின்னும் சூழ்ந்து கல்லினிலே நாயனாரைப் பிணித்துக் கடலினிடை பாய்ச்சத் தலைப்பட்டனர். அரசனது வெவ்வினையாளர் சுவாமிகளைக் கற்றூண் ஒன்றிற் பிணித்துப் படகேற்றிக் கொண்டுபோய் நடுக்கடலில் தாழ்த்தனர். ஆயகாலை 'சொற்றுணை வேதியன்' என்னும் முதற்குறிப்புடைய திருவைந்தெழுத்துத் திருப்பதிகத்தை ஓதவும், கல் மிதந்து தெப்பமாகிச் சுவாமிகளைத் தாங்கிச் சென்றது. இருவினைக் கயிற்றினால், ஆணவமலமென்னும் கல்லினோடு கட்டுப்பட்டுப் பிறவிப் பெருங்கடல் வீழ்ந்திருப்பவர் வீடாகிய கரைக்கண் ஏறி உய்ந்திடுமாறு அருளவல்ல 'அஞ்செழுத்தை விடாது பற்றிய திருநாவுக்கரசரை, இந்நீர்க்கடலில் ஒரு கல்லிற் பிணித்தகாலை, அவர் உய்வது திண்ணமென்பது கூறவும் வேண்டுமோ?

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ

(செ. கஉக)

என்றது காண்க.

அலைகள்மீது நாயனரை ஏந்திச்செல்லும் கல்லானது அவரைத் திருப்பாதிரிப்புலியூர் என்னும் சிவதலத்தின் பாங்கர் எழுந்தருளுவித்தது.

அப்போது அப்பதியிலுள்ளார் எல்லோரும் அளவில்லாத ஆர்வத்தோடு ஆளுடைய அரசரைத் தொழுது சிவநாமங்களை முழக்கினர். அவரும் திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமான்மீது 'ஈன்றாளுமாய்' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடித் துதித்தனர்.

பின்னர்த் திருவீரட்டான முதல்வரை வணங்குங் காதலோடு திருமாணிகுழி, திருத்தினைநகர் என்னும் தலங்களை வணங்கிப் பாடிச்சென்று திருக்கெடில நதியைக் கடந்தார். அப்போது திருவதிகைப் பதியுளார் யாவரும் மங்கலவாத்தியங்கள் முழங்க, எங்கும் தோரணமும் பூமாலைகளுந் தூக்கி ஊரினை அணிபெறச் செய்து ஊர்ப்புறஞ் சென்று அருட்பெருந்தகையாரை வரவேற்றனர். சுவாமிகளது அருள் ஞானப் பொலிவு மிக்க திருவடிவத்தைக் கண்ட யாவரும் திருவருளை வியந்து மெய்விதிர் விதிர்த்துக் கை தலைமேற் குவித்து அவரைத் தொழுது துதித்தனர். நாயனர் அவ்வடியார் குழாத்தோடு திருவீரட்டானத்திலே வீற்றிருக்கும் பெருமானை ஏழைத் திருத்தாண்டகம் பாடித் தொழுது அந்நகரில் திருத்தொண்டு செய்து வாழ்ந்திருந்தார். அப்போது அவரது பெருநிலையையுணர்ந்த பல்லவன் அவர்பாற் சென்று அவர் திருவடியிற் சரணம் புகுந்து சமணத்தை நீத்துச் சைவ நெறியினை மேற்கொண்டு திருவதிகை மாநகரின்கண் சிவபெருமானுக்குச் சமணரது கோயில்களையும் மடங்களையும் இடித்துக் கொணர்ந்த பொருளைக் கொண்டு குணதரவீச்சரம் என்னும் திருக்கோயில் எடுப்பித்தான்.

இச்சரித்திரப் பகுதியினலே சமண சமயம் அக்காலத்திலடைந்திருந்த இழிவு நிலை தெளிவாகின்றது. கடவு

ளில்லாச் சமயங்கள் நல்லொழுக்கத்தைச் சிறப்பாக எடுத்துப் பாராட்டினாலும் இடர் வந்தகாலை அம் மதத்தினர் அந் நல்லொழுக்கத்தை நழுவ விடுவர் என்பதும் இதனாற் புலனாகும். பாடலிபுரத்திலிருந்த அக் காலத்துச் சமண முனிவர்கள் தங்கள் சமயம் அரசராலே போற்றப்பட வேண்டுமென்றும் மற்றைச் சமயங்களை வென்ற புகழ் அதற்கு நிலைத்திருக்க வேண்டுமென்றும் கருதினரே யொழியத் தங்கள் சமயத்துட் கூறப்பட்ட அருளொழுக்கத்தைப் போற்ற வேண்டுமென்று கருதவில்லை. இஃது அச் சமயத்தினரது மிக்க இழிந்த நிலையினைக் காட்டுவதாகும். விளக்கு வைத்தால் அதில் விட்டில் விழும் என்று மாலைக் காலத்து உண்டும், தரையிலுள்ள சிற்றுயிர்கள் காலினால் மிதிபட்டு இறத்தல் கூடுமென்று பீலிகொண்டு பெருக்கியும், உடையில் ஊர்வன ஏறிச் சாமென்று பாயுடுத்தும், உறியில் வாழ்ந்தும் இன்னும் பல்வகை உபாயங்கள் செய்தும் கட்புலனாகாத சிற்றுயிர்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற கொள்கையுடைய சமண முனிவர்கள் மக்களுட் டலைநின்ற அப்பமூர்த்திகளை நீற்றறையில் அடைத்தல், நஞ்சுண்பித்தல், மதயானையால் இடறச் செய்தல், கல்விற் கட்டிக் கடலி விடல் என்னும் பெரும் பாதகச் செயல்களைச் செய்யத் துணிந்தமைக்குக் காரணம் அவர்கள் தம் சமயக் கொள்கையை அறவே கைவிட்டுச் சமயச் செருக்கினால் விழுங்கப்பட்டுப் பித்துக்கொண்ட விலங்கின் நிலையை எய்தினமைதான். அரசனிடத்தில் நாயனாருக்குச் சூலை நோய் உண்மையில் நேரவில்லையென்று பொய் சொல்லுவதற்கும் அஞ்சாதவர்களாய் அரசனிடம் புறங்கூறிப் பேரிடுக்கண் விளைத்த சமணரை ஒரு சிறிது வெகுண்டாயினும் நமது நாயனார் யாதும் கூறவில்லை. அஃது அவர் சிவபெருமானுடைய திருவருள் வயமாகவே தமது அறிவு, இச்சை, செயல்களை முற்றிலும்

வைத்து மகிழும் பேறு பெற்றமையா லன்றோ? கடவுள் உண்டென்று ஒரு சிறிதேனும் நம்பாத சமணர் கொலையையும் பொய்ம்மையையும் மேற்கொண்டதும் திருவருட்கு அவர்கள் முற்றிலும் புறம்பானமையா லன்றோ?

உயிர்களிடத்துக் கருணை வேண்டுமென்பதற்குத் தக்க காரணத்தைச் சமணர் அறிந்தாரில்லை. தீவினைகளைச் செய்தால் அவற்றின் பயனாகிய கெடுதி நமக்கு இயல்பாகவே வரும். வினைப்பயனை ஊட்டுவதற்கு ஓர் முதல்வன் வேண்டுவதில்லை என்ற கருத்தே சமண சமயத்தின் தலைமைக் கொள்கையாதலால் அச்சமயம் நல்லொழுக்கத்தை நிலைநிறுத்தும் ஆற்றலில்லாமற் கெட்டொழிந்தது. அசேதனமாகிய வினைப்பயன் தம்மை வந்தடையாது என்ற உணர்ச்சியே அச்சமயத்தினர் உள்ளத்தில் நிலைபெற்றது. அதுவே அவர்கள் அருளொழுக்கத்தினின்று வழுவியதற்குக் காரணமாகும். தப்புணர்ச்சியினாலேயும், வெகுளி, செருக்கு, அறியாமை முதலிய காரணங்களாலும் ஒருவன் தீமைசெய்யப் புகுங்கால் அவனைத் தடைசெய்து நிற்பது கடவுட் கொள்கையேயாகும். அரச தண்டனையை நீக்கிக் கொள்ளலாம் என்ற உறுதியுடையோர்க்கு இதுவே தக்க தடையாகும். இஃதில்வழி தீமையினின்றும் அவரை விலக்க முடியாது. நமது நாயனாருக்குத் தீங்கிழைத்த சமணமுனிவர் பொய் கூறி அரசனைத் தங்கள்பால் ஈர்த்துக்கொண்டமையாலும், அரசனது சமயமும் தங்கள் மதமேயாகலானும், மக்கள் கூட்டத்தில் தாங்கள் பிறசமயத்தாரது இகழ்ச்சியைப் பொருட்படுத்தாமையானும், தம் சமயத்தார் தம்மைக் குறைகூறாராகலானும், தாங்கள் கொண்ட மதமே, எவ்வாற்றானும் அதன் உயிர்க்கொள்கையை இழந்தாவது, நிலைபெற வேண்டுமென்ற தப்பெண்ணத்திற்கு அவர்கள் அடிமையாயினராகலானும், எல்லாத் தீமைகளையுந் தடுக்க

வல்ல கடவுட் கொள்கையை அவர் கைவிட்டமையானும், அவர்கள் மனங் கருங்கற்றன்மை எய்திக் கொடுவஞ்சனைச் செயல்களில் தலைநின்றது.

அக்காலத்து வதிந்த சமண முனிவர்கள் இரக்கமென் பதைப் பழகினார்களோ, பழகவில்லையோ யாமறியோம்; அதனைப் பழகியிருந்தால் விரைவில் அவர்கள் மனம் கொடுந் தொழிற்குத் துணிந்தது வியப்பைத் தருவதாகும். அன்றியும் எத்துணைக்காலம் எத்துணை உறுதியாக நல்ல வழியிற் செல்ல உயிர் பயின்றாலும் அதனை அநாதியே பற்றி வருகின்ற அறியாமை காரணமாக விரைவில் அது மாற்றமடைந்து தவறுமியல்பிற்று என்பதும், கடவுளிடத்து அச்சம் அன்பு ஒழிந்தகாலத்து அங்ஙனம் தவறுதல் மிக்க எளிதாமென்பதும் இச்சமணர் செய்கையால் நிலைநாட்டப் பட்டதென்று கோடல் அமையும். அவ்வாறன்றி இவர்கள் தம் சமயத்துட் குறித்த வெளி விரதங்களையும் அடையாளங்களையும் கைப்பற்றி உண்மையாகிய அருளொழுக்கத்தைக் கைவிட்டுச் சமயச் செருக்கு மாத்திரம் உடையராய் இருந்திருத்தல் கூடும். அங்ஙனம் ஒரு சமயத்தின் உயிர்க்கொள்கையை மறந்து உயிரற்ற உடலைப் புனைவதுபோல அதன் வெளிக்குறிகளை மாத்திரம் கைப்பற்றும் நெறியினர் யாவருஞ் சமயச் செருக்கால் கவரப்பட்டுச் சமயப் போர்க்குக் கொடிகட்டத் தலைப் படுதல் இயல்பு. ஆதலால் ஒவ்வொரு சமயத்தவரும் தமது சமயத்தின் உயிர்ப் பகுதி யாது? உடற்பகுதி யாது? என்றறிந்து இரண்டையுமாதல் உயிர்ப்பகுதியையாதல் கடைப்பிடிக்க வேண்டுமேயொழிய உடற் பகுதியை மாத்திரம் பற்றி நின்று சமயச் செருக்குக் கொண்டு ஏனைச் சமயத்தாரோடு பிணங்க முயல்வார்களானால் சமயத்தின் உண்மைப்பயனை இழத்தலோடு எல்லா மக்கட்கும் பொதுவாகிய அறவொழுக்கத்தையும்

கைவிட்டவராவார். இதற்குச் சான்ருவார் திருநாவுக்கர சரை வருத்திய பொல்லாத சமணர்களே.

நமது சுவாமிகட்குக் கேடு நினைத்தவர்கள் அவர்க்கு வாள் முதலிய ஆயுதங்களால் ஊறு செய்விக்கக் கருதாமல் நீற்றறையிடுதல் முதலிய சூழ்ச்சிகளை மேற்கொண்டதற்குக் காரணம் யாதோ நன்கு விளங்கவில்லை. ஆயுதம் முதலியவற்றைப் பயன் படுத்துதல் தங்கள் சமயக் கொள்கைக்குத் தோற்றத்தளவில் முரண்படுமெனக் கருதியோ, அல்லது அதனுல் வருமிடரினும் கடுமையான பெருந் துன்பத்தை விளைக்கத் துணிந்தோ யாமறிகிலம். நேரே ஆயுதத்தால் ஊறுபடுத்தாமல் சுவாமிகள் தாமே துன்பமிகுதியால் உயிர்விடச் செய்யக் கருதுவது, நேரே செய்யுங் கொலையாகாது என்ற போலிக் கொள்கையாகும். இங்ஙனம் போலிக் கொள்கையைப் பற்றிக்கொள்ளுதல் சமய வரம்பு கடந்து செல்லும் தீயோரது வழக்கமாகும்.

இஃதன்றியும் அவர்கள் நமது நாயனுருக்குச் செய்த பெருந்தீமைகள் பெருந்துன்பத்தையே யன்றிச் சாவினையும் விளைக்குந் தன்மையனவாகவே இருந்தன. இஃது அவர்களது அளவற்ற வன்கண்மையையும் புலப்படுத்துகின்றது. யார் எக்கெடுதி செய்ய முயன்ருலும் இறைவனது மெய்யன்பருக்கு அவற்ருல் வரக்கடவன யாது மில்லையென்பதைத் திருவருட் பெருந்தகையாராகிய அப்பமூர்த்திகள் தமது அருஞ்செயல் வாழ்க்கையாலும் அருமைத் திருவாக்காலும் உலகத்தில் நிலைநாட்டினர். ஈசனடியார்க்கு ஓர் இடையூறும் விளையாதென்பதைப் பின்வரும் அவரது தேவாரத் திருப்பாட்டாற் காண்க.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே.

நீற்றறையில் இடப்பட்டும் நமது நாயனருக்கு யாதொரு இடையூறு மில்லாமை கண்டபின்னும் மீட்டும் அவரைச் சமணர்கள் வருத்த முயன்றமை 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்ற பழமொழியின் பொருளை விளக்குகின்றது. இவ்வாறே திருஞானசம்பந்தப் பெருமானோடு வாதுசெய்த சமணர் தம்மால் கூன்பாண்டியனது பிணி தீர்க்க முடியாமையும், அனலில் தமது மந்திர ஏட்டினைப் பழுது படாது பாதுகாக்க முடியாமையும் கண்டபின்னும் சம்பந்த மூர்த்திகளைப் புனல்வாதுக் கழைத்தார்கள். இதனால் தெரிவது யாதெனில் ஒரு பொருட்கண் அளவிற்கு மிஞ்சிய ஆத்திரமுடையவர்கள் தமது அறிவு இழந்து நிற்பர் என்பதே. பகைவனைக் கொலைசெய்ய முயலும் ஒருவன் தனது தீயமுயற்சி பலமுறை தவறினும் கொல்ல முயன்று கொல்லாது பின்னிடைதல் தனக்கு அவமானமென்ற தப்பெண்ணம் பிடர் பிடித்து உந்தக் கொலையுண்பான் உயிரிழக்கும் வரை விடாமுயற்சி செய்தல் அவனது செருக்குமிக்க வன்கண்மையின் செயலாகும். அவ்வாறே நமது நாயனரை வருத்த முயன்ற சமணரும் அவர்க்குத் தீங்கிழைத்தலில் விடா முயற்சி ஆற்றிப் பெரும்பழி சுமந்தனர். ஆனால் அவர்கள் எப்படிக் கொலைத் தொழிலில் உறுதியுற்று நின்றார்களோ அவ்வளவு இவர் இறைவனது திருவடியின்கண் மறவாத அன்பினிற் றலைநின்றார். தன் செயலற்றுத் தானற்று முதல்வன் இணையடிகளில் ஏகமாய் நின்றே தமது முற்செய் வினைக்கு ஈடாக வரும் செய்திகளை நாயனர் உணர்ந்தமையால் அவர்க்கு நேர்ந்த பேரிடையூறுகள் யாவும் சிவபோகமாகவே விளைந்தன. ஆதலினாற்றான் வெம்மை மிக்க நீற்றறையானது ஈசன் இணையடி நிழலாய் இன்பந் தந்தது. இதைக் 'காணுங் காரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணும் அடியார்' ஆகிய சிவஞானிகட்கே

இயல்வதல்லது ஏனையோர்க்காவதன்று. சமயத் தலைவருட் சிலர் இடுக்கண் நிகழ்ந்தகாலை வருத்தமுற்றனர். இந்நாட்டிலும் பிறநாட்டிலும் மதங்களை நிலைநாட்டிய பேராசிரியருட் சிலர் பகைஞரால் விளையக்கூடிய துன்பத்திற்கு அஞ்சி ஓடினரெனவும் சரித்திரங் கூறுகின்றது. நமது நாயனார் அவ்வாறு செய்யாது எத்தீங்கினையும் நன்மையாகப்பெற்று யாதொரு ஊனமுமில்லாது திகழ்ந்தனர். இவரது ஒப்பற்ற உயர்நிலை உலக சரித்திரத்திலேயே யாண்டுங் காண்டலரிது.

நன்கு துயில்கின்ற ஒருவனைத் தட்டி எழுப்பினும் அவன் சில வேளை உடனே எழாமலிருப்பதற்குக் காரணம் தட்டியதைத் தான் உணராமையேயாகும். மேலைத் தேசத்திலே கணித நூலகத்தே தன் கவனம் முழுவதும் செலுத்திய ஒரு புலவன் தன் ஊரிலே பகைஞர் படையெடுத்து வந்ததையும் அவர்கள் தன்னைச் சூழ்ந்தமையும் உணராதிருந்தானென்று கேள்விப்படுகிறோம். நனவிலேயும் சுழுத்தியிலேயும் உணர்ச்சியற்ற நிலை எய்துதல் எளிதாயின் அவற்றிற்கும் அப்பாற்பட்ட துரியநிலை கடந்து அதீதத் தன்மையுற்றுச் சிவபோகத் தேன் பருகுதலிலேயே ஆழ்ந்த சிந்தை யுடையார் தமது வெளியுடம்பிற்கு வரும் இடையூறுகளைச் சிறிது முணராமை வியப்பன்று.

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.

(சிவஞானசித்தியார்சுபக்கம் கக-ம் சூத்திரம்.)

என்றது காண்க.

இக்காரணத்தால் நமது நாயனார் தமது திருமேனிக்கு நேர்ந்த துன்பங்கள் ஒன்றையும் உணர்ந்திலர். நெருப்பினைத் தின்னும் தித்திரிக்கு அதற்குத் தகுந்த உடம்பையும் பாம்பின் நஞ்சினால் கேடுறாத மயிலுக்கு அதற்கேற்ற மேனியையும் உதவிய திருவருட்சத்திதானே தனது வயமாயுள்ள திருநாவுக்கரசரது திருமேனிக்கு அத்தகைய தன்மைகளை வேண்டியபோது நல்கி அனலாலும் நஞ்சினாலும் யாதொரு கெடுதியுமில்லாமல் பாதுகாத்தமை ஓர் வியப்பாமோ? அவ்வாறே கல்லும் மெல்லியதாய் மிதந்தமையுமாமன்றோ?

நல்லோரது திருக்கடைக்கண் காட்சியினால் இயற்கையாற் கொடியவர்க்கு நன்மனம் எய்துதல் எளிது. யோகிகளையும் முனிவர்களையும் கண்டு புலி, பாம்பு முதலிய பிராணிகள் மென்மைத் தன்மையடைந்து அவர்களுக்கு ஊறுசெய்யாமை கேட்டுள்ளோம். அதற்குக் காரணம் அவர்களது நற்காட்சியின் வலியால் கொடிய பிராணிகளும் தம் இயற்கை மாறுகின்றமையே. ஆதலின் கொல்லவந்த மதக்களிறும் நாயனாரைக் கண்டவளவில் அவரை நனி தாழ்ந்து இறைஞ்சும் தன்மை எய்திற்று. தூங்குகிறவனை எழுப்பலாமே ஒழிய, தூங்காது கண்ணினை மூடிக்கொண்டு எவ்வாறு எழுப்பினும் எழுந்திருக்கக் கூடாதென்ற வயிரமுடைய ஒருவனை எழுப்புதல் அரிது. அதுபோல் இயற்கையினாலன்றிச் செய்கையினாலேயும் வன்மை மேற்கொண்ட சமணர் சுவாமிகளது திருவருட் காட்சியால் மென்மையடையப் பெற்றிலர்.

ஓருயிர் பல உடம்புகளை எடுக்கும்போதெல்லாம் அதன் நுண்ணுடம்பு அதனோடு உடன்சென்று எடுக்கும் வெவ்வேறு உடம்புகளுக்கேற்றவாறு அச்சுமாறியே பிறக்கின்றது. மயிலொன்று முதற்கண் பாம்பைக்

கொன்ருல் அப்பாம்புதானே மயிலாகப் பிறக்க மயிலே பாம்பாகவும் பிறந்து கொலையுண்ணவும் நேருமென்று பெரியோர் கூறுகின்றனர்.

> எனைத்தினு வுயிர்களு மில்லை யானவை
> தமைத்தினு தொழிந்தது மில்லை.
>
> (திருக்கழுமல மும்மணிக்கோவை)

அங்ஙனம் உருமாறி உடம்பெடுக்கும்பொழுது நுண்ணுடம்பே பலவகைப்பட்ட தன்மை அடைகின்றது. ஆதலால் மனத்தின் வலியினுல் ஒன்று மற்ருென்ருக மாறுதலுங் கூடும். ஒருவனது உணர்ச்சியின்கீழ் தன்னுணர்ச்சி அடங்கப்பெற்ற மற்ருெருவனுக்கு முன்னவன் குறிப்பிக்கின்ற சுவைகள் அவ்வாறே தோன்றுதல் 'மெஸ்மெரிஸம்' (Mesmerism) என்னும் மனமுயற்சியால் தெளிவாக விளங்கும். மாங்காய் புளிக்கின்றதென்று ஆள்பவன் கூறினுல் வயப்பட்டோனும் அவ்வாறே தானும் உணர்வதாகக் கூறுகின்ருன். அந்தப் பொருளே இனிப்பதாக முன்னவன் கூறினுல் பின்னவனும் அவ்வாறே உணர்கின்ருன். உடம்பு மாற்றமின்றியே வயப்பட்டோனுக்கு இந் நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. யோக முதலியவற்ருல் மூச்சுக்கட்டு, அனற்கட்டு முதலியன பழகி மேலே கிளம்பவும் அனலில் நிற்கவுஞ் செய்ய வல்லவர்களது உடம்பிற்கு அவற்ருல் யாதொரு ஊறுமின்மை காணப்படுகின்றது. ஆதலால் ஒரே உடம்பு தானே மனநிலை காரணமாகவும் திருவருள் இயக்கத்தாலும் மாறிய பல இயல்புகள் எய்துதல் முடியாத தொன்றன்று. மக்களுடம்பே மயிலுடம்பின் றன்மையையும் தீத்திரி (Ostrich) யுடம்பின் றன்மையையும் அடைதல் கூடும். இவற்றை நுணுகி ஆராய வல்லார்க்கு நமது நாயனரது திருமேனியானது சமணர்களது இடுக்கண்களால் இட

ரெய்தாமைக்குக் காரணம் நன்கு புலனாகும். தமக்கு யாதோர் இடையூறும் நிகழாமையை நன்குணர்ந்தாராத லின் பகைஞர்களை வெஞ்சொற் கூறவாதல் மனங்கலங்க வாதல் சிறிதுமில்லாது, குணமென்னுங் குன்றேறி நின்றும் வெகுளி கணமேயும் பொருந்தாது ஈசனடியார்க்கு எந் நாளுமின்பமே என்ற அரிய உண்மையை நிலை நாட்டிய நமது நாயனாரது பெருஞ் சால்பினைப் பிறமுனிவர்கள் வரலாற்றிற் காண்பது அரிது! அரிது!!

அப்பர் சுவாமிகள் திருவதிகைக்குக் கடலினின்று கரையேறிச் சென்ற காலை அவணுள்ள அடியார் குழாங் களுக்கு அவரது கவின்மிகு வடிவம் இவ்வாறிருந்ததெனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கி எடுத்த திருப்பாட்டினையே சிவனன்பரது திருவேடத்திற்கு எடுத்துக்காட்டாக ஆசிரி யர் சிவஞான யோகிகள் சிவஞானபோதப் பன்னிரண்டாஞ் சூத்திர பாடியத்துள் அமைத்துள்ளார்.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

(செ. கசං)

இச் செய்யுளில் சுவாமிகளது மனம், மொழி, மெய் மூன் றும் சிவனடிப் பேரன்பினை வளர்ப்பனவென்பது கூறப் பட்டது.

சமணர்கள் தமது சமயத்தை நிலைநிறுத்தற் பொருட்டு அளவற்ற கொடிய செய்கைகளைப் பழிபாவத் திற் கஞ்சாது செய்தும் நமது நாயனார் அவர்களை ஒரு சிறிதும் தற்போதத்தால் எதிர்க்காமல் திருவருள் வழியே நின்றமையால் அவர்கள் தங்கருத்து நிறைவேறப் பெறாது தங்கள் பாழிகளையும் மடங்களையும் இழந்து அரசனாலும்

வெறுத்து ஒதுக்கப்பட்டனர். நல்வினை வயத்தால் அரசன் சமண சமயத்தைக் கைவிட்டு, சுவாமிகள் திருவடியிற் சரணம் புகுந்தான். சுவாமிகளது அருள்வாழ்க்கைப் பெருமையைப் பலகாலுங் கண்டு அவன் திருத்தமுற்றமை வியக்கற்பாலதே. சுவாமிகள் அவனைச் சைவ சமயத்திற்கு வரும்படி அழைக்கவில்லை. அவனே நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு தனது அறியாமையை உணர்ந்தான். இங்ஙனம் வாய்ச்சொல்லாலன்றி வாழ்க்கை நயத்தாலே சமண சமயத்தை வென்றழித்த பெருமை நமது நாயனுருக்கே உரியதாகும். திருவதிகைக்குச் சென்று திருவீரட்டானப் பெருமானை இகழ்ந்த தமது குற்றத்தை யுணர்ந்து அதற்கு வருந்திப் பாடின ஏழைத் திருத்தாண்டகத்துள் தமது குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்குங் குறிப்பமைக்கப் பட்டுள்ளது.

## ரு. திருப்பதிகள் சென்று சிவவழிபா டாற்றல்

திருவதிகை வீரட்டானத்தில் சிலகாலந் தங்கிய பின்பு சிவபெருமானது திருப்பதிகள் பலவற்றிற்குஞ் சென்று தொழுது பாடித் தொண்டுசெய்யுங் கருத்தோடு சொல்வேந்தர் புறப்படுவாராயினர். திருவதிகைக்குப் பக்கத்திலுள்ள திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலாகிய பல இடங்களுக்குச் சென்று வணங்கித் திருப்பதிகங்கள் பாடியபின்பு திருப்பெண்ணுகடம் சேர்ந்தார். அவண் திருத்தூங்கானை மாடமென்னும் திருக்கோயிலை அடைந்து சமண சமயத் தொடக்குண்டு போந்த உடலோடு தான் உயிர்வாழ இசைந்திலராகலின், உயிர் தரித்தற் பொருட்டுச் சிவ பெருமான் தமது அடையாளத்தைத் தன்மேற் பொறித்து அருளவேண்டுமென்று செழுந் தமிழ்மாலை பாடினார். அதன் முதற்பாட்டு வருமாறு:

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

(தேவாரம்)

இத்திருப் பதிகத்தைப் பாடியவுடன் கடவுளருளால் ஓர் சிவபூதம் அருகிலுள்ளோர் யாவரு மறியாதபடி நாயனாரது திருத்தோளின்மேற் சூலக்குறியினையும், நந்தியடையாளத்தையும் சாத்திச் சென்றது. அப்போது அதனை யுணர்ந்த சுவாமிகள் முதல்வரது திருவருளை நினைந்து மனமகிழ்ந்து விழிநீர்ப் பெருக்கொடு தொழுது வீழ்ந்து உய்ந்தேன், உய்ந்தேன் என்றெழுந்தார். பின்னர், திருவரத்

துறை, திருமுதுகுன்றம் முதலிய திருப்பதிகளைப் பணிந்து தில்லைக்குப் புறப்பட்டார்.

நமது நாயனார் அந்தணர் நிறைந்த பெண்ணுகடம் சேர்ந்தபொழுது மேற்கூறிய வேண்டுகோளைச் செய்ததற்குக் காரணம் ஊகித்தறியற் பாலதே. அது சமண சமயத்திலிருந்து தான் சைவ சமயத்திற்கு வந்ததை நினைப்பூட்ட உடம்பில் வெளியடையாளம் வேண்டுமென்று கருதினமையேயாம். அஃதின்மையால் உடம்பைப் பார்க்கும்போது சமண சமய நினைப்புத் தோன்றித் தனது உள்ளத்தை வருத்தினதுபோலும். அங்குள்ள அந்தணரது அடையாளமாகிய நூலைப் பார்த்தாலும் ஞானம்பெற்ற நிலையை நினைப்பூட்டுவதற்கு அடையாளம் வேண்டுமென்பது தோன்றக்கூடியதே. சிவஞானிகள் மனம் புறத்தே செல்லுங்காலத்துத் திருவேடத்திலும் மெய்யன்பரிடத்தும் இறைவரது திருவடிகள்பாலும் செல்லுந் தன்மையது. அங்ஙனஞ் செல்லுங்காலத்தே அதற்குத் தடையாயுள்ளவற்றை விலக்குவார்கள். அவ்வாறே ஈண்டும் நமது நாயனார் சமண நினைவை யொழித்தற்பொருட்டு இவ்வேண்டுகோளைச் செய்து பயன்பெற்றார்போலும். இது நிற்க.

இனி, அப்பர் பெருமான் தில்லைக்குச் சென்று வணங்கிய செய்தி ஆராயற்பாலது. திருநாவுக்கரசர் தில்லையெல்லை அடைந்து நிலத்தில் வீழ்ந்து தொழுதெழுந்து செல்லுங்காலத்துச் சோலைகளில் எதிரெதிரே நடமாடும் மயில்களின் ஆட்டத்தைக் கண்டு குளங்களாகிய மங்கையர் தமது தாமரை மலர்களாகிய முகங்களினாலே தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாகத் தோன்றின. அக்குளங்களின் பாங்க ருள்ள மூங்கில்போன்று உயர்ந்து வளர்ந்த கரும்புகள் கணுக்களினின்றும் முத்துச்சொரியுஞ் செயலானது அப்பமூர்த்திகளது திருவுருவத்தைத் தாம் கண்டு

அன்பால் உருகிப் பொழிகின்ற கண்ணீரை உகுப்பது போன்றது. நமது நாயனார் செல்லும் வழியிலுள்ள திருநந்தனவன மொன்றில் இருமருங்குமுள்ள மரங்களின் கிளைகளிலிருந்து குயில்கள் கூவுவது தில்லைக்கு வருவாரைப் பார்த்து, உங்களுடைய பிறவி நீங்கும்படி இப்பதியை யடையுங்களென்று மக்களை வரவழைப்பது போன்றிருந்தது. கிள்ளைகளும் நாகணவாய்ப் புட்களும் திருநாவுக்கரசர் தவவேடத்தைக் கண்டு ஈதோர் அற்புதமென அவரெதிரே சென்று, சிவநாமங்களை ஓதின. அப்போது அவரும் திருவருளை வியந்து தொழுது ஆராத காதலுடன் விரைந்து சென்று, தில்லையின் மேற்றிசை யணுகித் திருவாயிலின் புறத்தே யடைந்தார். தில்லையின் திருவீதிகளிலே விண்ணவர் முடியிற் சிதறிய மணிகளைப் பெருக்கித் தள்ளிய வாயு, வருணன் என்னும் தேவர்களது பணிவிடை நிறைவுடையனவல்லவென்று கருதி அடியார்கள் திருவலகிட்டுத் தண் புனல் தெளித்தார்களென்பது,

நவமின் சுடர்மணி நெடுமா லையுநறு
மலர்மா லையுநிறை திருவீதிப்
புவனங் களின்முத விமையோர் தடமுடி
பொருதுந் தியமணி போகட்டிப்
பவனன் பணிசெய வருணன் புனல்கொடு
பணிமா றவுமவை பழுதாமென்
றெவருந் தொழுதெழு மடியார் திருவல
கிடுவார் குளிர்புனல் விடுவார்கள் (செ. கசுக)

என்ற திருப்பாட்டால் இனிது கூறப்பட்டது.

நாயனார் திருக்கோயிலின் மேலைவாயிலை அடைந்து அடியார்கள் தம்மை எதிர்கொள்ள அவர்களோடு திருவீதியைச் சுற்றிச் சென்று எழுநிலைக் கோபுரத்தினைத் தொழுது திருக்கோயிலை வலம் வந்து உட்சென்று பொன்

னம்பலத்தினை எதிரே கண்டு திருமால் முதலிய எல்லாத் தேவரும் பிறவி நீங்கப் பெற்று இன்பம் பெறும்வண்ணம் திருநடம் ஆடும் பெருமானை அளவற்ற அன்போடு வணங்கும் உவகை மிக்குக் கைகளைத் தலைமேற் கூப்பி இடையறாது பொழிகின்ற கண்மழையோடும் கசிந்துருகும் உள்ளத்தோடும் பொன்னம்பலவரது திருவடிகளை உன்னிப் பலகாலும் தாழ்ந்தெழுந்து தமது அமுதப் பாடல்களாகிய திருவிருத்தம், திருநேரிசை என்பனவற்றைப் பாடினர். அத்திருவிருத்தப் பதிகத்தின் ஓர் பாட்டில் 'என்று வந்தாய்' என்று தம்மை இறைவர் வினவின குறிப்பினை யமைத்தருளினமை காண்க.

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற் காய்ச்
சென்று தொழுமின்க டில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே.

(செ. ௨)

'பத்தனாய்ப் பாடமாட்டேன்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிய பின்பு திருவீதியிலே தமது உழவாரத் தாற் பணிசெய்யத் தொடங்கினர். பாடற்றொண்டும், திருக்கைத் தொண்டுஞ் சிறப்பாக இயற்றி அங்குச் சில நாள் தங்கினர்.

பின்னர்த் திருவேட்களம் திருக்கழிப்பாலை என்னும் தலங்கட்குச் சென்று வணங்கிப் பாடித் தில்லைக்கு மீண்டனர். திருக்கழிப்பாலைப் பெருமான்மீது பாடிய திருப்பதிகத்துள் பிரிவாற்றாத தலைவிநிலை கூறும் துறையினை அழகுற அமைத்துள்ளார். அங்கு வீற்றிருந்த பெருமானுக்கு மணவாளநம்பி என்ற திருப்பெயர் உண்மையால் அவ்வாறு பாடினர் போலும். தில்லையை நினைந்து தில்லைப் பெருமானைத் 'தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனோ' என்ற

கருத்தை யமைத்து வழியிலே செல்லும்போதே திருப்பதிகம் பாடிக்கொண்டு தில்லை சார்ந்தார். அங்கே பொன்னம்பல மடைந்து நடேசப் பெருமானை 'அரியானை' என்ற முதற் குறிப்புடைய திருத்தாண்டகத்தினால் வாழ்த்தி வணங்கினார். பின்னும் 'செஞ்சடைக் கற்றை முற்றத்து' என்று தொடங்கும் அழகிய தமிழ்மாலை பாடி மனமொழி மெய்களால் தொண்டுசெய்து அவண் வதிந்தனர்.

நமது நாயனார் தில்லைத் திருக்கூத்தின் பெருமை கண்டவிடத்து உணர்வில் நேர்வரும் சிவபோகத்தைத் தலைப்பட்டமையால்,

"ஒருத்தரா லறிய வொண்ணாத் திருவுரு வுடைய சோதி
நிருத்தநான் காண வேண்டி நேர்பட வந்த வாறே"

என்று இயம்பி, சிவபெருமான் தமக்கு எளிவந்தருளி, யாவரும் பெறுதற்கரிய சிவானந்தப் பெருவாழ்வைத் தமக்குத் தந்தமையைப் போற்றினார். சிவபெருமான் தன்னை ஆட்கொள்ள வந்ததுபோலத் தான் அவர் ஆடல் காண்பான் போந்ததாகவும் கூறினமை காண்க.

## ௬. ஆளுடையபிள்ளையாரோ டளவளாவுதல்

சீர்காழியிலே திருஞானசம்பந்தப் பிள்ளையார் தோணியப்பர் உமையம்மையாரோடு எழுந்தருளிவந்து ஞானப்பாலூட்டி ஆட்கொள்ளப் பெற்றனர் எனவும் அச்சிவ பெருமானைத் தமது தந்தையார்க்குச் சுட்டிக்காட்டினரெனவும், ஏழிசை பயிலும் செந்தமிழ்ப் பதிகங்கள் அவர் பாடுகின்றார் எனவும் கேள்விப்பட்டு நமது நாயனார் அவரது திருவடி மலர்களை வணங்கும் காதல் மீக்கூரப் பொன்னம்பலவரிடத்து விடைபெற்றுக் கொண்டு திருவீதியிற் புரண்டு வலங்கொண்டுபோந்து தில்லைப் பதியின் எல்லையை வணங்கிக் கடந்து சென்று திருநாரையூர் பணிந்து தொண்டர் குழாத்தோடும் அன்பே வடிவமாய்ச் சீர்காழி மருங்கணைந்தார்.

சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசைவுங்
கந்தைமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய.

(திருஞானசம்பந்தர்புராணம் செ. ௨௯௦)

இதனைக்கேட்ட ஆளுடைய பிள்ளையாரும் திருவுள்ளத்திற் பொங்கியெழுந்த பெருவிருப்போடு அன்பர் புடைசூழ அரசரை எதிர்கொள்ளச் சென்றனர். திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டவுடன் சொற்கோவும் ஓடிச்சென்று அவர் அடிபணிந்தனர். பிள்ளையாரும் உடனே அவரது திருக்கரங்களைப் பற்றிக் கொண்டு வணங்கி, 'அப்பரே' என அழைத்தனர். அப்பமூர்த்திகளும் 'அடியேன்' என்றனர். இரண்டு சிவமாந்தன்மைப்

பெருந்தகையாரும் அளவளாவியதைக் கண்ட அன்பர் திருக்கூட்டம் சிவ நாமங்களை முழக்கின. பிள்ளையாரது கழல் வணங்கப்பெற்றேனென்று திருநாவுக்கரசர் களிகூர, அவரைக் காணப்பெற்ற மகிழ்ச்சி சம்பந்த மூர்த்திகளது திருவுள்ளத்தே பொங்கியெழ, இருவரும் ஒருவரோடு ஒருவர் நட்புற்றுத் தோணியப்பரை வணங்கும் கருத்தோடு திருக்கோயிலுட் சென்றனர்.

இருவரும் திருக்கோயிலுட் சென்ற காட்சி அருட்கடலும் அன்புக்கடலும் கலந்து இயங்கினபோலவும், சைவசித்தாந்த சமயத்தின் புண்ணியக் கண்களிரண்டும் ஒரே பொருளை நோக்கிச் சென்றது போலவும், சிவபெருமானது திருவருளும் உமையம்மையாரது திருவருளுங் கூடினமை போலவும் இருந்தது. இருவரும் திருக்கோபுரத்தைப் பணிந்து உட்சென்று வானளாவிய பெருவிமானத்தில் வீற்றிருக்கும் பெருமானைத் தொழுதபோது புகலியர்கோன் அப்பரைப் பார்த்து, 'உங்கள் தம்பிரானுரை நீர் பாடுக' என்றூர். அவரும் அவ்வாறே மெய்யறிவு ஒளிரும் திருப்பாடல்களைப் பாடிய பின்பு தோணியப்பரையும், பெரியநாயகியம்மையையும் வணங்கிப், 'பார்கொண்டு மூடி' என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் பிரிவாற்ருமையோடு புறம்போந்து பிள்ளையார் திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து அவண் தங்கினர். ஆண்ட அரசும் ஆளுடைய பிள்ளையாரும் ஒருவரோடொருவர் அளவளாவித் தமது நட்பினைப் பேணிய முறைமை மிகவும் பாராட்டுதற்குரியது. சிவபெருமானுக்கும் சிவனடியார்க்கும் திருவடித் தொண்டு செய்வதில் தலைநின்றமையால் திருநாவுக்கரசர் ஞானசம்பந்தர் வருகிருர் என்றவுடன் ஓடிச்சென்று அவர் திருவடிகளிற் பணிந்தனர். சம்பந்தமூர்த்தியும் அரசரை வணங்கி அவரது முதுமைக்கும் தமது இளமைக்கும் ஏற்றவாறு

'அப்பர்' என்ற திருநாமத்தை அவருக்குச் சூட்டினர். இருவரையும் ஒப்பிட்டு மிகவும் நயம் பெற ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் அவர்களது பெருமையை ஒரு திருப் பாட்டினுள் விளக்கியுள்ளார்.

அருட்பெருகு தனிக்கட லு மூலகுக் கெல்லா
மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன முய்ய
இருட்கடிவுண் டவரருளு மகில மெல்லா
மீன்றருடன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே.

இச் செய்யுளுள் அமைத்த அடைமொழிகளை முறை நிரலாகவும் எதிர் நிரலாகவும் நோக்குமிடத்து அவைகள் யாவும் தனித்தனி இருவரையும் குறிக்கும் என்றுகொள்ள இடமுண்டு. சீர்மை வாய்ந்துள்ள ஞானசம்பந்தப் பெருமானை 'அருட்பெருகு தனிக்கடல்' என்றது யாதொரு பயனும் கருதாது ஞாலமெங்கும் அரன் நாமமே பரவ வேண்டுமென்னும் கருணை மிகுந்து சைவசமயப் பேரொளியினைப் பதினாறாயிரம் அடியார் திருக்கூட்டத்தோடு தமிழ் நாட்டுச் சிவதலங்கள் எங்குஞ் சென்று பரவச்செய்த பேரருளாளர் ஆதல்பற்றியும், குழவிப் பருவத்திலேயே முழுமுதற் கடவுளது ஒப்பற்ற திருவருளைப் பெற்றமையால் இணையில்லாத பெருமையுடைமை பற்றியுமென்க. அவ் அடைமொழியே ஆண்ட அரசரைக் குறிப்பதாகக் கொள்ளின், சிவபெருமானது திருவருளை நேரிற் பெற்று அவ்வருள் நெறியிலேயே இடையறாத் தியானத்தோடு நின்று சிவானந்தப் பெருக்கானது மேன்மேலுந் தழைப்ப ஒப்பற்ற பேரன்பின் உருவினராய் மூவகைத் தொண்டு செய்வதில் தமக்கு யாரும் நிகரில்லாது விளங்கினமை தெளியப்படும்.

செந்நின்ற பரம்பொரு ளானவர்தந்
திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினன்
முதல்வன் கருணைக்கடன் மூழ்கினரே. (செ. எக)

ஏரின் சிவபோக மிங்கிவற்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தென்னாளோ?

என்று தாயுமான அடிகள் நமது நாயனரைத் துதித்தமையும் உற்று நோக்குக.

இனி, 'உலகுக்கெல்லாம் அன்புசெறி கடலுமாமென வும்' என்னும் அடைமொழியானது அப்பர் சுவாமிகளைக் குறிப்பதாகக் கொள்ளுமிடத்து, 'தாயொக்கும் அன்பின்' என்றபடி எல்லா உயிர்களும் உய்யவேண்டுமென்ற கருணை நிறைந்தவரென்பது திருவருள் பெறுவதற்கு முன்னேயே பல்லுயிர்க்கும் நன்மை பயத்தற்குரிய அறங்கள் யாவும் இயற்றி அருளொழுக்கம் காரணமாகவே சமண் சமயம் புகுந்து மீண்டு திருவருள் எய்தியபின் மக்கள் யாவர்க்கும் தமது சிவாநுபூதிப் பயனை அறிவித்து அவர்கள் உய்தற்குரிய உறுதிமொழிகளைப் பல பதிகங்களிலும் அமைத்துப் பாடிய பெருமை நோக்குவார்க்கு அங்கை நெல்லியாம். அன்றியும் அறிவில்லாத பிள்ளைகள் தம்மை இகழ்ந்தாலும் அவர்கள்பால் பரிவுகூர்ந்து அவர்கட்கு எதிரிடுக்கண் இழைக்காத தாயைப்போலத் தாமும் சமணர் செய்த கொடுஞ் செயல்கட்கு எதிர் வெஞ்சொல் யாதுங் கூருது அவர்மேல் பரிவு கூர்ந்தமையாலும் பிள்ளைகளது நோய்க்காகத் தாய் மருந்துண்பதுபோலச் சைவமக்கள் உய்யும் பொருட்டுத் தாம் துன்பங்களை யெல்லாம் பொறுத்து அவர்களை உய்யக் கொண்டமையாலும் நமது நாயனரது அன்னை நிலை ஊகிக்கப்படும். ஆசிரியர் சேக்கிழாரும்,

சுண்ணவெண் சந்தனச் சாந்து தொடுத்திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய வெடுத்து மகிழ்வுட னேபாடு கின்றார்
(செ. ௧௧௫)

எனவும், புராணத்திறுதியில், 'யோனிகளாயின வெல்லாம் உள்நிறைந்த பெருமகிழ்ச்சி' எனவும் மொழிந்தமை இதனை வற்புறுத்தும்.

இவ் அடைமொழியைத் திருஞானசம்பந்தப் பெருமானுக்குக் கொள்ளுமிடத்து, உலகுக்கெல்லாம் அன்பு என்பது தொடர்பின்றி எல்லா உயிர்களிடத்துஞ் செல்லுங் கருணையென்னும் பொருளிலே அமைந்து எல்லார்க்கும் தமது சுற்றத்தார்க்குப் போலவே தமது திருமணத்தில் வீடு உதவிய சம்பந்தமூர்த்திகளது ஒப்பற்ற சால்பை இனிது குறிக்கும். 'அன்பு' என்பது தொடர்புடையார் மாட்டு நிகழும் உள்ள நிகழ்ச்சியாயினும் உலகம் யாவற்றையும் தமது சுற்றமாகவே கருதிய பெருந்தகையார் உலகுக்கெல்லாம் 'அன்பு செறி கடல்' ஆவர் என்று கோடற்கு யாது தடையுளது?

இனி, 'பொருட்சமய முதற் சைவநெறி தான்பெற்ற புண்ணியக் கண் இரண்டெனவும்' என்றவிடத்து இன்னார் இக்கண் என்று பகுத்துக் கூறாமை காண்க. இருகண்ணும் ஒருதன்மையன வாகலின் இடம்பற்றிய வேற்றுமை உண்மை வேறுபாட்டைக் குறிப்பதன்று. 'முதற் சைவநெறி' யென்று சித்தாந்த சைவத்தைக் குறிப்பது அக்காலத்து வழக்குப் போலும். 'சைவ சித்தாந்த' மென்ற சொல் திருமந்திர நூலிலே வழங்கினும் ஆசிரியர் சேக்கிழார் காலத்து அது பெருவழக்காய் வழங்கியதாகத் தெரியவில்லை. 'சித்தாந்த' மென்ற சொல், முடிபைக் குறிப்பினும் 'அந்தமாதி' என்றதுபோல முதலும் ஆகுமாதலால் இருசொற்றொடர்க்கும் பொருள் ஒன்றே. இதனால் அகச்சமய முதலிய சமயங்கள் விலக்

கப்பட்டமை காண்க. அவைகள் அத்துணை உயர்ந்த உண்மைக் கொள்கையைக் கூறுவனவல்ல வாகலின் அவை கூறும் பொருள் சிறப்பிலது என்று குறிப்பிப் பதற்கு முதற் சைவ நெறியினை 'ஓங்கும் பொருட் சமயம்' என்றார்.

இனி 'இருட்கடுவுண்டவர் அருளும்' என்ற சொற் றொடரும் இரு பெருந் தகையார்க்குஞ் செல்லுந் தன்மை யதே. அருட் பேராற்றலோடு அடியார் பெருங்கூட்டங் கள் சூழ எங்குஞ் சென்று சைவத்தை நாட்டினமையால் தாயுமானவரும் 'வெம்பந்தம் தீர்த்துலகாள் வேந்தன் திரு ஞான சம்பந்தன்' என்று சம்பந்தமூர்த்தியைத் துதித் தது காண்க. ஆதலால் அவரை இறைவரது திருவருளுக்கு ஒப்பாகக் கூறக்காரணமுண்டு. இனி அச் சொற்றொடரை அப்பமூர்த்திகட்குங் கொள்ளலாம். திருவீரட்டான முதல்வரிடம் நேரே திருவருள் பெற்ற பெருந்துறவின் தோன்றலாக நமது நாயனார் திகழ்ந்தமையால் அவர் 'இருட்கடு வுண்டவர் அருள்' போல்வர். இன்னும் பெரு விடம் எழுந்தகாலை விண்ணவர் முதலியோர் சிவபெரு மானை அடைந்து உய்ந்தமைபோல விடவெங்கனலின் தன்மை வாய்ந்த சூலைநோயால் வருந்தி அது தீரும் வண் ணம் திருவதிகை அதிபரை அடைந்து உய்ந்தமையும் கருதற் பாலதே.

இவ்வாறே 'உலகமெல்லாம் ஈன்றாள் தன் திருவரு ளும்' என்ற விடத்தும் கொள்ளப்படும். உலகமெல்லாம் ஈன்றாள் தன் திருவருளை ஞானப்பாலுணவினால் நேரே பெற்ற பெருமை வாய்ந்தவர் ஞானசம்பந்தப்பெருமான். அவர் 'இருட்கடு வுண்டவர் அருள்' போல்வரெனின், அவரை வணங்கி அவர்பின் சென்று சீர்காழி முதல்வரை வழிபடும் அப்பமூர்த்திகள் 'ஈன்றாள் தன் திருவருள் போல்வர் எனலாம். ஈன்றாள்போல எவ்வுயிர்க்குங்

கருணையுடைமையாலும் அவர் ஈன்றாள் தன் திருவருள் போல்வரென்றலும் ஒன்று. மாயா காரியமாகிய நீற்றறை கடல் முதலியவற்றால் ஊறு வராவண்ணம் காக்கப்பெற்றவர் 'ஈன்றாள் தன் திருவருள்' உடையாரே யாவர். அது பற்றியும் அவர்க்கு அஃது உவமையாதல் கூடும். கடல் நின்று கரையேறிய காலத்துப் பாடியருளிய பதிகத்தின் தலைப்பில் 'ஈன்றாளுமா யெனக் கெந்தையுமாய்' என்றமைத்தது நோக்கற்பாலது.

இனி, நமது நாயனார் சீர்காழியில் பிள்ளையார் திருமடத்தில் தங்கி அமுதுசெய்து ஞானசம்பந்தப் பெருமானோடு அளவளாவி உடனுறைந்த செய்தியும் ஆளுடைய பிள்ளையாரும் அப்பமூர்த்திகளது நட்பை மிகவும் பாராட்டி அவரோடு கோலக்காவரை சென்று அவரைச் சோழநாட்டுத் தலங்களுக்குச் செல்ல விடைகொடுத்து மீண்ட செய்தியும் இருவருடைய நட்பின் பெருமையை இனிது விளக்குவனவாகும். இத்தகைய நட்பின் சிறப்பையும் மேற்குறித்த திருப்பாட்டானது விளக்குவதாகக் கூறலாம். அன்பும் அருளும், தாயுங் குழந்தையும் போலுமாதலாலும், இரு கண் ஓர் உடம்பின் உறுப்பாக அமைதலாலும், சிவமும் சத்தியும் ஒரே பொருளாதலாலும், அவற்றிற்கு உவமேயமாகக் கூறப்பட்ட நாயன்மார்களிருவரும் அவைபோன்ற ஒற்றுமையுடைய கழிபெரு நட்பினரென்பது ஊகிக்கற்பாலது.

---

## எ. திருவடிமலர் சூடப்பெறல்

ஞானசம்பந்தரிடம் விடைபெற்றுச் சென்ற அப்பர் சுவாமிகள் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி முதலிய சிவதலங்கட்குச் சென்று பெருமானைத் தொழுதனர். பின்னர்த் திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருக்கோடிகா முதலிய தலங்களை வணங்கிச்சென்று திருவாவடுதுறையைச் சேர்ந்தனர். அத்தலத்தில் 'அடைந்துய்ந்தேன்' என்னும் முடிபையுடைய திருத்தாண்டகம் பாடிப் பலநாள் தங்கித் திருத்தொண்டுசெய்து திருக்குறுந்தொகை, திருநேரிசை, சந்த விருத்தங்கள் முதலிய செந்தமிழ்ப் பாமாலைகள் பலவும் அன்பினோடு சிவபெருமானுக்குச் சாத்தினர். இத்தலமானது திருமூலர் முதலிய பெருஞ்சித்தர்களுக்கு இருப்பிடமாயும் உயிரின் தற்போதத்தைக் களையவல்ல பெருமை வாய்ந்ததாயும் சமயாசாரியர் காலத்திற்குப் பின் கைலாய பரம்பரைச் சந்தானத்தில் வந்த திருமடம் ஒன்று திகழ்ந்தோங்குதற்குரிய தானமாயும் இருந்தமைபற்றிப் போலும், நமது நாயனார் பன்னாள் அவண் வைகிப் பதிகங்கள் பாடினர். பின்னர், திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருப்பழையாறை முதலிய தலங்களைப் பாடிப்போந்து திருச்சத்திமுற்றம் சேர்ந்தார். அவ்விடத்தில் மலைமகளது பூசை கொண்டருளும் பெருமானது சீரைச் சிறப்பித்துப் பாடித் திருப்பணிகள் செய்தனர். கூற்றம் வருமுன் திருவடிச் சுவடுகளைத் தனது தலைமேல் பொறித்தருள வேண்டுமென்று திருப்பதிகம் பாடுதலும், அங்கு வீற்றிருந்த அண்ணலார் அவரைத் திருநல்லூர்க்கு வரும்படி கட்டளையிட்டார். அத்திருநல்லூரை அடைந்து நாயனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுது 'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'

என்றுரைத்து அவர் தலைமிசைத் தமது திருவடிமலரைச் சிவபெருமான் சூட்டினர்.

நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனர் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

(செ. ககரு)

சூட்டியவுடன் மிடியால் வருந்துவோன் பெருநிதி பெற்று மகிழ்ந்தாற்போல உளம்பூரித்துத் தாழ்ந்திறைஞ்சித் திருவருளை நினைந்து, 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடியருளினர். பின்னும் அத்தலத்திலே திருப்பணிகள் நாடோறுஞ் செய்து பலநாள் தங்கி அத்தலத்தைப் பிரியாத மனமுடையவராய்த் திருக்கருகாவூர், திருப்பாலைத்துறை முதலியன வணங்கி மீண்டு நல்லூர்ப் பெருமானையடைந்து விடைபெற்றுப் போய்த் திருப்பழனஞ் சேர்ந்தனர். அங்கே கூத்தப்பெருமான் குரைகழல் வணங்கிப் பிறபல திருப்பதிகளையும் பணிந்தபின் அப்பூதியடிகள் வாழ்ந்த திங்களூரைச் சேர்ந்தனர். திருப்பெண்ணாகடத்தில் முழுமுதற் கடவுளுடைய இலச்சினை பொறிக்கப் பெற்றதனோடு அமையாது, திருநல்லூரிலே திருவடிச் சுவட்டினையும் தமது சென்னிமேல் அமைக்கும்படி நமது நாயனர் வேண்டிநின்றது, பிறவி யறவேயற்றுத் திருவடியே பெரும் சிவசாயுச்சியமாகிய முடிவிலின்ப நிலைக்கு அறிகுறியாமாதலின் அதற்குத் தாம் உரியார் என்னும் நினைவு தமக்கு நிகழ்ந்து பிறப்பிறப் பச்சத்தை யொழித்தற் பொருட்டு அதன் அடையாளத்தையும் திருமேனியின் பகுதியாகப் பெறக்கருதிப் போலுமென்க.

## அ. அப்பூதியடிகளார் அன்பின்றிறம்

நமது நாயனுர் சென்றடைந்த திங்களூரிலே அப்பூதியடிகளென்னும் அந்தணர் தலைவர் திருநாவுக்கரசு என்ற நாமத்திலேயே பேரன்பு மிக்கவராய் அதனைத் தமக்கு வீடு நல்கும் பெருமந்திரமாகக்கொண்டு தமது நற்பொருள் யாவற்றிற்கும் தமது புதல்வர்க்கும் அப் பெருநாமத்தினையே அமைத்து வழங்குவாராய்த் தாம் இயற்றிய அறச்சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலிய யாவற்றிற்கும் அத் திருநாமத்தின் சார்பாகவே பேரமைத்த பெரும் புண்ணியசீலராவர். திருநாவுக்கரசு நாயனுருடைய வரலாற்றினைக் கேட்டமாத்திரத்திலே அவரைக் காண்பதற்கு முன்னமே அவர்பால் அளவற்ற காதல் பெருகப் பெற்ற அப்பூதியடிகள் களவு, பொய், காமம், கோப முதலிய குற்றங்களெல்லாம் ஒரு சிறிதுமில்லாத அருட்பெருந்தகையாராவர். அந்தணருள் சைவநெறி நிற்கக் கருதுவார்க்கு அவரே பின்பற்றுதற் குரியவர். அவர் அமைத்துள்ள ஓர் தண்ணீர்ப் பந்தலின் அருகே அப்பர் பெருமான் அணைந்து அக்குளிர்ந்தபந்தலையும் அமுதம்போன்ற தண்ணீரையும் பார்த்தருளி அந்த இட முழுவதிலும் செம்மையாகத் தமது திருப்பெயரை எழுதியிருப்பக் கண்டனர். அப்போது அதற்குக் காரணத்தை வினவிய போது அப்பூதியடிகள் அவ்வாறே தமது அறநிலையங்கள் யாவற்றிற்கும் அப்பேரே அமைத்துள்ளாரென்பதையும் அவரது திருமனை அண்மையில் இருப்பதென்பதையும் கேட்டு அவ்வந்தணர் தலைவரது தலைவாயிலில் வந்து நின்றுர். அப்பூதியடிகளும் அவரைக்கண்டு அவர் திருவடிகளில் வணங்க, அவரும் எதிர்வணங்க அப்பூதியடிகள் சுவாமிகளை நோக்கி, 'நீவிர் இம்மனையில் வருவதற்கு நான் என்னதவஞ் செய்தேன்!' என்றனர். அதற்கு

விடையாக நாயனர் சொன்னதாவது, 'திருப்பழனத்துள் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி வருகின்ற வழியில் நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலைக் கண்டும், பிற அறங்களைக் கேட்டும் இவண் எய்தினேம்' என்பதே. 'அத் தண்ணீர்ப் பந்தலிலே நுமது பேர் எழுதாமல் வேறொருவர் பேர் எழுதவேண்டிய காரணம் யாது?' என்று நாயனர் வினவியதும், அப்பூதியடிகள் உளந்தடுமாறி வெகுண்டு, "நீர் நன்று கூறவில்லை. அமணரும் அன்னோர் மன்னனும் செய்த சூழ்ச்சிகள் அத்தனையும் தமது திருத்தொண்டின் உறைப்பாலே வென்ற பெரியாரது திருப்பெயரோ உமக்கு வேறொருவரது பெயராயிற்று. சிவபெருமானுடைய திருத்தொண்டினலே இம்மையிலேயே உய்யலாம் என்று என்போலியரும் உறுதியாக வுணரும்படி அருட்செயல் புரிந்த திருநாவுக்கரசரது திருப்பெயரை எழுதலாமோ வென்ற வெம்மை மொழியை யான் கேட்க நீர் எவ்வாறு கூறினீர்? அவர் கடலினின்று கரையேறிய அற்புதத்தை அறியாதார் உலகில் யாருளர்? சிவவேடத்துடனின்று இவ்வாறு கூறினீரே? நீர் எங்குள்ளவர்? சொல்லும்" என்று கடாவினர். அதற்கு விடையாக அப்பமூர்த்திகள் 'சூலையினல் ஆட்கொள்ளப்பட்டுய்ந்த தெளிவுணர் வில்லாத சிறுமையேன் யான்' என்றார். அதனைக் கேட்டவுடனே அப்பூதியடிகள் இருகரங்களையுஞ் சென்னிமேற் குவித்துக் கண்களில் நீர் பாயவும் உரைதடுமாறவும் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சங் கொள்ளவும் நிலத்தின் மேல் விழுந்து நாயனரது திருவடித் தாமரைகளிற் சரண் புகுந்தார். அவரை எதிர்வணங்கி நமது நாயனர் எடுத்தருள அவர் வறியவன் மாநிதியம் பெற்றதுபோல நிரம்பிய மகிழ்ச்சியுடையவராய் ஆனந்தக் கூத்தாடிப் பாடி ஓடிக் களிபேருவகையால் செய்வதென்னென் றறியாது நின்று, பின் வீட்டிற்குட்சென்று தமது மனைவி

மக்களுக்கு நாயனுர் எழுந்தருளிய நற்செய்தி தெரிவித்து அவர்களையும் உறவினர் யாவரையும் ஆர்வத்தோடு அழைத்துக்கொண்டு நாயனுர்பால் மீண்டனர். மனைவி மக்கள் சுற்றத்தார் யாவரும் நாயனுரை வழிபட்ட பின்பு அவரை உள்ளே எழுந்தருளச்செய்து அவருடைய திருவடிகளைத் தூயநீரால் விளக்கி, அந்நீரை அப்பூதியார் தம்மேற் றெளித்து உள்ளும் பூரித்தார். பின்னர் அரசர்க்குப் பூசனைசெய்து திருவமுது செய்விக்க விரும்பி அவரை வேண்டினர். அதற்கு அவர் இசைந்தபோது தாம் பெற்ற பேறு என்னென்று வியந்து மகிழ்ந்து தமது மனைவியாருடன் திருவமுதாக்கத் தொடங்கினர். அறுவகைச் சுவை பயக்கும் நற்கறிகளும் இன்னமுதமும் சமைத்தபின் தம்முடைய மூத்த புதல்வராகிய மூத்த திருநாவுக்கரசரை வாழைக் குருத்துக் கொண்டுவரும்படி அனுப்பினுர். அவர் ஆர்வத்தோடு தோட்டத்திற்கு விரைந்து சென்று பெரிய வாழையிலை ஒன்றினைக் கொய்தபோது அங்குக் கரந்திருந்த நாகமொன்று அவர் கையில் தீண்டிற்று. அதன் விடம் தலைக்கேறித் தாம் கீழே விழுவதற்கு முன்னமே ஓடிச்சென்று நாயனுர் திருவமுது செய்தற்கு இடையூறு நிகழாதவண்ணம் பாம்பு கடித்ததை ஒருவருக்குஞ்சொல்லாமல் தாயாரிடம் இலையை வைத்துவிட்டு, விடம் தலைக்கேறவும், மேனிகருகி, உரைகுழறி நிலத்தின்மேல் விழுந்தார். அதனைக்கண்ட தாயுந் தந்தையும் விடத்தினுல் அவர் உயிர் நீத்தார் என்பதை யறிந்தும் தமது மனக்கலக்கங் காட்டாமல் நாயனுரை அமுது செய்வித்தற்கு முயன்றனர். தமது அருமைப் புதல்வனது உடம்பைப் பாயினுள் வைத்து வீட்டின் பின்புறம் ஒருபக்கத்தில் மறைத்துவிட்டு அப்பமூர்த்திகள்பாற் சென்று, 'எல்லாஞ் சித்தமாயின; எழுந்தருளி அமுதுசெய்து எங்கள் குடிமுழுவதையும் உய்யக் கொள்வீர்களாக' என்று கூறிப் பணிந்

தனர். அவரும் எழுந்துசென்று அடியிணை விளக்கப்பெற்ற பின் ஓர் ஆசனத்திலிருந்து திருவெண்ணீறணிந்து அப்பூதியடிகட்கும் அவர் மனைவிக்கும் மற்றப் புதல்வர்க்கும் நீறளிக்குங்கால் உமது மூத்தபுதல்வரைக் காட்டுமென்று கூற, அவர் நிகழ்ந்தது ஒன்றும் மொழியாது 'அவன் இப்போது இங்கே உதவான்' என்றார். அப்போது திருவருளால் நாயனாரது உள்ளத்தில் ஒரு தடுமாற்றந் தோன்ற அப்பூதியடிகளை நோக்கி, 'நீர் கூறுவதை என் மனம் பொறுத்திலது. அவன் எங்குச் சென்றான்? உண்மை சொல்லவேண்டும்' என்று கட்டளையிடவும், அவர் நடுநடுங்கி, அரசர் அமுது செய்தற்குத் தடையாகுமென் றெண்ணி உண்மைகூற விருப்பமிலராயினும் நாயனார் கேட்டதற்கு உண்மையை மறைத்தல் கூடாதென்று அஞ்சிக் கவலையுற்று நடந்ததைக் கூறினார். உடனே ஆண்ட அரசர் நீர் செய்ததுபோல யார் இப்படிச் செய்வாரென்று இரங்கிக்கூறி அப்புதல்வர் உடம்பினைச் சிவபெருமானது திருக்கோயில்முன் வருவித்து, "ஒன்று கொலாம்" என்னும் திருப்பதிகம் பாடவே, விடம் நீங்கப் பிள்ளை எழுந்தான். குழந்தை பிழைத்ததை யுணர்ந்தும் சுவாமிகள் தமது மனையில் இன்னும் அமுதுசெய்யவில்லையே யென்று கவன்றனர் அப்பூதியடிகள்.

*பிரிவுறு மாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டி*
*னெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றவப் பயந்தார் தாங்கள்*
*அறிவரும் பெருமை யன்ப ரமுதுசெய் தருளு தற்குச்*
*சிறிதிடை யூறுசெய்தா னிவனென்று சிந்தை நொந்தார்.*

(அப்பூதியடிகள் புராணம் செ. ௩௭)

ஆதலால் அவர் விரும்பிய வண்ணமே விருந்துண்டு அங்கு வதியுநாளில் ஒருநாள் திருப்பழனத்திற்குப் போய்ச் சிவபெருமானைப் பாடிய பதிகத்தில் அப்பூதியடிகளது

திருத்தொண்டினைச் சிறப்பித்துப் பாடினர். அத்திருப் பாடல் வருமாறு :

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே. (தேவாரம்)

பின்னர், திருச்சோற்றுத்துறை முதலாகிய பலதலங்களையும் பாடித் திருப்பழனத்திலேயே சிலகாலம் பணிவிடை செய்திருந்தனர்.

சைவவேளாளர் குலக்கொழுந்தாகிய திருநாவுக்கரசு நாயனர் பெருமையை உண்மையில் உணர்ந்து மெய்ப் பயன் எய்தும் பேறு அந்தணரில் மேம்பட்ட அப்பூதியடிகளுக்கே அமைவதாயிற்று. நமது நாயனர் காலத்தே வாழ்ந்த அந்தணருள் ஒரு சாரார் சிவனடிப் பேரன்பு மிக்கோராய்ச் சிவனடியாரிடம் தமது குலநலம் பாராட்டாத மெய்ப்பற்றுடையாராய்த் திகழ்ந்தன ரென்பது ஊகிக்கப்படும். அப்பூதியடிகள் ஆதிசைவ அந்தணராகத் தோன்றவில்லை. சேக்கிழார் நாயனர் புராணத்துள் அவர் சிவவேதியர் ஒழிந்த அந்தணர் மரபினைச் சார்ந்தாரென்று கூறப்பட்டது. அத்தகைய அந்தணர் யாவரும் சிவநெறி நின்ருரோ என்று தெளியப் போதிய சான்றில்லை. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்துள் அவரது பெற்ருேர் மரபிரண்டும் சைவநெறிவழி வந்தன என்று கூறப்பட்டது.

மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையராய்
அரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள்

என்றது காண்க. 'மரபிரண்டும்' என்றதனல் மர

பொன்று மாத்திரமே சைவநெறிவரப் பெற்ருரும் அக் காலத்திருந்தனரென்பது போதரும்.

இதனுல் இருமரபும் சைவநெறிவரப் பெருதாரும் இருந்தனரென்பதும் ஊகிக்கப்படும். படவே, நமது நாயஞரது காலத்தே ஆதிசைவர் ஒழித்தொழிந்த அந்தணருள் சிவநெறி நின்ருர் ஒருவகையாரும் பிறநெறி நின்ருர் மற்ருெரு வகையாருமென்பது அறியக் கிடக்கின்றது. இக்காலத்துச் சிவநெறி நிற்பார் தொகை மிகவும் சுருங்கியுள்ளது. சிவநெறி ஒழுகிய அந்தணர் அக்காலத்தே வீண் குலநலம் பேணுது வேளாளர் முதலியோரைச் சூத்திரரென்று எண்ணுது அவருட் சிறந்து விளங்கிய சிவநேசச் செல்வர்களைத் தாமும் வழிபட்டுப் போற்றினரென்பது தெளிவு. அவர்கள் அருளொழுக்க முடையராய்ப் புலால் கலவாத உணவருந்துவாராய்த் திகழ்ந்தனரென்பது 'தூயநற் கறிகளான அறுவகைச் சுவையாலாக்கி' என்பதால் விளங்கும். அன்றியும் தமது செல்வத்தைப் பலர்க்கும் பயன்படும் பேரறங்கள் செய்வதிலேயும் அன்னேர் வள்ளன்மைமிக்க வேளாளர்க்குப் பின் அடையாத பெருமைவாய்ந்தவ ரென்பதும் அறியப்படும்.

> படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள
> முடிவிலா வறங்கள் செய்து முறைமையால் வாழுநாளில்

என்றது காண்க. அக்காலத்தே அந்தணருக்கு ஐயர்முதலிய பட்டங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அப்பூதியடிகள் என்ற சொற்ருெடரை உற்று நோக்குக. அடிகள் என்பது அவர் பெயர்ப்பகுதி போலும். அப்பூதியடிகளார், அப்பூதியடிகள் நாயஞர் என்றுங் கூறியவிடத்து, 'ஆர்' என்ற விகுதியும் 'நாயஞர்' என்ற சொல்லும் சிறப்பைக் குறிப்பனவாயின.

அப்பூதியடிகளுக்குத் திருநாவுக்கரசு என்ற திருநாமமே ஐந்தெழுத்தினு மிக்க இனிமை பயப்பதாயிற்று.

சிவனடியாரைச் சிவமாகப் பேணி வழிபடுவதில் இவர் நலஞ் சிறந்து விளங்கினமை பாராட்டத் தக்கது. தமது புதல்வரை இழப்பதுகூட அவருக்குப் பெரிதாகத்தோன்ற வில்லை. அப்பமூர்த்திகள் அமுதுசெய்யாமையே குழந்தை உயிர்பெற்ற பின்பும் அவர்க்குத் தளர்வு உண்டாக்கிற்று இஃது அவரது ஒப்பற்ற உயர்நிலையைக் குறிப்பதாகும். அவரைப் போலவே அவரது மனைவியாரும் மக்களும் அன்பு செலுத்தினமை மிகவும் வியக்கற்பாலது. அவரது மூத்த மகனார் தம்மைப் பாம்பு கடித்ததைத் தமது பெற்றோர்க்குத் தெரிவித்தால் அப்பமூர்த்திகள் அமுது செய்வதற்கு இடையூறு நிகழக்கூடுமென்று கருதி அதனைக் கூறாமலே இலையைக்கொண்டு தாயினிடம் கொடுத்ததைப் பார்க்குமிடத்து அவரும் தந்தைக்கேற்ற அருந்தவப் புதல்வரென்பது தெளியப்படும். அத்தகைய புதல்வர் இறந்தும் அப்பூதியடிகளின் மனைவியார் தமது கணவனார் கருத்தின் வழியே நின்று திருத்தொண்டர்க்கு அமுது செய்வித்தலையே பெருங்கடமையாகக் கருதி மனக்கலக்கமின்றி யிருந்த நிலையை நோக்குமிடத்து, 'காதன் மனையாளும் காதலனு மாறின்றித் தீதி லொருகருமஞ் செய்கவே' என்று கூறிய பெரியோர் வாக்கிற்கு ஒப்பற்ற எடுத்துக் காட்டாக இவர்களே விளங்கினரென்றல் மிகையாகாது.

திருநாவுக்கரசர் வழிபாடே இவர்க்கு வீடு தருவதாயிற்று.

உற்ற னலன்றவந் தீயினின் றனல னுண்புனலா
அற்ற னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றெ னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றனெருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.

(நால்வர் நான்மணிமாலை, செ. ௧௮)

சிவனடியார் அமுதுசெய்ய வந்தகாலை உணவு கோடற்கு முன்னேயே அவரது திருவடிகளைத் தூயநீரால்

விளக்குதலும் விளக்கியநீரை உட்கொள்ளுதலும் அவரை வணங்கித் திருவெண்ணீறு வாங்கி அணிதலும் அவர்க்கு விருந்து செய்வாரது கடமையாமென்பது,

அருந்தவ ரெழுந்து செல்ல வடியிணை விளக்கி வேறோர்
திருந்துமா சனத்தி லேற்றிப் பரிகலந் திருத்து முன்னே
இருந்துவெண் ணீறு சாத்தி யியல்புடை யிருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில்
(அப்பூதியடிகள் புராணம். செ. ௧௧)

என்ற திருப்பாட்டால் இனிது விளங்கும். அந்நன்முறை சிற்சில விடங்களில்தான் இக்காலத்தில் நிகழக் காண்கின்றேம்.

அப்பூதியடிகள் தமது மூத்தமகன் அவண் உதவான் என்று கூறியபோது திருவருளாலே நமது நாயனர் உள்ளத்தில் தடுமாற்றம் ஒன்று தோன்றியது. தடுமாற்றமாவது, அப்பூதியடிகள் கூறியது மெய்யன்றென்று தடை செய்யுமுணர்ச்சியாம். அது கீழ்வருஞ்செய்யுளால் இனிது விளங்கும். தோன்றியவுடன் தமது யோகக்காட்சியால் உண்மை யுணரத் தொடங்காது அப்பூதியடிகளையே உண்மை கூறும்படி வற்புறுத்தினர்.

இவ்வுரை பொருதென் றுள்ள மென்செய்தா
னிதற்கொன் றுண்டான்
மெய்விரித் துரையு மென்ன விளம்புவார்
விதிர்ப்புற் றஞ்சி. (அப்பூதி. புரா. செ. ௨௧)

இதனல் நாம் தெரிந்துகொள்வது யாதெனில் திருவருள் வயமாக நிற்குஞ் சிவஞானிகள் முயற்சியின்றியே உண்மை யுணர்வாராதலின் அவரிடம் பொய்யுரை கூறுதல் கூடாதென்பதும் பதார்த்தங்கள் பாராது பரமே பார்த்திருக்கும் மெய்யன்பர் அந்தக்கரணங்கள் வாயிலாகப் பொருள்களை யறியும் யோகக்காட்சிகள் முதலியவைகளை வலிந்து

பற்றுரென்பதும் திருவருளே அவர்கட்கு உண்மை யுணர்த்துமென்பதும் பிறவுமாம்.

நமது நாயனூர் எவ்வுயிரிடத்தும் அன்னைபோல் மிக்க கருணை யுடையராதலின் நன்மக்களுட் சிறந்த சிவனடிப் பேரன்பினராகிய அப்பூதியடிகள் போல்வார்க்கு விளைந்த இடுக்கண் களையாமல் எவ்வாறு அவரகத்தே உணவு கொள்ள இயைவர்?

> உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
> யிடுக்கண் களைவதா நட்பு (குறள் - எஅஅ)

என்றபடி அச் செய்தியைக் கேட்டவுடனே விரைவில் எழுந்து புதல்வரை உயிர்ப்பித்தார். இறந்தவர்க்கு உயிர் கொடுக்கும் ஆற்றலைத் திருவருட் பேற்றினுலே பெற்ற நமது நாயனூர் அதனைப் பயன் படுத்துவதற்குத் தக்க சமயம் வராமற்போயின் அதனை உலகர் அறிவதற்குக் காரண மிருந்திராது. தஞ்செயலற்றுத் தாமற்று நின்றமை யால் சிவஞானிகளது அருந்திறல் உலகர்க்கு எளிதில் விளங்காது. சிவஞானிகள் ஒழிந்த ஏனையோர்க்கு ஏதாவது ஒரு சிறந்த அற்புதத்திறமை வாய்ந்திருக்குமாயின் அதனை உலகினர்க்கு உணர்த்திப் புகழ்படைக்க விரும்புவர். அங்ஙனஞ் செய்யாது எல்லாம் சிவன் செயலென்று கருதிச் சிவனடியே சிந்தித்திருக்கும் பெருமை வாய்ந்தோரே சிவஞானிக ளாவரென்பது இதனுற் றெளியப் படும். சிவஞானிகளும் உயிர்கட்கு இன்னல் கண்டுழி உதவி புரியாதிரா ரென்பது தெளிவு. உயிர்கட்குத் துன்பம் நேர்தலைக் கண்டபொழுது தம்மாலியன்ற உதவி யைப் புரியாது தமது கண்ணை மூடிக்கொண்டு சிவத்தியானம் செய்வார் போன்றிருப்போர் ஞானிகளல்ல ரென்பதும் இதனுற் றெளியப்படும். இறந்த உயிரினை எழுப்புதற்கு நாயனூரது அருட் பாடல்களே சிறந்த மந்திரங்க

ளாயின. அத்தகைய மந்திரங்கள் அடங்கிய திருமுறைகள் பிறநூல்களினும் சிறந்தனவா மாதலால் 'கண்ட பெருமந்திரமே மூவர்பாடல் கைகாணு மந்திரம் கண்ணுதலோன் கூறல்' என்ற திருவாக் கெழுந்தது. ஆதலால் இத் திருமுறைகளின் பெருமையை யுணர்ந்து சைவ மக்கள் அவைகளை எவற்றினும் விழுமியனவாகப் போற்றற்பாலர்.

சிலர் அற்புதங்களை நம்புவதில்லை. அதற்கு ஓர் காரணம், உலகத்தோடு இரண்டறக் கலந்து நின்று அதனை நடத்தும் ஒரு முதல்வன் உளனென்ற உறுதியும் அவன் தனது மெய்யன்பர்க்கு வேண்டியதை வேண்டியாங் கீயும் பெருங் கருணையாளனென்ற உணர்ச்சியும் இன்மையே. மேலும், பூதங்களின் தோற்றவொடுக்கங்களின் இயல்பை முற்று மறியாமல் அவை இறைவனாலும் மாற்றமுடியாத ஒரு தன்மையனவென்று நம்பும் தப்புக் கொள்கையைக் கடைப்பிடித்து, 'சித்தஞ் சிவமாகவும் செய்தனவே தவமாகவும்' பெற்ற மெய்யன்பரது இலக்கணத்தை உணராமையுமாம். அன்பர்கள் நினைத்தால் பூதங்கள் நிலைமாறுமென்பது,

வல்லவண்ணம் வான்கலைசை வானவர்க் கடித்தொழில்
அல்லுமெல்லு மாற்றுமன்பர் வேண்டிலஞ்சு பூதமு
மொல்லைமாற்றி வேறுசெய்ய வல்லரும்பர் மாலயன்
றெல்லைவான் பதங்களுந் துரும்பெனக் கழிப்பரே

(கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி செ. ௨௫)

என்ற சிவஞானசுவாமிகள் திருவாக்கால் இனிது விளங்கும்.

துரும்பும் படைத்தளிக்கும் அகிலாண்டத் தொகுதியையே

என்று குமரகுருபரசுவாமிகள் கூறியதுங் காண்க.

யாதொரு வகையான மருந்தும் மந்திரமும் பார்வையும் கைக்கொள்ளாமல் திருவருள் ஒன்றினையே நமது நாயனர் வேண்டிப்பாடினர். உடனே மகன் உயிர்பெற்றெழுந்தான். இதனைச் சித்தர்நூல் வல்லார் ஞானசித்தியென்பர். ஞானிகளுக்கே இவ்வகை சித்து இயலும். அவரது உள்ளத்தே இறைவன் எப்போதுங் கலந்து நின்று யாதொன்று கருதினும் அதனை உடனே நிகழும் வண்ணம் அருள்வன். இதுவும் நாயனரது உயர்ஞான நிலைக்கு ஓர் சான்றாகும்.

## ௯. பிற பதிகள் சென்று போற்றல்

திங்களூரிலும் திருப்பழனத்திலும் சிலகாலந் தங்கிய பிறகு திருநாவுக்கரசர் தமது சென்னிமேற் றிருமுடிசூட்டிய பெருமான் உறையும் நல்லூர்க்கு மீண்டனர். அவண் சின்னாள் வதிந்த பின்னர் திருவாரூர் தொழ நினைந்து, நல்லூர்ப் பெருமானிடம் விடைபெற்றுப்போய், பழையாறை, திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு, தென்றிருச்சேறை, குடவாயில், திருநறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர் முதலிய பதிகளை வணங்கித் திருவாரூர் வந்தடைந்தார். அங்கே அப்பதியிலுள்ளார் யாவரும் தமது மாளிகைகளையெல்லாம் அணிபுறச்செய்து ஊர்ப்புறஞ் சென்று திருநாவுக்கரசு நாயனாரை எதிர்கொண்டார்கள். அப்போது திருப்பதி எல்லையை வணங்கித் 'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே' என்ற முடிபுடைய திருப்பாடற் பதிகத்தைப் பாடிக்கொண்டு அடியார் குழாத்துடன் திருவீதி அணைந்து திருக்கோயிற்குமுன் உள்ள திருத்தொண்டர் பெருமன்றமாகிய தேவாசிரியன் மண்டபத்தை வணங்கித் திருக்கோயிலுட் புகுந்து புற்றிடங்கொண்டாரை நேரே தொழுதனர். 'காண்டலே கருத்தாய் நினைந்து' என்னும் திருத்தாண்டகம் பாடி ஆராத காதலுடன் திருமூலட்டானரைப் பணிந்து திருக்கோயிலை வலம் வந்து வெளிப்போந்து தேவாசிரியன் பாங்கர் அமர்ந்து தாம் சமண் சமயம் புக்குக் கொன்னே பன்னாட் கழித்ததை நினைந்து பரிவுகூர்ந்து திருப்பதிகம் அருளிச் செய்தார். அப்பதிகத்தின் முதற்பாட்டு வருமாறு:

*மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த*
*மேனியான்றாள் றொழாதே*
*உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி*
*யுழிதந்தென் னுள்ளம்விட்டுக்*

கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே.

பின்னர் அவண் சின்னாட் டங்கி, மனமொழிமெய்களால் தமது செவ்விய திருத்தொண்டுகளைச் செய்து,

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவு மதுர வாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமு முழவாரத்
தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார். (செ. உஉரு)

அவ்வூரில் திருத்தொண்டியற்றிய பெருமை வாய்ந்த நமிநந்தியடிகளைத் தமது திருவிருத்தத்துடன் வைத்துப் பாடி யருளினர். அப்பதிக் கருகிலுள்ள திருவலிவலம், திருக்கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் முதலிய தலங்களைப் பணிந்து மீண்டுந் திருவாரூர் வந்து சேர்ந்து திருவாதிரை நாளிலே வீதிவிடங்கப்பெருமானது பவனியினைச் சேவித்து அதனைத் தமது திருத்தாண்டகத்தினுள் சிறப்பித்தனர்.

பின்னர், திருப்புகலூர் அமர்ந்தருளும் சிவபெருமானை வணங்கும் விருப்புடன் திருவாரூரினைத் தொழுது அரிதின் நீங்கி அப்பதிக்குச் சென்றார். ஆயகாலை ஆளுடைய பிள்ளையார் அவண் அந்தணர் தலைவராகிய முருகனார் திருமடத்தில் தங்கியிருந்தார். திருநாவுக்கரசு எழுந்தருளி வருகின்றாரென்று கேள்வியுற்றுத் தமது அடியார் குழாத்துடன் ஞானசம்பந்தப்பெருமான் அவரை எதிர்கொள்ளச் சென்றார். இருவர் பெருந்தகையாளருடைய திருநீற்றுத் தொண்டர் குழாங்களும் ஓரிடத்திற் சேர்ந்து சிவ

நாம முழக்கியபோது நிலாக்காலத்திலே இரண்டு கடல்கள் ஒன்ருகி அணைந்தனபோலத் தோன்றின. இருவரும் ஒருவரை யொருவர் கண்டு வணங்கியபின் ஆளுடைய பிள்ளையார் அப்பரை நோக்கி, 'நீர் திருவாரூரில் கண்ட சிறப்பை வகுத்துரைப்பீராக' என்ருர். திருவாரூர்ச் சிறப்பை 'முத்துவிதானம்' என்று தொடங்கும் திருப்பதிகத்தால் எடுத்துரைத்தார். அம்மொழிகேட்ட பிள்ளையார் தாமும் திருவாரூர்ப் பெருமானைக் கும்பிட்டு மீள்வதாகக் கூறிச் சென்றனர். திருநாவுக்கரசர் புகலூரில் தங்கி அளவில்லாத ஆர்வத்துடன் அங்கு வீற்றிருந்த பெருமானைப் பாடிப் பணிசெய்திருந்தார். திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, அயவந்தி, திருமருகல் முதலியதலங்களையும் வணங்கினுர். பின்னர் ஞானசம்பந்தப் பெருமான் திருவாரூரிலிருந்து மீண்டு புகலூருக்கு வந்தனர். அவரைச் சொல்வேந்தர் எதிர்கொண்டார். இருவரும் அங்கு உடனுறையு நாளில் சிறுத்தொண்டரும் திருநீலநக்கரும் அவ்விடம் வந்தார்கள். இவர்கள் யாவரும் அவ்வூரிலுள்ள அந்தணர் திலகராகிய முருகநாயனுர் திருமடத்தில் அடியார் பலருடனும் வதிந்து திருப்பதிகச் செந்தமிழின் திறத்தையும் அடியார்கள் பெருமையையும் தம்முள் விரித்துரைத்து மகிழ்வுற்று ஒருமை சான்ற மனமுடையவர்களாய் உடனுறைவின் பயன் பெற்ருர்.

> திருப்பதிகச் செந்தமிழின் றிறம்போற்றி மகிழ்வுற்றுப்
> பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பொற்ருளில்
> விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
> கொருப்படுசிந் தையினர்க ளுடனுறைவின் பயன்பெற்ருர்.
>
> (செ. ௨சச)

பின்னர் திருநீலநக்கர், சிறுத்தொண்டர், முருகர் முதலிய அடியார்கள் விடைபெற்றுச் செல்ல, ஆளுடைய பிள்ளையாரும், அரசரும் திருவம்பர்மாகாளம் வணங்கித்

திருக்கடவூர்க்குச் சென்று கூற்றுதைத்த பெருமான் அடிகளை ஏத்தித்தொழுது குங்கிலியக்கலயநாயனர் திரு மடத்தில் சிவனடியாருடன் அமுது செய்தார்கள். பின் திருக்கடவூர்மயானம், திருவாக்கூர் முதலிய தலங்களை வணங்கிச் சென்று திருவீழிமிழலை சேர்ந்தார்கள். அவ் விடத்தில் அடியார்களும் அந்தணர்களும் திருவீதிகளை அலங்கரித்து வீடுகள் தோறும் நிரை விளக்கேற்றி, கமுகு வாழை முதலியவற்ருல் தோரணங்கட்டி நிறை குடம் (பூர்ணகும்பம்) எடுத்துச் சைவநெறித் தலைவர் இருவரையும் எதிர்கொண்டு வரவேற்றனர். அங்கே விற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி மிக்க பேரன் போடு உய்யுநெறித் திருத்தாண்டகம் ஓதினர். அப்பதி யிலே இருவரும் சிலநாள் தங்கினர்.

அக்காலத்தே மழை சுருங்கிக் காவிரிப்பெருக்கும் அற்றுக் காலநிலையும் மாறியதால் உயிர்கள் பலவும் வறுமையினுல் வருந்தின. நாடெங்கும் கருப்பினுல் மக்கள் அளவற்ற துயரக் கடலில் ஆழ்ந்தனர். பிள்ளையார்க்கும் அரசர்க்கும் கனவில் சிவபெருமான் எழுந்தருளி, 'கால நிலைமையால் நீங்கள் மனவாட்டம் அடையமாட்டீ ரென் ருலும், உங்களை வழிபடுகின்றவர்களின் பொருட்டு அருள் செய்கின்ருேம்' என்று கூறித் திருக்கோயிலிலுள்ள விண்ணிழி விமானத்தின் கிழக்கும் மேற்கும் உள்ள பீடங்களின் படிக்காசு வைத்தருளினுர். அப் படிக்காசு களைக்கொண்டு பலவகையான வளங்களை அமைத்து அடி யார்கள் எல்லாரும் வந்து உணவு கொள்ளும் பொருட்டு இரண்டு பொழுதும் பறைசாற்றி அன்னமளித்து வறுமை யைத் தொலைத்தார்கள்.

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற்
பெற்ற படிக்காசு

பல்லா றியன்ற வளம்பெருகப் பிரம
　　னடியா ரானார்கள்
எல்லா மெய்தி யுண்கவென விரண்டு
　　பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர்
　　வறுமை தொலைத்திட்டார். (செ. உருக)

ஞானசம்பந்தப்பெருமான் பொருட்டு வைத்த படிக்காசு வாசியுள்ளதாயும், உழவாரத் தொண்டுசெய்யும் அரசர் பொருட்டு வைத்த படிக்காசு வாசியில்லாததாயுமிருந்தன. அக் காசுகளைக்கொண்டு அமுதுபடைக்க வேண்டியன வெல்லாங் கொள்ளச் சென்ற திருமடத்துத் தொண்டர்கள் ஞானசம்பந்தரிடஞ் சென்று வாசி தீர்ந்த காசு வேண்டுமென்றும், வாகீசர் பெற்ற காசையே வணிகர் பேணினரென்றும் கூறினார்கள். அப்போது புகலியர்கோன் திருநாவுக்கரசர் பெருவாய்மையை நினைந்து யானும் வாசிதீரப் பாடுவனென்று மனத்துட் கொண்டனர்.

திருஞான சம்பந்த ரதனைக் கேட்டுச்
　　சிந்திப்பார் சிவபெருமா னமக்குத் தந்த
ஒருகாசு வாசிபட மற்றக் காசு
　　நன்றாகி வாசிபடா தொழிவா னந்தப்
பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டாற்
　　பெறுங்காசா மாதலினாற் பெரியோன் றன்னை
வருநாள்க டருங்காசு வாசிதீரப்
　　பாடுவனென் றெண்ணியது மனத்துட் கொண்டார்.
(திருஞானசம்பந்தர் புராணம் செ-ருசுக)

மறுநாள் தம்பிரான்கோயில் புக்கு பதிகம்பாடி வாசி தீர்ந்த காசு பெற்றார்.

வாசிதீரவே காசுநல்குவீர், மாசின்மிழலையீ ரேசவில்லையே.

இருவருடைய திருமடங்களிலும் உண்ண வுண்ணக் குறையாமல் பொருள்கள் பெருகிக்கொண்டிருந்தமையால் உலகினர் யாவரும் இன்புற்றுத் திருவருளைப் பாராட்டினார்கள். பஞ்சமும் நீங்கி, மழை பொழிந்து நிலங்குளிர்ந்து விளைபொருள்கள் சிறந்தன. மூல அன்பர்களிருவரும் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து பிற சிவதலங்களை வணங்கச் சென்றனர். திருவாஞ்சிய முதலிய திருப்பதிகளை வணங்கி எல்லையில்லாத புகழுடைய இருவரும் திருமறைக்காடு சேர்ந்தனர்.

அத்திருப்பதியிலே முன்னொரு காலத்திலே பண்டை மறைகள் பரமனை வணங்கிக் காப்பிட்ட திருக்கோயிற் கதவங்கள் திறக்கப்படா திருந்தமையால் வழிபடுகின்றவர்கள் வேறுவழியாகத் திருக்கோயிலுட் சென்று வருவதைச் சைவநெறித் தலைவரிருவரும் கேள்விப்பட்டனர். அக் கதவங்களின் முன் இருவருஞ் சென்றகாலை ஞானசம்பந்தப் பெருமான் அப்பர் சுவாமிகளைப் பார்த்து, 'இக் கதவங்கள் திறக்கும்படி நீவிர் பாடுவீராக' என்றனர். உடனே 'பண்ணினேர் மொழியாள்' என்றெடுத்துப் பாடவும், அப்பதிகத்தின் நலனை முற்றும் நுகரக்கருதிய பெருமானார் அதன் பத்தாம்பாட்டுத் தொடங்கப் பெற்றும், திருக்காப்பு நீக்காது காலந்தாழ்த்தது கண்டு இறுதிப்பாட்டில், 'இரக்கமொன்றிலீர்' என்ற சொற்றொடர் அமைத்துப் பரிவுடன் வணங்கினர்.

உண்ணீர் மையினாற் பிள்ளையா ருரைசெய்
 தருள வதனாலே
பண்ணி னேரு மொழியாளென் றெடுத்துப்
 பாடப் பயன்றுய்ப்பான்
றெண்ணீ றணிந்தார் திருக்காப்பு நீக்கத்
 தாழ்க்கத் திருக்கடைக்காப்
பெண்ணீ ரிரக்க மொன்றில்லீ ரென்று
 பாடி யிறைஞ்சுதலும் (செ. உசுஅ)

உடனே திருக்காப்பு நீங்கிற்று. அவ்வாறு நீங்கிய செய லானது, தாம் பூசை நிகழ்த்திய காலத்து திருச்சிலம் பொலி கேட்கப் பெறுமல் உயிர்நீக்கத் துணிந்த கழறிற்றறி வார் நாயனுருக்கு, அகங்குழைந்துபாடும் சுந்தரமூர்த்திசுவாமி களின் அருட்பதிகச் சொல்வழி செவிசாய்த்த நடேசப் பெருமான் தனது சிலம்பொலி காலந்தாழ்த்துக் கேட்க அருளினமையை யொக்கும். அதைக் கண்ணுற்ற எல் லோரும் பெருமகிழ்ச்சியுடன் தொழுது தாழ்ந்திறைஞ்சிக் கடலொலியிலும் மிகும்படி மறையொலி முழக்கினுர்கள். தலைவரிருவரும் இன்ப வெள்ளத்துள் மூழ்கி உட்சென்று முதல்வரை உருக்கத்துடன் பாடி வணங்கி வெளிப்போந் தனர். புகலியர்கோனைத் திருக்கதவு அடைக்கும்படி பாட வேண்டுமென்று அப்பர் கேட்டுக்கொள்ள அவர் தமது பதிகத்தின் முதற்பாட்டைப் பாடியவுடன் விரை வில் திருக்காப்பு நிகழ்ந்தது. அதுமுதற்கொண்டு அவ் வாயில் வழியாக அடியார்கள் செல்வது வழக்கமாயிற்று. பெருந்தகையா ரிருவரும் திருமடத்திற்குச் சென்றபின் மெய்யன்பராகிய திருநாவுக்கரசர் தாம் பாடியபோது அரிதில் திறந்ததையும் பிள்ளையார் பாடியபோது எளிதில் காப்புச் செய்ததையும் நினைந்து இறைவரது திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன் எனக் கவலையுற்று அச்சத்துடன் திருமடத்தில் ஒருபால் அணைந்து துயில்கொண்டார். அப் போது மறைக்காட்டு மணுளர் அழகுறத் திருநீறணிந்த மேனியோடு அவருக்குத் தோன்றி, 'நாம் வாய்மூரிலிருப் போம், தொடர்ந்துவா' வென்றனர்.

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினுர்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனுர்
அங்கே வாவென்று போனுர தென்கொலோ (தேவாரம்.)

என்று அருளியது காண்க.

உடனே அரசரும் இது கடவுள் அருளாகில் தாமும் போவதாகப் புறப்பட்டுத் திருமறைக்காட்டிற்கு வெளியே செல்ல, சிவபெருமான் முன்னே காட்டிய தமதுவேடத்தை மீளவுந் தோற்றுவித்தார். அவரைப் பின்றொடர்ந்து செல்லச்செல்ல அவரை எட்ட அரசர்க்கு முடியவில்லை. சிவபெருமான் அணித்தாகக் காட்சி கொடுப்பார்போல ஒரு திருக்கோயிலைக் காட்டி அதனுட் புகுந்து மறைந்தார். அப்பர் திருமடத்தினின்றும் புறப்பட்டுச் சென்ற செய்தி கேட்ட புகலியர்கோனும் அவ்விடம் வந்தார். அப்போது அப்பமூர்த்திகள், 'நயமறியாது தப்பாகத் திருக்கதவு திறப்பித்த எனக்கு ஒளிப்பது தகுதியானாலும் உறுதியான அன்போடு அடைப்பித்த பெருமை யுடையார் இவணுள்ளார் அவருக்கு மறைவதெப்படி' என்று கூற, அவ்வாறே அவருக்குக் காட்சி கொடுத்தருள, அவர் கடவுளுடைய ஆடல்கண்டு பணிந்தேத்தி, அதனைத் திருநாவுக்கரசருக்குங் காட்டினார். அவருங் கண்டு, 'பாட அடியார்' என்ற பதிகம் பாடியருளினார். பின்னர்த் திருவாய்மூரை அடைந்து அங்கே கடவுளைத் தொழுது சிறிதுகாலம் உடனுறைந்து மீண்டும் இருவரும் திருமறைக்காட்டிற்கு வந்தனர்.

அப்போது பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டிமன்னனது மந்திரியாகிய குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் ஞானசம்பந்தர்பால் வந்து வணங்கினார்கள். புகலியர்கோன் செய்தி நலன் உசாவியபோது அவர்கள் உலகமுய்ய வந்த உம்முடைய இருதாள்களையும் நினைவார்கட்குத் தீங்குமுளவாமோவென்று கூறிச் சமணரால் சைவர்க்குப் பாண்டிநாட்டில் விளையும் இடுக்கண்களை எடுத்து உரைத்தனர். உடனே ஆளுடையபிள்ளையார் அச்சமணர் செயலை மாற்றி, சைவநெறி விளக்கக் கருதித் திருநீறு கைபிற்கொண் டெழுந்தார்.

சைவ நெறிவை திகழிற்கச்
சழக்கு நெறியைத் தவமென்னும்
பொய்வல் லமணர் செயறன்னைப்
பொறுக்க கில்லோ மெனக்கேட்டே
அவ்வன் றொழிலோர் செயன்மாற்றி
யாதி சைவ நெறிவிளக்கத்
தெய்வ நீறு நினைந்தெழுந்தார்
சீர்கொள் சண்பைத் திருமறையோர். (செ. உஅசு.)

திருநாவுக்கரசர், ஞானசம்பந்தரை நோக்கி, 'அமணர் தமது மாயவன்மையினுற் பல தீங்கிழைத்தல் கூடும்; ஆதலால் நீர் அவண் செல்ல இசையேன்' என்ருர். அப்போது பரசமய கோளரியார், 'திருநீற்றினைப் பேணும் இருவரையுங் காணுங் கருத்துடையேன். அங்குச்சென்று அமணர் வலியழித்துச் சைவநெறியை நிலைநாட்டாமல் ஒன்றுஞ் செய்யேன்' என்று ஆணையிட்டுக் கூறவே, அரசர் தாமே ஆண்டேகி அவ்வமணர் தீமையையொழித்து வருவதாக முற்பட்டார். அதற்குப் பிள்ளையார் இசையாமையால் அரசரும் அவரை மறுக்காதிருப்ப அவர் தமிழ்நாட்டிற்குப் போய்விட்டார். பின் அப்பமூர்த்திகள் திருவீழிமிழலைக்குச் செல்லக் கருதி வேதவனப்பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு திருநாகைக்காரோணம் முதலிய தலங்களைத் தொழுது அப் பெரும்பதியை நணுகினர்.

திருமறைக்காட்டில் பண்டைமறைகள் பூசித்தடைத்த திருக்கதவம் என்றதனுல் முற்காலத்து மந்திர நூல்வல்ல மாமுனிவர் வழிபட்ட இடம் அத்தலம் என்பதும், அவர்கள் திருவருள் விளக்கம் குறைவுபடாமற்பொருட்டாதல் பிறகாரணம் பற்றியாதல் திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு நேராயுள்ள திருக்கதவங்களை அடைத்து வைத்திருத்தல் கூடுமென்பதும், அவ்வாறு அடைக்கப்பட்ட கதவங்கள் சிவஞானிகளாய மெய்யன்

பர்களாலேயே அருளொளிக்கு ஊனமின்றித் திறக்கப்பட வேண்டுமென்பது அவர்கள் திருவுள்ளக்குறிப்பாமென்பதும் ஊகித்தறியக்கிடப்பன.

இனி, பிள்ளையார் கேட்டுக்கொண்டபடி அப்பர் சுவாமிகள் பாடியபோது திருக்கதவம் திறக்கக் காலந் தாழ்ந்தமைக்குக் காரணம், அவரது உருக்கமாகிய திருப் பாடல்கள் முற்றும்வரை அவற்றை யாவருங் கேட்டு இன்புறுதற்கு இடையூறுகாத வண்ணம் சிவபெருமான் திருக்கதவந் திறப்பித்திலர் என்பது ஓர் கொள்கை. பிள்ளையார் தாழ்ந்த மனத்தோடு அப்பமூர்த்திகளைத் தமக்குப் பெரியரென்ற கருத்துடன் பாடும்படி கேட்டன ரென்பது, 'உண்ணீர்மையினால் பிள்ளையா ருரைசெய் தருள' என்றமையால் விளங்கும். அப்பமூர்த்திகளும் அவ்வாறு பிள்ளையாரைத் திருக்கதவந் திறப்பிக்கக் கேட் டுக்கொள்ளாமையால் இறைவர் திருக்கதவத்தை உடனே திறக்கச்செய்திலரென்பதும் மற்றொரு கொள்கை. அத னைத் தமது குறையாகவே அப்பமூர்த்திகள் உணர்ந்தனர். அன்பர் திருவுள்ளக்கருத்து ஒருசிறிது வேறுபடினும் அதற்குத் தக்கவாறு அருள்செய்தல் கடவுளியல்பு. திரு வீழிமிழலையில் வாசிதீராக் காசை ஞானசம்பந்தர்க்கு நல்கியதற்கும் இதுபோன்ற காரணமே கொள்ளற் பாலது. திருவருட்கு உரியராயிருந்தும் அதற்குச் சேயார் போலத் தம்மைக் கருதித் தன்னுணர்ச்சி எய்தினமையே திருவாய்மூரில் நடந்த செய்திகளுக்குங் காரணமாகும். அங்ஙனம் எய்தாத புகலிவள்ளலார்க்குத் தம்மைச் சிவ பெருமான் முற்காட்டியதும் இக்காரணத்தை வலி யுறுத்தும்.

இனி, அப்பமூர்த்திகள் ஆளுடையபிள்ளையார்பால் வைத்த அளவுகடந்த பெருநட்பே அவரைப் பாண்டி நாட் டிற்குப் போகக்கூடாதென்று சொல்லித் தடுத்தமைக்குக்

காரணமாகும். இதை ஆசிரியர் சிவஞானசுவாமிகள் திருக்குறட்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஓர் வெண்பாவில் அமைத்துள்ளார்கள்.

வாக்கரசர் பிள்ளா யெனவலித்து மாற்றலுற்றார்
தூக்குபிள்ளை யார்செலவைச் சோமேசா—நோக்கி
நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(சோமேசர்முதுமொழிவெண்பா எக)

சமணர்க்கு அஞ்சிச் சைவத்தைப் பரவச்செய்ய வேண்டாமென்ற கருத்து அப்பர்சுவாமிகட்கில்லை. அது ஞானசம்பந்தர்க்குப் பதிலாகத் தாமே மதுரைக்குச் செல்ல முன்வந்தமையால் இனிது விளங்கும். சம்பந்தமூர்த்திகளுக்கு ஓர் இடையூறும் வராது என்று அப்பமூர்த்திகள் அறிந்திருந்தும், அவ்விடையூறுகளின் தோற்றந்தானும் அவர்க்குப் புலனுதல் கூடாதென்பதே இவர் கருத்தாமாதலின் தடைசெய்தாரென்க.

போமா துணிந்து நீரங்குப் போகப் போதா வல்லமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின் றேனென்ன

(செ. உஅக)

என்றது காண்க. ஞானசம்பந்தரும் தாம்போவது திண்ணமென்றும் அதனைச் சொல்வேந்தர் தடுத்தல் கூடாதென்றும் குறிப்பித்தற்கு 'ஆணை உமது' என்று அறுதியிட்டுரைத்ததும் அன்புபற்றியே யாமென்க. ஆணையென்ற சொல்லால் உறுதியும் மெய்ம்மையும் உணர்த்தும் வழக்கு அக்காலத்தும் நடப்பிலிருந்ததாகத் தெரிய வருகிறது.

என்று கூற வெல்லையிலா நீறு போற்று மிருவரையுஞ்
சென்று காணுங் கருத்துடையே னங்குத் தீங்கு புரியமணர்

நின்ற நிலைமை யழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ் செய்யே னெணையும தென்று ருடைய பிள்ளையார்.

(செ. உஅ)

திருநாவுக்கரசர் ஞானசம்பந்தரைப் பிரிந்தபின் திருவீழிமிழலையை வணங்கிச் சென்று திருவாவடுதுறையை யடைந்து அத்தலத்தில் ஞானசம்பந்தர்க்கு ஆயிரம்பொன் கொடுத்த அற்புதத்தைப் புகழ்ந்து பாடிப் பின் பழையாறு எய்தினர்.

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர் போலுங்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறையனாரே.

(தேவாரம்)

அவ்வூர் வடதளியில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கும்பிடச் சென்றகாலை சமணர்கள் ஓர் பொய் விமானத்தால் அங்குள்ள சிவலிங்க வடிவத்தை மறைத்திருப்பதைக் கேட்டு மிகவும் மனம் புழுங்கி அந்த விமானத்தின் பக்கத்தில் ஓர் இடத்தில் இருந்துகொண்டு அங்குள்ள மூர்த்தியை நேரே வழிபட்டாலன்றித் தாம் அமுது செய்வதில்லையென்ற உறுதியோடே அந்த அமணரது வஞ்சனையை மாற்றும்படி இறைவரை வேண்டினர். இறைவரும் அவ்வூர் மன்னற்குக் கனவிற்றோன்றி, சமணர் மறைத்திருக்கும் இடத்திற்கு அடையாளங்களை அறிவித்துத் திருநாவுக்கரசர் தம்மை வணங்கும்படி அமணர்களை அழித்துப் போக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அரசன் விழித்தெழுந்து திருவருளைத்தொழுது மந்திரிகட்கு அதனைக் கூறி, கடவுள் மொழிந்தபடியே அடையாளங்களைக் கண்டு அமணர் கூட்டத்தையே வேரறுக்கத் தொடங்கி யானையினால் சமணர் ஆயிரவரையும் பொன்

றழித்தான். சிவலிங்கப் பெருமானுக்குப் புது விமானம் அமைத்துப் பூசனைக்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் வகுத்தனன். ஞான அரசரும் அங்கே சென்று முதல்வரை வணங்கி, சமணரால் இறைவர் மறைக்கப்படார் என்னுங் கருத்தையுடைய குறுந்தொகை பாடியருளினர்.

தலையெலாம் பறிக்குஞ் சமண் கையருள்
நிலையி னுன்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னர்பொழி லாறை வடதளி
நிலையி னனடி யேநினைந் துய்ம்மினே. (தேவாரம்.)

பின்னர் காவிரியின் இருகரையிலுமுள்ள திருக்கோயில்களை வணங்கிப் பாடி அன்பர்கள் பலரும் தம்மை எதிர்கொள்ளத் திருவானைக்காவினை யடைந்தார்.

பழயாறையிலே சமணர்கள் பொய்விமானம் அமைத்துச் சிவலிங்கப்பெருமானை மறைத்ததற்காக அரசன் அவர்கள் ஆயிரவரையும் யானையினால் மிதியுண்டு இறக்கும்படி ஏற்பாடு செய்தமையை நோக்கும்போது அவர்கட்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. அவர்கள் செய்த பெருங் குற்றத்தைக் கண்டு திருநாவுக்கரசரது உள்ளம் புழுங்குதலாயிற்று. மெய்யன்பர்கள் இறைபணி இயற்றுங்கால் அதற்கு இடையூறாக உள்ளனவற்றை வெறுப்பார்கள். அவர்கள் கருதிய வண்ணமே அருள்புரியுங் கடவுள் அவர்கட்கு இடையூறு விளைப்பார் யாவராயிருந்தாலும் பெருந்தண்டம் விளைப்பர் என்பது,

ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே.

என்ற திருமந்திரத்தால் அறியப்படும். நமது நாயனர் அம

ணர்களுடைய திறத்தைப் பாற்றவேண்டுமென்று கேட்டனரேயன்றி அவர்களைக் கொன்றழிக்க வேண்டுமென்று கேட்கவில்லை.

மந்த வமணர் வஞ்சனையான்
மறைத்த வஞ்ச மொழித்தருளிப்
பந்தங் கொண்ட குண்ர்டதிறம்
பாற்று மென்று பணிந்திருந்தார். (செ. உகரு)

அவர் அமுது செய்யாதிருந்ததை அவர்பாற் பேரருளுடைய கடவுள் பொறுராதலின் மன்னனுக்குக் கனவிற் ரோன்றி, "நம்மை அரசுகும்பிடுவான் நெறியிலமணர்தமை அழித்து நீக்கிப்போக்கு" என்றருள்புரிந்தார். தந்நெறியில் நில்லாது பிறநெறிக் கடவுள் நிலையங்களுக்குத் தீங்கிழைத்தமையால் 'நெறியிலமணர்' எனப்பட்டனர். தமது நெறி தவறிச் சிவனடியார் உள்ளம் கன்றும்படியாகத் தீங்கிழைப்பார்க்கு இறைவர் தண்டனை அமைப்பரென்பதும் இதனால் வெளியாகின்றது. கடவுளே நேரேவந்து குறையறிவிக்கப் பெற்ற அரசன் அறிவு கலங்கப்பெற்றுச் சினமீக் கூர்தல் இயல்பாதலின் 'செறிவிலறிவுற்று' என்றார் ஆசிரியர் சேக்கிழார். சிவனடிப்பேரன்பு காரணமாகத் திருக்கோயிற்கு இடுக்கண் செய்வார்பால் சிவஞானிகட்குத் தடுத்தற்கரிய வெகுளி எழுவது இயல்பாதலால் சமணர்க்கு நேர்ந்த தண்டனையை நமது நாயனர் விலக்காராயினர். சிவபெருமானது அருவுருவ மேனியை மறைத்தது காரணமாகத் தமக்கெழுந்த வெகுளியைத் தமது திருப்பதிகத்தின்கண் குறித்தமைகாண்க. இவர்க்கு வெகுளி நேர்ந்தமைபோலவே சண்டேசுரநாயனர் முதலிய பேரன்பர் பலர்க்கும் நிகழ்ந்தது காண்க.

சம்பந்தப்பெருமானும் சிவனடியாரது பெருங்குழாத்திற்குத் தீங்கிழைத்த ஒரே காரணம் பற்றியே சமணர்

கள் தமக்குத்தாம் விதித்துக்கொண்ட தண்டனையை விலக்காராயினர். சிவபெருமானது திருவடிவங்கட்கு ஊறு கண்ட காலை அன்பர்கள் அவற்றைப் பொருது வெகுளலும் அன்பர்க்கு நேரும் இடையூறுகளைச் சிவ பெருமான் பொருது நீக்குதலும் அவர்களது அன்பின் சிறப்பையும் அதற்கு எளிவந்துதவும், திருவருட் சிறப்பை யும் நம்மவர்க்கு உணர்த்துவனவாகும். ஆதலால் அது பற்றிச் சிவபெருமானையும் சிவனடியார்களையும் குறை கூறுதல் தவறு. 'சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால் நலமிலன்' என்றதும், 'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்' என்றதும் இவ்வுண்மையை வற்புறுத்தும். சிவ பெருமான் தன்னைச் சார்ந்த அடியார்களைத் தானுகச் செய்து அவர்கள் வினையைக் கெடுத்தலால் அத்தகைய அடியார்களை வினையென்பது பற்ருதொழியும். ஆதலால் அவர்களது வெகுளி காரணமாக அவர்களுக்கு நிகழ்வ தோர் இழுக்கி யாதுமில்லை யென்றறிக.

## ௰. திருக்கயிலைத் திருக்கோலக்காட்சி

நமது நாயனுர் திருவானைக்காவில் வீற்றிருக்குஞ் சிவபெருமானைப் பாடித் தொழுதபின் திருஎறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை முதலிய தலங்களை வணங்கிப் பாடித் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்வாராயினுர். அப்போது வழிநடந்த களைப்பினுல் பசியும் நீர் வேட்கையும் மிகுதிப்படவும் அவற்ருற் சிறிதும் மனங் கவலாது முற்செல்ல, பைஞ்ஞீலிப்பரமர் தமது தொண்டர்க் குண்டாகிய வருத்தத்தை நீக்கும்பொருட்டு ஒரு சோலையும் குளமும் அமைத்துக் காட்டித் திருநீறு அணிந்த அந்தணர் வடிவத்தோடு பொதிசோறு எடுத்துக் கொண்டு சொல்வேந்தர்க் கெதிரே தோன்றினுர். அவ் வேதியர் மருங்கு அரசர் எழுந்தருளியவுடன் வேதியர் அவரை நோக்கி, 'நீர் மிகவும் வழிவந்து இளைத்திருக் கின்றீர். என்னிடமுள்ள கட்டமுதினை யுண்டு இந்தக் குளத்தில் தண்ணீர் பருகிச் செல்வீராக' என்றனர். அப்பமூர்த்திகள் அதுவும் திருவருளென்று துதித்து அந்தணர் கொடுத்த பொதி சோற்றினை உண்டு தண்ணீர் பருகித் தளர்வு நீங்கினுர். அப்போது மறையவர் அவரை நோக்கி, 'நீர் எங்கே போவது ? என்ருர். திருப்பைஞ்ஞீலிக்குப் போவதாக அவர் கூற, அந்தணரும் தாமும் உடன் செல்வதாகக் கூறிப் போந்தனர். திருப்பைஞ்ஞீலிக்கு அருகில் வந்தவுடன் அந்தணர் மறைந்துவிடவும் அது சிவபெருமானது அருட் செயலென்று சுவாமிகள் கண்டு திருவருளை வியந்து பாடிக் கண்மாரி பெய்தனர். திருப்பைஞ்ஞீலியில் தங்கிச் சிலநாள் திருத்தொண்டு செய்த பின், சிவபெருமான் கோயில்கொண்ட திருமலைகளை வணங்கக் கருதித் திருவண்ணுமலையினை யடைந்து அங்கே தமக்கு நேர் நின்ற பெருமானை வணங்கிப் பிறப்பே

வீட்டிற்குமேலாம் பெருமையைத் தமது திருப்பதிகத்தில் பெறவைத்தார்.

ஓதிமா மலர்கடுவி யுமையவள் பங்காமிக்க
சோதியே துளக்குமெண்டோட் சுடர்மழுப் படையினனே
ஆதியே யமரர்கோவே யணியணு மலையுளானே
நீதியா னின்னையல்லா னினையுமா நினைவிலேனே.

உருவமு முயிருமாகி யோதிய வுலகுக்கெல்லாம்
பெருவினை பிறப்புவீடாய் நின்றவெம் பெருமான்மிக்க
அருவிபொன் சொரியுமண்ணு மலையுளா யண்டர்கோவே
மருவிநின் பாதமல்லான் மற்றொரு மாடிலேனே.

(தேவாரம்)

பின் தொண்டைநாட்டிற்குச் சென்று திருவோத்தூர்ப் பெருமானை வணங்கித் திருத்தாண்டகங்கள் பாடிக், காஞ்சிமா நகரத்தை யணுகினர். அந்நகரவாசிகளெல்லாம் கதிரவனைக்கண்ட காலைக்கமலம்போல் முகமலர்ந்து தமது பெரும்பதியை, தோரணம் கொடி முதலியவற்றால் அழகு பெறச் செய்து நாயனாரை வரவேற்றனர். அவரைப் போலவே அடியார்களும் அங்கு உழவாரப் பணிவிடை செய்தனர். ஏகம்பநாதரது திருக்கோயிலுக்குச் சென்று அளவற்ற உருக்கத்தோடு அப்பெருமானைப் பணிந்து, 'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை' என்னும் திருப்பதிகம் பாடினார். பின்னர்க் கச்சித் திருமயானம், திருமேற்றளி, திருமாற்பேறு முதலிய பல தலங்களையும் வணங்கிக் காஞ்சிக்கு மீண்டு, தாண்டகம்பாடி விடைபெற்றுக்கொண்டு திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர் முதலிய பலதலங்களையுந் தொழுது, பின் திருவொற்றியூர் அடைந்தனர். அங்கே அன்பர்களால் எதிர்கொள்ளப் பெற்றுத் திருக்கோபுரத்தை இறைஞ்சித் திருக்கோயிலுட் சென்று, 'எழுதா மறையளித்த எழுத்தறியும் பெருமானை' ஆர்வமுற நிலத்திற் றோய்ந்து

தொழுது பரவசப்பட்டுத் திருத்தாண்டகம் பாடியருளி னர். இன்னும் திருவிருத்தங்கள், திருநேரிசைகள், திருக் குறுந்தொகைகள் முதலிய பலவகைத் திருப்பாடல்கள் பாடியருளி அங்கே பலநாள் தங்கினர். பின்னர் திருப் பாசூர் அடைந்து அங்கே சிவபெருமானைத் திருக்குறுந் தொகை, திருநேரிசை, திருத்தாண்டகம் முதலியவற்றால் துதிசெய்து பிறபதிகளையும் வணங்கிச்சென்று வாய்மை தவறாத வேளாளர் பெருங்குடிகள் உறையும் திருப்பழைய னூரைச் சார்ந்த திருவாலங்காடெய்தினர். அங்குத் திரு நடனஞ் செய்தருளும் பெருமானுக்குத் திருத்தாண்டக முதலிய செந் தமிழ்ப் பாமாலைகள் சாத்தி வணங்கினர். பின்பு வடக்கே சென்று திருக்காரிகரை பணிந்து, திருக் காளத்தி மாமலை வந்தெய்தினர். அங்கே பொன்முகலி யாற்றில் முழுகித் திருக்காளத்திநாதரை வணங்கி, 'என் கண்ணுளான்' என்னும் திருத்தாண்டகம் நவின்று கண்ணப்பர் திருவடிகளை வணங்கி, ஆராத காதலுடன் திருப்பணி முதலியனசெய்து அவண் இருந்தகாலை, தென் கயிலாயமாகிய காளத்தியில் பிரானாரை வணங்கியது போலவே வடகயிலையிலுஞ் சென்று சிவபெருமானது திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பினார்.

விரும்பிய வண்ணமே புறப்பட்டு மலை, ஆறு, காடு முதலியவற்றை யெல்லாங் கடந்து ஸ்ரீ சைலம் என்று சொல்லப்படும் திருப்பருப்பதம் எய்தினர். அங்கே பதி னெண் கணங்களும் பாடி வணங்கும் அத்திருமலைப் பெரு மானுக்குத் தமிழ்மாலை சாத்தி வழிபட்டார். தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகள் பேசும் நாடுகளைக் கடந்து சென்று மாளவதேயம், இலாடபூமி முதலியவற்றிற்கும் அப்பாற்சென்று மத்திய தேசத்தைச் சேர்ந்தனர். பின் னர்க் கங்கைக் கரையை யடைந்து காசியில் சிவபெரு மானைப் பணிந்து இமயமலை யடிவாரஞ் சார்ந்தார். அப்

பால் மனிதர்கள் புகமுடியாத காடுகளூடுசென்று, இலை, கனி, கிழங்கு முதலியன உட்கொள்வதையுந் தவிர்த்துத் தனியே மேன்மேற் சென்றார். கொடிய விலங்குகளும் நாகங்களும் அவர்க்கு யாதொரு இடையூறுஞ் செய்ய வில்லை. அந்தக் கடுமையான கற்சுரத்திலே இரவும் பகலும் இடைவிடாது செல்வதினால் அவருடைய திரு வடித் தாமரைகள் தேய்ந்தன. தம்முடைய அங்கத்திற்கே எவ்வளவு பங்கம் வந்தாலும் மங்கை பங்கரது வெள்ளி மால்வரைப்பால் வைத்த நினைவை மறவாதவராய் இரண்டு கைகளையுங் கொண்டு தாவிச் சென்றார். மார்புந் தேய்வுறவே புரண்டு புரண்டு சென்றனர். பின்னர் தமது உள்ளமே மேற்செல்லவிட்டு உடம்பொடு இயங் கும் செயலின்றி இருந்தார்.

இங்ங னம்மிர வும்ப கற்பொழு தும்ம ருஞ்சுர மெய்துவார்
பங்க யம்புரை தாள்ப ரட்டள வும்ப சைத்தசை தேயவு
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தைம றப்பரோ
தங்க ரங்களி ரண்டு மேகொடு தாவி யேகுதன் மேவினார்.

கைக ளும்மணி பந்த சைந்துற வேக ரைந்துசி தைந்தபின்
மெய்க லந்தெழு சிந்தை யன்பின்வி ருப்பு மீமிசை பொங்கிட
மொய்க டுங்கனல் வெம்ப ரற்புகை மூளு மத்த முயங்கியே
மைகொள் கண்டர்த மன்பர் செல்ல வருந்தி யுந்தினர் மார்பினால்.

மார்ப முந்தசை நைந்து சிந்தி வருந்த வென்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்ற சிந்தையி னேச மீசனை கேருநீ
டார்வ மங்குயிர் கொண்டு கைக்கு முடம்ப டங்கவு மூன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர்.

அப்பு றம்புரள் கின்ற நீளிடை யங்க மெங்கு மரைந்திடச்
செப்ப ருங்கயி லைச்சி லம்படி சிந்தை சென்றுறு மாதலால்
மெய்ப்பு றத்தி லுறுப்ப ழிந்தபின் மெல்ல வுந்து முயற்சியுந்
தப்பு றச்செய லின்றி யங்நெறி தங்கி னார்தமி ழாளியார்.

(செ. கருஎ-கசுO)

இன்னுஞ் சிலகாலம் நிலவுலகத்திலே தீந்தமிழ் பாடி உலகிற்கு நன்மை செய்வதற்காக நமது நாயனுர் தமிழ் நாட்டில் தங்கவேண்டுமென்பது சிவபெருமானது திருவுள்ளக்கருத் தாதலின் திருக்கயிலையைச் சேர்வதற்கு அருள் புரியாமல் அவர் கிடந்த இடத்தினருகே குளமொன்று தோற்றுவித்து அதன் பாங்கர் உள்ள ஒரு முனிவர்போல் தோன்றினுர். தோன்றி அப்பமூர்த்திகளை நோக்கி நீர் எவ்வுறுப்பும் அழிந்திடும்படியாகப் பெருமுயற்சி செய்து இவ் வெங்கானத்திற்கு வந்ததின் காரணமென்னவென்று வினவினுர். குற்றமற்ற மரவுரியும் பூணூலும் ஒளி வீசும் சடாமகுடமும் திருநீறும் திருமேனிமேல் திகழும் அருந்தவராகத் தோன்றிய கடவுளைப் பார்த்து, 'மலைமகளுடன் வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு கும்பிடுங் காதலால் இவண் எய்தினேன்' என்ருர். அதற்கு அம்முனிவர், கயிலைப் பெருவெற்பானது நிலவுலகிலுள்ள மக்களால் அடையப்படுவதன்று. அஃது உயர்பதம் பெற்ற தேவர்களுக்கும் எய்துவதற் கரியது. ஆதலின் இவ்வெங் கானகத்தில் நீர் வந்து வருந்துவதாற் பயனென்? நீர் இனி உம்மூர்க்கு மீளவேண்டியதுதான் என்ருர். அதற்குத் தமிழரசர் திருக்கயிலையில் சிவபெருமானது திருக்கோலக் காட்சியைக் கண்டல்லாமல் மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன் என்ருர். உடனே கடவுள் விண்ணிடை மறைந்து, 'நாவுக்கரசனே எழுந்திரு' என்ருர். உடனே இழந்த உறுப்புக்கள் வரப்பெற்ற திருமேனியோடு எழுந்து ஒளிபெற்றுத் திகழ்ந்தார். அப்போது அக்கடவுளை நோக்கி நமது நாயனுர்,

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே

கண்ணி னுற்றிருக் கயிலையி லிருந்தநின் கோல
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

(செ. ௩௬௮)

அதற்கு விடையாக எழுந்த அருள்மொழி யாதெனில் 'இப்பொய்கையிலே நீ முழுகித் திருவையாறெய்தி அவண் நாம் கயிலையிலிருந்த முறையைக் காண்பாயாக' என்பதே. கடவுளாணையைச் சென்னிமேற் கொண்டு 'வேற்றாகி விண்ணாகி' என்னும் திருத்தாண்டகம் பாடி ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் ஓர் குளத்தின் கரையில் வந்து எழுந்தார். அதைக்கண்டு உலகெலாம் வியந்தது. அங்கே திருவருளை வியந்து மழை வாரும் இணைவிழிகளோடு அத்தலத்திலே செல்லுங்கால் அங்குள்ள நிலையியற்பொருள், இயங்கியற் பொருள் ஆகிய யாவுந் தத்தம் துணையோடு விளங்குவதைக் கண்டார்.

வெள்ளிமலையில் உமையம்மையாரோடு சிவபெருமான் வீற்றிருப்பது அவர் சத்தியுஞ் சிவமுமாய் உயிர்கள் அனைத்திலுங் கலந்து நிற்கும் நிலையை யுணர்த்துமென்பதை நமது நாயனர் தமது காட்சியிற் கண்டு களிப்பெய்தி இறைவர் திருக்கோயில்முன் வந்தார். அப்பெருங்கோயில் கயிலை மால் வரைபோலத் தோன்றி அங்கே திருமால், மலரவன், இந்திரன் முதலிய பெருந்தேவர்கள் சிவபெருமானை அன்போடு வாழ்த்தி வணங்கும் ஒலி தழைப்ப, உயர்ந்த மந்திரவொலி தனித்தனி முழங்க, விண்ணவர், அசுரர், சித்தர், வித்தியாதரர், இயக்கர், முனிவர் முதலியவர்கள் புடைசூழ, அரம்பையர் முதலிய பெண்கள் இசைமுழக்கஞ் செய்யக், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கட்கு உரிய தெய்வங்கள் வழிபடா நிற்ப, நந்திபெருமான் அணுக்கத் தொண்டராக விளங்க, வெள்ளி மலையின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்

தூயபேரொளிப் பவளமால்வரை போல் இடப்பாகத்தில் தையலாளோடு சிவபரம்பொருள் வீற்றிருந்த காட்சியை அரசர் கண்டனர்.

வெள்ளி வெற்பின்மேன் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.

(செ. கஎக)

கண்ட வானந்தக் கடலினைக் கண்களான் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின் றாடினார் பாடினா ரழுதார்
தொண்ட னார்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்.

(செ. கஅ0.)

கண்டு அளவற்ற பெருமகிழ்ச்சி எய்தி ஆடிப்பாடி அழுது தொழுது அமுதமயமான திருத்தாண்டகங்கள் பல செப்பினர். பின்னர் கடவுள் அவ்வரிய காட்சியை மறைக்கவும் சிறிது வருந்தி அதுவும் சிவபெருமானது திருவருளெனவே தெளிந்து, உலகத்தார் உண்மை யுணர்ந்து உய்யும்படி 'மாதர்ப் பிறைக்கண்ணியானை' என்னும் திருப்பதிகம் பாடி யருளினார். பின்னும் திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தங்கள் பல பாடி வணங்கித் திருத்தொண்டு செய்து அங்கு அமர்ந்தனர்.

பின்னர், திருநெய்த்தானம், திருமழபாடி முதலிய தலங்களை வணங்கிப் பாடித் திருப்பூந் துருத்தியினைச் சார்ந்தார். அவண் வீற்றிருக்குஞ் சிவபெருமானை ஆராத காதலுடன் வணங்கித் திருத்தாண்டகமும், திருக்குறுந் தொகையும், திருவிருத்தமும் திருவாய்மலர்ந்தருளினர்.

நில்லாத நீர்சடைமே னிற்பித் தானை
நினையா வென்னெஞ்சை நினைவித் தானைக்

கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லா வென்னோய்தீர்த்த புனிதன் றன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்தி கண்டே னனே.

(திருத்தாண்டகம்.)

கொடிகொள் செல்வ விழாக்குண லையருக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திங்கர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

(திருக்குறுந்தொகை.)

மாலினை மாலுற நின்றான் மலைமக டன்னுடைய
பாலனைப் பான்மதி சூடியைப் பண்ணபுரார் மதின்மேல்
போலனைப் போர்விடை யேறியைப் பூந்துருத் திம்மகிழும்
ஆலனை யாதி புராணனை நாமடி போற்றுவதே.

(திருவிருத்தம்.)

அங்குச் சிலகாலந் தங்கித் திருத்தொண்டு செய்து சிவபெருமானது திருவருள் பெற்றுத் "திங்களும் ஞாயிறும் தோயும் திருமடமொன்று செய்தார்." பின் பல்வகைத் திருத்தாண்டகங்களும், அடைவு திருத்தாண்டகங்களும், தனித்திருத்தாண்டகங்களும், திருவங்கமாலை முதலிய திருவருட்பாடல்கள் பலவுந் திருவாய் மலர்ந்தருளினர்.

சிவப்பே றெய்திய மெய்ஞ்ஞானிகள் தமது உடம்பிற்கு நேரிடும் இடையூறுகளை ஒரு சிறிதும் பொருட்படுத்த மாட்டாரென்பது நமது நாயனார் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லுங்கால் பசியுந் தாகமும் அதிகப்பட்ட போது அவற்றாற் 'சித்தமலையாதே' அப் பைஞ்ஞீலிப் பெருமானை வணங்குதலையே கருத்தாகக்கொண்டு மேற்

சென்றமையானும் அவ்வாறே திருக்கயிலைக்குச் சென்ற காலை தமது உறுப்புக்கள் தேய்ந்தொழிந்த பொழுதும் அவற்றைப் பற்றி ஒரு சிறிதுங் கருதாது கயிலைக் காட்சியையே பொருளாகக் கொண்டமையானும் இனிது விளங்கும். முற்செய் வினைப்பயன் அவர் உடம்பை வந்து அடுத்தபோது அவற்றால் நேருங் குறைகளையும் அவ்வப் போது நிறைவு செய்து அவர்க்கு என்றும் இடையறா வின்பம் அளித்தலைச் சிவபெருமான் தமது கடனாகக் கொண்டமை ஈண்டு அவர் செய்த அருட்செயல்களால் தெள்ளிதிற் புலனாதல் காண்க. கருணைமுதல்வர் காட்டு வழியிலே சோறுந் தண்ணீருங் கொண்டுவந்து அப்ப மூர்த்திகளுக்குக் கொடுத்து அவர்க்குத் துணையாக உடன் வழிநடந்தருளிய அற்புதமானது மிக்க வியப்பைத் தரு கின்றது. அவர் சிவஞானியாகிய நாயனார்க்குத் தாமே எதிர்ப்பட்டனர். அன்பர்க்குத் தோன்றாத் துணையா யிருந்து இவ்வாறே அருள்செய்வார் என்பது அன்பர் பலர்க்கும் இக்காலத்துங்கூட அனுபவத்தில் விளங்குவ தொன்றாம். இக்கருத்தை ஞானசம்பந்தப்பெருமானும்,

> எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
> கிங்கேயென் றருள்புரியு மெம்பெருமான்...

என்ற தேவார அடிகளில் அமைத்துள்ளார்.

திருக்கயிலாயத்தை நமது நாயனார் அணைவதற்குக் கடவுள் அருள்புரியாததற்குக் காரணம் நிலவுலகத்தில் இவர் இன்னுஞ் சின்னாள் வதிந்து சிவநெறிப்பயனை உலகுய்யும்படி உணர்வித்துத் திருத்தொண்டு புரியவேண்டு மென்று அவனது திருவுள்ளங் கருதியதே யென்க. "மன்னுதீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த" என்ற சேக்கிழார் திருவாக்கால் அது புலனாகும். நமது நாயனார் திருக்கயிலையை யணையப்பெறுவாராயின் நிலவுல கிற்கு மீளாராதலின் இறைவர் திருக்கயிலைக் காட்சியை

அவர்க்குத் திருவையாற்றினிற் காட்டினர். அவர் இந் நானிலத்தே தமது திருமேனி நிலவப் பெறுதற்குரிய பான்மையுடைய ராகலின் இத்தகைய அற்புதச்செயல் நிகழ்வதற்கு ஏதுவாயிற்று. ஞானிகள் தாம் விரும்பிய சித்திகளை விரும்பியவாறே பெறுதற்குரிய தவமுடையரா யினும் அவைகளில் தமது மனத்தைப் புகவிடாது சிவ போகத்தின் கண்ணும் சிவபெருமானது திருக்கோலக் காட்சியின் கண்ணுமே அதனைச் செலுத்துவரென்பது நமது நாயனார் வானிற் பறத்தல் முதலிய செயல்களாலே கயிலையை யடைய விரும்பாது இயற்கையில் தமக்கு அமைந்த தூலவுடம்பின் உறுப்புக்களைக் கொண்டே திருக்கயிலைக்குச் சென்றமையின் வைத்துணரப்படும். உறுப்புக்கள் தேய்ந்தவிடத்தும் அவை நன்னிலை யடைய வேண்டுமென்று கடவுளை வேண்டக் கருதாது அவரை வணங்குதலையே தமது ஒருதலையாய நோக்கமாகக் கைக் கொண்டனர். தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வாரென் பதற்கும், கருமமே கண்ணாயினார் மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார் என்பதற்கும் திருநாவுக் கரசரிலும் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளார் உலகத்தில் யாருமில்லையென்பது தெளிவு. உள்ளிய உயர்நோக் கத்தைத் திண்ணமாகக் கடைப்பிடிக்கும் விடா முயற்சி யும் மனவுறுதியும் ஒருவர்க்கு வேண்டுமென்பதை நமது நாயனரது அருஞ்செயல்கள் நன்கு வற்புறுத்தல் காண்க.

> ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
> தாழா துஞற்று பவர். (திருக்குறள் – ௬௨௦)

என்ற உண்மையும்,

> எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின் (திருக்குறள் – ௬௬௬)

என்ற பொய்யாமொழியும் நமது நாயனார்க்குக் கடவுள்

அருள்புரிந்த முறைமையால் அங்கை நெல்லியாமன்றே? அப்பர்பெருமான் விரும்பியதும் கயிலைக்காட்சியே யன்றிக் கயிலையில் போய்த் தங்கவேண்டு மென்பதன்று. அவரது பான்மைக்குத் தக்கவாறு நிலவுலகத்திலே அக்காட்சியை இறைவர் நல்கியருளினர். இவ்வுண்மை யறியாதார் நமது நாயனுர் அவர் எடுத்த பிறப்பிலேயே திருக்கயிலாயத் திற்கு நேரிற்செல்லும் தவமுடைய ரல்லரென்று கொள்வர். அங்ஙனங் கோடல் தவருகும். எல்லாத் தத்துவங்களையுங் கடந்து சிவபெருமானேடு இரண்டறக் கலந்து பெறப்படும் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை எய்துதற்குரிய மெய்யன்பராகிய சொல்வேந்தர்க்கு இப் பிருதிவி தத்துவத்தின் ஓர் அண்டத்திலுள்ள சிவநிலைய மாகிய கயிலாயத்தை எய்துந் தவமில்லையென்று கூறுவது நகையாடற் கேதுவாமென்க. இந்திரன், திருமால், பிரமன் முதலிய தேவர்கள் ஒப்பற்ற சிவஞானம் பெறுவதற்கு முன்னேயே எய்தும் கயிலையானது,

தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித்தேடொணுத் தேவனையென்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்

என்ற வண்ணமே அத்தேவர்களிற் பெரியோராகிய இரு வரும் எய்தவொண்ணு முதல்வன் ருளைத் தலைப்பட்ட பெருந்தகையார்க்கு எய்த முடியாது போயிற்றென்பது பொருத்தமில்லாத தொன்றே. இந் நிலவுலகத்திலே சிறிது காலந் தங்கும் வினைப்பயனும் அதற்குப்பின் நேரே சிவத் தோடு கலக்கும் பான்மையும் நமது நாயனுர் பெற்றிருந் தமையான் இறைவர் தமது அருட்காட்சியைத் திருவை யாற்றின் கண்ணே நல்கினரென்று உய்த்துணர்க. நமது நாயனுர் கயிலைக்கே தான்செல்ல வேண்டுமென்று கருதி

யிருந்தால் அவ்வாறே செல்லவும் இறைவன் அருள் புரிந் திருப்பர். கயிலையிலிருந்த நின்கோலம் 'காணவேண்டு' மென்றாரே யொழிய கயிலைக்குச் சேறலை வேண்டிற்றிலர். அஃது ஏதனாலோவெனின், தமக்குரிய சிவாநுபவத்தினை யும் அதன் நிமித்தத்தினையுமாத்திரமே சிவஞானிகள் கருதுவார்களேயன்றி முன்வினை நுகர்ச்சிக்கு இறைவன் வகுத்தவாறே தாம் ஏய்ந்து நில்லாது தமது அறிவின் முனைப்பால் ஒன்றையும் பெருமானிடத்து வேண்டா திருத்தலானும் அதுவே நமது நாயனாரது தன்மையாக லானுமென்க. 'வேண்டி நீயாதருள்செய்தாய், யானும் அதுவே வேண்டினல்லால்' என்றதுமது. திருவையாற்றிற் காட்டிய திருக்காட்சி மறைந்தவுடன் அஃது இறைவனது திருவருளே யென்று நமது நாயனார் தெளிந்து மகிழ்ந்தமை யுங் காண்க.

> செய்ய வேணியா ரருளிது வோவெனத் தெளிந்து
> வைய முய்ந்திடக் கண்டமை பாடுவார் மகிழ்ந்து

என்றதை உற்று நோக்குக.

திருக்கயிலைக் காட்சியால் கடவுள் சத்தியுஞ் சிவமுமா யுயிர்க்குயிரா யுயிர்கள்தோறுங் கலந்து செறிவொழியாது நிற்குத் தன்மையைத் தேவர் முனிவர் முதலியோர் அறி யும் வண்ணம் தமது திருக்கோலங் காட்டும் மரபு உண் டென்பது பெறப்படும். இத் திருக்கோலக் காட்சியின் உண்மையை மறந்தபோது விண்ணவர் முதலியோர் இடர்ப்படுதலும் அவற்றை மறவாது மனத்துட் கொண்ட போது நலமுறுதலும் புராணங்களுட் குறிக்கப்படும். நிலவுலகத்தின்கண்ணே பல தலங்களிலும் இறைவன் அன்பர்க்கு அருள்புரிந்தமை போலவே தேவர் முனிவர் முதலியோர்க்குக் கயிலை உச்சியின்கண்ணும் பிற பெருங் குன்றங்கள் மாட்டும் எழுந்தருளி இறைவன் அருள்விரிவ

னென்பது பெறப்படும். அது பின்வரும் திருத்தாண்டகத்தால் விளங்கும்.

கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணா ரண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப் பத
மகேந்திரமா மலைநீல மேம கூடம்
விந்தமா மலைவேதஞ் சைய மிக்க
வியன்பொதியின் மலைமேரு வுதய மத்தம்
இந்துசே கரனுறையு மலைகண் மற்று
மேத்துவோ மிடர்கெடநின் றேத்து வோமே.

நமது நாயனார் எடுத்த உடம்பு மக்களுடம்பின் இயல்புடைமையால் கயிலை முதலிய பெருங் குன்றங்களை அடையும் வலியுடையதன்று. ஆயினும் அவரது உள்ளப் பான்மை உண்மை ஞானத்தின் முடிநிலைப்பாற் படுமாதலின் அவர் யாதொன்றை விரும்பினும் இறைவன் அதனை, அவருக்களிப்பது திண்ணம். கயிலைக்காட்சி மாத்திரமன்று; எப்புவனங்களிலுள்ள எத்தகைய அருட்காட்சியினையும் எய்துதல் நமது நாயனாருக்கு அரிதாகாது. 'அடியேற்குக் காணா காட்டுங்கண்ணும்,' 'தன்போல் நெறியறியச் சிந்தை தந்த அருளானை' என்பனவும் பிறவும் இக்கருத்துப்பற்றி வருவனகாண்க. உடம்பின் வெம்மைதீர நீரிற் குளிப்பதுபோல நமது நாயனாரது திருமேனிக்குக் கடுவழி நடையால் நேர்ந்த ஊனம் நீங்கும்பொருட்டு அமுதவாரியாகிய திருக்குளத்தில் மூழ்கும்படி இறைவர் பணித்தனர்போலும். பிற தலங்களினும் திருவையாற்றினைத் தமது அருட்காட்சி நல்குவதற்குச் சிறப்பாகிய இடமாக இறைவர் கொண்டமைக்குக் காரணம் தெளிவாக விளங்கவில்லை. முன்னைத் தவத்தினால் அத்தலத்தின் மருங்கு கயிலைக்காட்சி யடையும் நியதி நமது நாயனாருக்கு அமைந்திருத்தலுங் கூடும். அவ்வாறே அத்

தலத்தின்கண் அறநிலையங்கள் அவரால் அமைக்கப் பெரு மல் திருப்பூந்துருத்தியின்கண்ணே அவர் திருமடம் அமைந் தமையுமாமென்க. தமது துறவு நிலைக்கேற்பப் பல்லு யிர்க்கும் பேருதவிபுரியும் அருட்செயல் நிகழ்தற்குத் தக்க இடமாக அவரது பெருமடம் இறைவனருளால் திருப் பூந்துருத்தியில் ஏற்பட்டதென்று நாம் அறியற்பாலம். சமயத்தலைவர்கள் மன்பதைகள் உய்யும்வண்ணம் ஆசிரிய பீடம் நிலைத்தற்குரிய திருமடம் அமைத்தல் அக்காலத் தும் வழக்கமாமென்பதே இதனுற் போதரும். நமது நாயனுர் அமைத்த சிவநிலையம் பிற்காலத்தில் என்னநிலை எய்தியதென்று நமக்கு விளங்கவில்லை. இந்நாட்டு மக் கள் நடுவே எத்தகைய மடமும் நெடுநாளாக நிலைத் தோங்குதல் அரிது போலும்.

## ௧௧. ஞானசம்பந்தரை மீண்டுங் காணல்

திருப்பூந்துருத்தியில் நமது நாயனுர் வீற்றிருந்த காலை ஞானசம்பந்தப்பெருமான் திருவாலவாயில் அமணரை வாதில் வென்று பாண்டியனது கூனை நிமிர்த்தருளி யாண்டும் திருநீற்றி னொளியை நிலவச்செய்து சோழநாட்டிற்கு மீண்டவுடன் திருநாவுக்கரசர் இருக்குமிடத்திற்கு விரைந்து வருவாராயினர். இதனைக்கேட்ட அப்பமூர்த்திகள் மிகுந்த மகிழ்ச்சி யெய்திப் பேரன்போடு எதிர்சென்ருர். காழியர்கோன் அடியார் பெருங் குழாத்தோடு முத்துச் சிவிகையில் வருவதைக் கண்டு ஒருவரும் அறியாத வண்ணம் அப்பமூர்த்திகளும் அதைப் பிறரோடு உடன் தாங்கி வருவாராயினர். திருப்பூந்துருத்திக்கு அருகில் வந்தவுடன் ஞானசம்பந்தர் அப்பர் எங்குற்ருரெனவும் அவர் இங்குற்றே னென்ருர்.

சண்பைவருந் தமிழ்விரக ரெழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனமகிழ்ந்து
கண்பெருகுங் களிகொள்ளக் கண்டிறைஞ்சுங் காதலினல்
எண்பெருகும் விருப்பெய்த வெழுந்தருளி யெதிர்சென்ருர்.

(௧௬௩)

காழியர்கோன் வருமெல்லை கலந்தெய்திக் காதலித்தார்
சூழுமிடைந் திடுநெருக்கிற் காணுமே தொழுதருளி
வாழியவர் தமைத்தாங்கு மணிமுத்தின் சிவிகையினைத்
தாழுமுட லிதுகொண்டு தாங்குவன்யா னெனத்தரித்தார்.

(௧௬௪)

வந்தொருவ ரறியாமே மறைந்தவடி வொடும்புகலி
யந்தணனு ரேறியெழுந் தருளிவரு மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன்ருங்கிச்
சிந்தைகளிப் புறவருவார் தமையாருந் தெளிந்திலரால்.

(௧௬௫)

திருஞான முனிவரா சிருந்ததிருப் பூந்துருத்திக்
கருகாக வெழுந்தருளி யெங்குற்று ரப்பரென
உருகாநின் றும்மடியே னும்மடிக டாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேனென்றார். (௧௬௬)

அதைக் கேட்டவுடன் உளம்பதைத்து மிக விரைவோடு சிவிகை நின்றிழிந்து சொல்வேந்தரை வணங்க, அவரும் இவர் வணங்குமுன் வணங்கவும் இதனைக்கண்ட அன்பரெல்லாம் திருவருளைத்தொழுது போற்றினர்.

பிள்ளையா ரதுகேளாப் பெருகுவிரை வுடனிழிந்தே
யுள்ளமிகு பதைப்பெய்தி யுடையவர சினைவணங்க
வள்ளலார் வாகீச ரவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார்.
(௧௬௭)

பின்னர் மூல அன்பர் இருவரும் திருப்பூந்துருத்தியில் சிவபெருமானைத் தொழுது துதித்து உடனுறைந்தனர். திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டில் நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தனர். உடனே அப்பர்பெருமான் தென்றமிழ் நாட்டிற்குச் செல்லக் கருதினர். புகலியர்கோன் தொண்டை நாட்டுத் திருப்பதிகளை வணங்கக்கருதிப் புறப்பட்டார். பின் நமது நாயனார் பாண்டி நாட்டிற்குச் சென்று திருப்புத்தூரைப் பணிந்தேத்தித் திருவாலவாயடைந்து அங்கே தமிழ்த் தலைவராகிய முதல்வரை 'முளைத்தானை யெல்லார்க்கும்' என்ற முதற் குறிப்புடைய திருத்தாண்டகப் பதிகம்பாடி வணங்கி அரசராலும் அமைச்சராலும் பாண்டிமாதேவியாராலும் கழிபேரன்போடு போற்றப் பெற்றிருந்தார். பின் திருப்பூவணத்திற்குச் சென்று அவண் சிவபெருமான் நேரிற் றோன்றக் கண்டு வணங்கி, "வடிவேறு திரிசூலந் தோன்றும்" என்னுந் திருத்தாண்டகம் பாடியருளினார். பின் திரு

விராமேச்சுரத்திற்குச் சென்று இராமர் இராவணனைக் கொன்ற பாவம் நீங்குதற்பொருட்டுப் பூசித்த சிவலிங்கப் பெருமானைத் தொழுது துதித்தனர்.

தென்னிலங்கை யிராவணன்றன் சிரமீரைந் துந்துணித்த
மன்னவனு மிராமனுக்கு வரும்பெரும்பா தகந்தீர்க்கும்
பின்னுகரைத் தொழுவதற்கு நினைந்துபோய்ப் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர்.
(சாஅ)

பின்னர் நமது நாயனார் திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய தலங்களை இறைஞ்சித் திருப்பதிகங்கள் பாடிச் சோழநாட்டிற்குப் புறப்பட்டார். அங்கே திருப்புகலூரைச் சேர்ந்து முதல்வர் தாள்வணங்கித் திருத்தொண்டு செய்து, நின்றதிருத்தாண்டகம், நீடு திருத்தாண்டகம், திருப்பதிகள் கூறுந் திருத்தாண்டகம், திருநேரிசை, ஆருயிர் விருத்தம், தசபுராணம், பாவநாசப் பதிகம் முதலிய யாவும் பாடியருளினர். அங்கு உறையுங் காலத்து ஓர் நாளில் திருநாவுக்கரசரது திருப்பணிப் பெருமையை உலகிற்கு விளக்கும் பொருட்டு அவர் உழவாரப் பணிசெய்யு மிடமெங்கும் பொன்னும் நவமணியும் நிறைந்திலங்கும்படி இறைவர் திருவருள் செய்தார். அவற்றையும் பருக்கைக் கற்களையும் ஒரு தன்மையன வாகவே கருதி இருவகைக் கற்களையும் வாரிப் பொற்றாமரையில் எறிந்தார்.

புல்லோடுங் கல்லோடும் பொன்னோடு மணியோடுஞ்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் றிருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதன்மடவார் விசும்பூடு வந்திழிந்தார். (சகஅ)

பின்னர் மின்கொடிகள் போன்ற வானரமகளிர் விண்ணின்று நாயனார்முன் இழிந்து இன்னிசை பாடித்

தமது குவளைக் கண்ணிஞலும் புன்னகையிஞலும் மருட்டி அழகிய நடனஞ் செய்து அவர்மேல் மலர் தூவி மிக நெருங்கித் தம்மாலியன்றவரை மையல் விளைக்க முயன்ருர்கள். சிவபெருமான் திருவடியின் கண்ணேயே மெய்யன்புடைய அரசர் 'சித்தநிலை திரியாது செய்பணியின் றலைநின்ருர்'.

இத்தன்மை யரம்பையர்க ளெவ்விதமுஞ் செயல்புரிய
அத்தனூர் திருவடிக்கீழ் நினைவகலா வன்புருகு
மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தஞ்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்ருர். (௪௨௨)

தம்மிடம் அவர்களுக்குஞ் செயலில்லை யென்பதைப்

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்கா டீவினைகா டிருவே நீங்க
ளிம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யு
மெம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றே
னிடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே.

(திருவாரூர்த் திருத்தாண்டகம்.)

என்னுந் திருத்தாண்டகம் புகன்று குறிப்பித்தனர்.

இம்மாயப் பவத்தொடக்கா மிருவினைக டமைநோக்கி
யும்மாலிங் கென்னகுறை யுடையேன்யான் றிருவாரு
ரம்மானுக் காளானே னலையேன்மி னீரென்று
பொய்ம்மாயப் பெருங்கடலு ளெனுந்திருத்தாண் டகம்புகன்ருர். (௪௨௩)

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா வோருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லா மையிலிறைஞ்சி யெதிரகன்ருர். (௪௨௪)

பின்னர் அவர்கள் அவரைத் தொழுது அகன்றார்கள். இவரது பெருந் துறவினை ஏழுலகுந் துதிசெய்து பாராட்டின. இறைவன் தமக்குப் பரமுத்தி நல்கும் பொழுது வாய்த்ததென்ற முன்னுணர்ச்சியின் விளைவாகத் திருவிருத்தங்கள் பல பாடியருளினார்.

இந்நிலைமை யுலகேழு மெய்தவறிந் தியல்பேத்த
மன்னியவன் புறுபத்தி வடிவான வாகீசர்
மின்னிலவுஞ் சடையார்த மெய்ப்பொருடா னெய்தவரு
மந்நிலைமை யணித்தாகச் சிலநாளங் கமர்ந்திருந்தார். (சஉரு)

இவ்வாறே ஓர் சித்திரைத் திங்கள் சதயத் திருநாளில் எய்துதற்கரிய சிவானந்த ஞானவடிவேயாகி,

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லா
லொண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே (திருத்தாண்டகம்)

என்னும் முதற்செய்யுளையுடைய பதிகத்துள் ஒவ்வொரு திருப்பாட்டிறுதிதோறும் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்று செப்பி, படைப்புக் கடவுளும் படைப்புப் பொருள்கள்யாவும் தத்தம் உள்ளத்தில் பெருமகிழ்ச்சி எய்தும்படி, வானவர்கள் மலர்மாரி பொழிந்து பேரிசையொலிப்பச் சிவபெருமானது சேவடிக்கீழ் இரண்டறக் கலந்தனர்.

மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர செய்தினார். (சஉள)

வானவர்கண் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேனிறைந்த வைந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினவெல்லா முண்ணிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில். (சஉஅ)

அப்பமூர்த்திகளும் சம்பந்தமூர்த்திகளும் ஒருவரை யொருவர் சிவனடிப் பேரன்பினராகக் கொண்டு வழி பட்டுத் தம்முட் பெருநட்பினை வளர்த்த சிறப்பு திருப் பூந்துருத்தியின்கண் இருவரும் நிகழ்த்திய அருஞ்செயல்க ளால் இனிது விளங்கும். ‘திருஞான சம்பந்தரது சிவிகை தாங்குதலைத் தமக்குப் பெருவாழ்வாக ஆண்ட அரசர் கருதியதும், அதனைக்கேட்டவுடன் பிள்ளையார் உள்ளத் தில் மிக்க பதைபதைப்பெய்தி விரைந்திழிந்து அரசரை வணங்கியதும், அவர்களது நட்பின் செவ்வியை நனி தோற்றுவித்தல் காண்க. திருஞானசம்பந்தப் பெருமா னும் பாண்டிநாட்டினின்று சோழநாட்டிற்கு மீண்டகாலை முதன்முதல் தமது பெரு நண்பராகிய திருநாவுக்கரசரைக் கண்டு செய்தி கூறவேண்டு மென்றே திருப்பூந்துருத்திக்கு விரைந்துசென்றமை பின்வருஞ் செய்யுளாற் றெளியப் படும்.

சண்பைவருந் தமிழ்விரக ரெழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனமகிழ்ந்து
கண்பெருகு களிகொள்ளக் கண்டிறைஞ்சுங் காதலினால்
எண்பெருகும் விருப்பெய்த வெழுந்தருளி யெதிர்சென்றார்.
(நகக.)

இதனாலே நாம் அறிந்துகொள்வது யாதெனில் தாம் மதுரைக்குச் சென்றகாலை தமக்கு ஊறு வருதல் கூடா தென்று அஞ்சிய பெருநண்பர்க்குத் தாம் ஆண்டு நடந்த செய்திகளை எடுத்துரைப்பின் ஆறுதல் பெரிதும் உண்டா மாதலினாலும் அங்ஙனம் பண்புடைய நண்பர்கள் ஒருகாற்

பிரிந்து மறுகாற் காணுங்காலை தத்தஞ் செய்திகளை அள வளாவிமகிழ்தல் நட்பின் இயல்பாமாதலானும் பெருந் தகையாரிருவரும் அவ்வாறு கலந்து மகிழ்வாராயின ரென்பதே.

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில் (திருக்குறள்-கஉச)

என்ற திருக்குறட்கு இவர்களே ஒப்பற்ற எடுத்துக்காட் டாவரென்பதை ஆசிரியர் சிவஞான சுவாமிகள் ஒரு வெண்பா வில் விளக்கியுள்ளார்.

சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோஞ் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா-நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(சோமேசர் முதுமொழி வெண்பா-சம)

திருப்பூந்துருத்தியிலேதான் சைவநெறித் தலைவரிரு வரும் கடைசியாக ஒருவரையொருவர் கலந்து மகிழ்ந்தன ரென்பது சரித்திரத்தால் உணரக்கிடக்கின்றது. பின்னர் அப்பமூர்த்திகள் பாண்டிநாட்டுத் திருப்பதிகளை வணங் கிப் பாடித் திருப்புகலூருக்கு மீண்டு அங்குப் பேரின்ப வீடெய்தினர். திருநெல்வேலி முதலிய தலங்களுக்கு நமது நாயனூர் சென்றாரென்பது அவர் புராணத்தால் அறியக் கிடப்பதால் அத்தலங்கட்குப் பாடிய திருப்பதிகங்கள் மறைந்தனவென்பது தெளிவு.

அங்குறைந்து கண்ணுதலா ரருள்சூடி யகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
எங்குநிகழ் தானங்க ளெல்லாம்புக் கிறைஞ்சுவார். (சுக0)

தொழுதுபல வகையாலுஞ் சொற்றெடைவண் டமிழ்பாடி
வழுவிறிருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுது
மொழுகியகண் பொழிபுனலு மோவாது சிவன்றுள்கள்
தழுவியசிந் தையிலுணர்வுந் தங்கியநீர் மையிற்சரித்தார்.(சுகக)

திருப்புகலூரின்கண்ணே, நமது நாயனுர் இருவகைப் பற்றுங் கடந்த பெருந்துறவியாரென்பதைக் கடவுள் உலகத்திற்கு விளக்கினுரென்று மேற்கூறப்பட்டது. சிவநெறியில் நின்றுரது துறவு நிலையை அப்பமூர்த்திகள் உலகத்திற்கு விளக்கிக் காட்டியது போலவே வேறெவருங் காட்டவில்லை யென்பது திண்ணம். அவரது ஒப்பற்ற உள்ள நிலையைச் சிவபெருமான் தாமே அறிவாராதலின் உலகினர்க்கு அதனை யுணர்த்தும்பொருட்டே திருப்புகலூரிலே மேற்கூறிய அற்புதங்களை இயற்றுவித்தாரென்பது தெளிவு. அவரைச் சோதித்தற்பொருட்டு அவைகள் நிகழ்ந்தனவென்று கோடல் தவறு. நமது நாயனுரை அரம்பையர்கள் நாடி யடைந்தகாலை அவர் மிக வயது சென்றவரா யிருந்தமையால் அவர்க்கு மயல் விளையவில்லை யென்று போலிக்காரணங் கூறுவாருமுளர். வயது முதிர்ந்திருந்தாலும் குற்றமற்ற ஒழுக்கப் பண்பில் தலைசிறந்தவராகலான் அவரது தூயபொன்மேனி நரை திரை மூப்புக்களால் வாடாதிருந்ததென்பது உய்த்துணரப்படும். மேலும் எவர்க்கும் சித்தநிலை திரிதல் இயல்பே. அத்திரிபின்மையே நாயனுரது ஒப்பற்ற அருந்தவ நிலையை விளக்கிற்று. வானரமகளிரும், நமது நாயனுரது அந்தமிலாத் திருவருள் வேடத்தில் ஈடுபட்டுக் காமுறுதல் நிகழ்தற்பாலதே யென்பது அடியிற் காணும் செய்யுளில் இக்கருத்துப்பற்றி அமைந்துள்ள பொருளை இனிது உணர்வார்க்கு நன்கு விளங்கும்.

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை
யழகிருந்த வூரிலிருந் தறியா னேனு

முறக்கருணை கொழிக்குமுன தமுத வாரி
யூடணுகி னவனையர மகளி ரெல்லா
நறைக்குழலுஞ் சரிந்திடவுத் தரீயஞ் சோர
நாணழிய வளைசிதற வுடுத்த வாடை
புறத்துவிழ மயலொடும்பின் றொடர்வ ரென்றாற்
பொற்கொடிநின் புதுமையெவர் புகழ வல்லார்.

(சௌந்தரியலகரி - கஅ)

உடல் பொருள் ஆவி மூன்றும் சிவபெருமானுக்கே உரிமையாக்கி, அவர்க்குத் திருவடித் தொண்டுபூண்டு பணி செய்து கிடப்பதே மெய்த்துறவியர் கடனுமென் பதை, அறிவுறுத்தி நிறுவ வந்த அருந்தவர் நமது நாயனு ராகலின் ஆசிரியர் சேக்கிழார் அவர் புராணத்தின் முதற் பாட்டிலேயே அவரை "வளர் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத்தவ முனிவர்" என்றார். துறவியர்க்கு அருளொழுக்கம் சிறந்ததென்னும் திருவள்ளுவரது திரு வுள்ளக் கருத்தைத் தமது வாழ்க்கையால் நிலைநாட்டியவர் திருநாவுக்கரசரே யாவர். அவரே துறவியர்தம் பெரு வேந்தராய்த் திகழ்ந்தனர். இளமையிலே பெருஞ் செல் வத்திற் பிறந்து தமது பெற்றோரை இழந்தகாலை உலக நிலையாமையைச் செவ்வி தின் உணர்ந்தனர். தமது தமக் கையார்க்கு நேர்ந்த இன்னலினாலும் அவ்வுணர்ச்சி உறுதிப் பட்டது. தமக்கையாருந் தாமும் எவ்வுயிர்க்கும் இரங்கி யுதவுதலையே தமது பெருங்கடமையாகக்கொண்டு தமது செல்வங்களை யெல்லாம் நல்லறத்திற்கே பயன்படுத்தி னர். இவ்வாறு அறவொழுக்கத்தில் நலஞ்சிறந்த நிலையில் நின்றபோது நம்பனருளாமையால் அவ்வறவொழுக்கத் தினையும் நிலையாமையையுமே பெரியனவாகப் பாராட்டும் சமண் சமயம் புகுந்து அங்கும் அவர்கட்குத் தலைவரா யினர். பின்னர் சைவநெறிக்கு மீண்டு பேரருள் பெற்ற விடத்துச் சிந்தை யிடையறா அன்பும் கந்தை மிகையாங்

கருத்தும் உடையராய் உழவாரப் பணிவிடையை மேற்கொண்டு திருப்பதிகளெங்கும் நடந்துசென்றே வழிபடுவராயினர். தமது நிகரற்ற சிவாநுபவ முதிர்ச்சியால் தமக்கு நேர்ந்த பேரிடையூறுகள் ஒன்றினாலும் நலிவுறாது சிவபெருமான் மாட்டும் யாதொன்றையுந் தமது உடல் நலன்பொருட்டு வேண்டாதவராய்த் திருவருட்குறியில் நின்றனர். இதனால் துறவிகள் எந்நிலையில் ஒழுக வேண்டுமென்பதை நன்கு நிலைநாட்டினர். அடியார்கள் பொருட்டே திருப்பூந்துருத்தியில் பெருமடமும் அமைத்தார். அம்மடத்திலே தாம் வாழ்நாள் முழுவதும் தங்கவில்லை. ஆகவே அதன்கண்ணும் பற்று வைத்திலர். அதனால் அவர் மண்ணாசையற்றவ ரென்பதை இறைவன் உலகிற்கு விளக்கினார். பொன்னாசை மண்ணாசையிரண்டும் தவிர்ந்தமை திருப்புகலூரிலே காட்டப்பட்டது. இங்ஙனம் திருவருள் பெறுவதற்கு முன்னும் பின்னும், தமது வாழ்க்கை முழுவதுமே துறவு நிலைமையாகப் பெற்றவர் நமது நாயனாரே யாவரென்று உய்த்துணர்ந்து கொள்க.

"தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தார்க் கெல்லாம் தலையாயவர்" நமது நாயனாரே யென்பது அவரது தாழ்மைப் பண்பினை யுணர்த்தும் அருஞ் செயல்களால் இனிது விளங்கும். சிவபெருமானது திருவடிகளைத் திருநல்லூரில் தமது சென்னிமேற் பொறிக்கப்பெற்று, அவரது திருவடிகளையும் ஞானசம்பந்தர் முதலிய அடியாரது திருவடிகளையுமே நமது நாயனார் பணிதலை மேற்கொண்ட வண்ணமே திருப்புகலூரிலே சிவபெருமானோடு இரண்டறக் கலக்கின்ற காலையும் 'உன்னடிக்கே போதுகின்றேன்' என்று மொழிந்து சைவசித்தாந்தத்துட் கூறப்படும் உயர்ந்த வீட்டின்பம் அயராவன்பின்

அரன் கழல் செல்லுதலேயென்பதை அங்கை நெல்லியாக விளக்கியவாறு வேறு எப்பெரியாரும் விளக்கிற்றிலர்.

ஊனெடுத்த உயிர்கள் யாவும் இல்லற நிலை நின்று துறவறம் புக்கு ஞானமெய்திச் சிவனடி சேர்தலையே முடிவிலின்பமாகக் கருதற் குரியனவாகலின் அத்தகைய பேரின்பத்தை யாவரும் பெறலாமென்று தமது அரிய வாழ்க்கையாலும் முத்திப் பேற்றாலும் நிலை நாட்டினமை யால் நமது நாயனார் வீடெய்தியகாலை படைப்புக் கடவு ளும் படைக்கப்பட்ட பொருள்கள் யாவும் உள்ளங்களித் தன வென்று ஆசிரியர் சேக்கிழார் புராணமுடிவில் அறுதியிட்டுரைத்தார்.

*..................................விரிஞ்சன் முதல்*<br>
*யோனிகளா யினவெல்லா முண்ணிறைந்த பெருமகிழ்ச்சி*<br>
*தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில்.* (சஉஅ)

நமது நாயனார் சிவத்தோடு கலந்த நாளினை விதந் தோதியவண்ணம் ஆசிரியர் பிறவிடத்துக் கூறாமைகாண்க. ஆதலால் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற விரும்பும் யாவரும் நமது நாயனார் வீடெய்திய திருநாளைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றுதல் செய்து அவரது திருவடிகளை வணங்கி வாழ்த்தி உய்வாராக.

## ௧௨. திருநாவுக்கரசரது சிறப்புப் பெயர்கள்

ஆசிரியர் சேக்கிழார் அப்பர்பெருமானைத் தமது புராணத்துள் பல திருப்பெயர்களால் புகழ்ந்து பாராட்டிப் போற்றுகின்றனர். அப்பெயர்களின் பொருளையுஞ் சிறப்பையும் ஈண்டு ஆராய்வாம். முதன் முதலில் சிவபெருமானால் அளிக்கப்பட்ட 'திருநாவுக்கரசு' என்னுந் திருப்பெயரை நோக்குமிடத்து, அது நம் நாயனார் சொல்லாலும் பொருளாலும் சிறந்த அருட்பாடல்கள் அருளிச் செய்பவர்களுள் தலையாயவரென்பதை யுணர்த்தும். பயனில் மொழிகள் பகராது நாவினைப் பெற்ற பயன் இறைபுகழ் செப்புதலே என்பதை உலகர்க்கு அறிவுறுத்துவதில் இணையற்ற சிறப்பு வாய்ந்தவரென்பதும் இதனாற் போதரும். 'நா' என்ற மொழி 'சொல்' என்பதினும் விரிந்த பொருளுடையது. சொல்லுவதை உறுதியாகவும் நயமாகவும் வளமாகவும் உள்ளத்தை உருக்கும்படி சொல்லும் ஆற்றலில் தலைநின்றவ ரென்பதே 'சொல்வேந்தர்' என்னுஞ் சொற்றொடராற் பெறப்படும். எல்லாவகை நயங்களுமுடைய சொல்லாளர் என்பதை நன்கு வற்புறுத்தற்பொருட்டு ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் நமது நாயனார் புராணத்து முதற் செய்யுளுள் 'திருநாவுக்கரசு' என்றும், 'வாகீசர்' என்றும் இருசொற்றொடர்களையும் அமைத்து வைத்தனர்.

திருவடிப் பேரன்பு சான்றவருள் தலை நின்றாராதலின் 'திருவடி' யென்ற சொற்றொடர் அவரது நாமத்தோடு இணைக்கப்பட்டு, 'வாகீசத் திருவடி' யெனச் சிறப்பாக வழங்குகின்றது. அச்சொல்லை ஆசிரியர் நமது நாயனாருக்குச் சிறப்பாக அமைத்ததுபோலப் பிற அடியார்கள் நாமத்தோடு இணைத்தாரில்லை. 'அடிகள்' என்ற சொல் ஒருவாறு விளக்கலாம். 'வாகீசத் திருவடியாம் காபாலி

யடியவர்' என்ற செய்யுட் பகுதியையே 'காபாலித் திருவடியாம் வாகீசரடியவர்' என்று கொள்வாருமுளர்.

வீட்டின்பத்தை யடைதற் பொருட்டு இயற்றவேண்டிய தவம் முற்றியவராதலின் நமது நாயனர் 'நிறைதவத்தோர்' எனப்பட்டார். தவத்தோர்க்குத் தலைவராதலின் 'அருந்தவ வேந்தர்' என்னும் பெயர் எழுந்தது.

திருநாவுக்கரசு என்னுஞ் சொற்றொடரிலுள்ள 'அரசு' என்ற சொல்லையே சிறப்பாக எடுத்து 'ஆண்ட அரசு' என்றும், 'அரசர்' என்றும் பெயர் வழங்கினமை காண்க. சைவத் திருநெறித் தலைவராதலின் அரசு என்ற சொல் நமது நாயனருக்கு மிகவும் பொருத்தமுடையதே.

தமிழ்மக்களுட் சிறந்த வகுப்பாகிய சைவவேளாண் மரபிற் றோன்றித் தமிழ் நலமிக்க அருட்பாடற்றொண்டு செய்வதில் இணையற்றவராதலின் இன்றமிழ்க்கு மன்னன வாகீசர், இன்றமிழீசர், தமிழ் வேந்தன் என்ற நாமங்கள் எழுந்தன. தமிழ் நன்மக்களது விடா முயற்சிக்கு ஒப்பற்ற எடுத்துக் காட்டாக இலங்கிய நமது நாயனர் கயிலை சென்ற விடத்து அவரைத் 'தமிழாளியார்' என்றார் சேக்கிழார்.

அருளொழுக்கத்தில் தலைநின்றவரென்பதை 'யாவருக்குந் தவிராத ஈகை வினைத்துறை நின்றார்' என்னுஞ் சொற்றொடரால் விளக்கினர். இவ்வுலகில் வேண்டியவற்றை வேண்டியவர்க்குக் கொடுத்தலோடு நமது பிறவியற்றுப்போகும் வண்ணமும் அருள்வழி உய்க்கும் பெருந்தகையார் ஆதலின் அல்லற் பவமற அருளுந்தவமுதல் என்றார். ஒப்பற்ற சைவசித்தாந்தத்துட் கூறப்படும் ஞானத்தின் ஞானத்தைப் பெற்றவராதலின் ஞான அரசு என்றும், ஞானத் தவமுனிவ ரென்றும், செம்மையோர் என்றும், மையல் துறையேறி மகிழ்ந்து அலர்சேர் வாகீசர் என்றும், தவமுன் புரிதலில்

வருதொண்டெனு நிலைதலை நின்றுயர் தமிழிறையோர் என்றும், தாபதியார் என்றும் ஆசிரியர் கூறுவாராயினர்.

நமது நாயனுர் கடவுளை நேரே கண்டு அவரது இயல்பைப் பிறர்க்கு உணர்த்தும் திறமை வாய்ந்தவராதலின் செஞ்சடையார் சீர்விளக்குந் திறலுடையார் என்றும், அறிவிற் பெரியவர் என்றும் அழைக்கப்பெற்றுர். அளவற்ற அன்பும் அறிவும் அருளும் உடையராதலின் உலகமெங்கும் பரந்த புகழுடையாரென்பார் நாயனுரைப் பார்பரவும் திருமுனிவர், தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக்கரசு, அத்தனுர் திருவடிக்கீழ்நினைவகலா அன்புருகும் மெய்த்தன்மையுணர்வுடைய விழுத்தவத்து மேலோர், மூலஅன்பர், பொய்ப்பாசம் போக்குவார் என்று புகழ்ந்தனர்.

ஒரு நாவினுலே உரைசெய்ய முடியாதென்று புராணத்து முதற் செய்யுளுட் கூறியபடியே, சேக்கிழார் சுவாமிகள் நமது நாயனுரைச் 'செப்பரிய பெருமையினுர்' என்று துதித்தனர். கலைகள் யாவும் பயின்று அவற்றில் தலைசிறந்த கடவுட் கலையிலும் வல்லாராதலின் கலைவாய்மைக் காவலனுர், தொல்கலையின் பெருவேந்தர், கலைமொழிக்கு நாதர் என்னும் நாமங்கள் எழுந்தன. வாய்மை திறம்பா வாகீசர், மெய்த்தன்மையுணர்வுடைய விழுத்தவத்து மேலோர் என்னுஞ் சொற்றொடர்கள் நமது நாயனுர் மெய்ம்மைக்கு எல்லையாக விளங்கினுரென்பதை நனி விளக்கும்.

எய்துதற்கரிதான நிலைத்த அன்பும் ஞானமுமே அவர் வடிவென்பார் மன்னிய அன்புறுபத்தி வடிவான வாகீசர் என்றும், பேதமிலா ஓர் உணர்விற் பெரியவர் என்றும் கூறுவாராயினர். கருதியதை உலையாது முயன்று கைவரப் பெறும் ஆற்றலுடையராகலின் எண்ணமுடிக்கும் வாகீசர் என்னும் பெயர் எழுந்தது. இது நமது நாயனுர்க்குக் கயிலைக்காட்சியருளியவாற்ருன் வலியுறுத்தப்படும். எப்பொழுதும்

கோயிற்றிருப்பணி செய்வதிலேயே ஆழ்ந்த கருத்துடைய வராய் உழவாரப்படை யேந்திச் செல்பவராதலால் அப்பர் பெருமானது திருத்தொண்டைப்பற்றிச் சிறப் பாகக் கூறுமிடத்து ஆசிரியர் சேக்கிழார் அவருக்கு உழவாரப் படையாளி, நற்றொண்டர், திருத்தொண்டர் என்ற திருப்பெயர்களை உவந்தளித்தார். இன்னும் பல்வேறு அடைமொழிகள் திருநாவுக்கரசரது நாமத்தோடு அமைத் திருப்பதைப் புராணத்துள் பலவிடங்களிலும் காண்க. அவைகளெல்லாம் நாயனரது எல்லையற்ற அன்பையும், அருளையும், மெய்ஞ்ஞானத்தையும், நிறைதவத்தினையும், நற்றொண்டினையும் நாமரு சொல்லின்றிறத்தையும் சிறப் பாக எடுத்துக்கூறி அவருடைய அழியா விழுப்புகழைப் பாராட்டிப் போற்றுவன வென்பது புலனும்.

# ௧௩. தேவார ஆராய்ச்சி

திருநாவுக்கரசர் ஆதியிற் பாடிய தேவாரப்பதிகங்கள் ௪௯-ஆயிரம் என்று திருமுறைகண்ட புராணத்துள் குறிக்கப்பட்டது. ௪௯-ஆயிரம் திருப்பாட்டுக்களே பாடப் பட்டனவென்று கொள்வதற்கும் இடமுண்டு. 'பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி' என்ற திருவேகாதசமாலைப் பகுதியால் ௪௯௦௦-பதிகங்களே திருவாய்மலர்ந் தருளப் பட்டனவென்பது போதரும். தேவார முதல்வர் மூவருள் இவரே அதிகமாகப் பாடினவரென்று அறிகிறோம். இப் பொழுதுள்ள திருப்பதிகங்கள் ௩௧௪. அபயகுலசேகர சோழமன்னன் திருமுறை கண்டகாலத்து அவற்றிற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண்மணி யொருத்தியால் பண்முறை வகுக்கப்பட்டது. பண் ஒவ் வொன்றிற்கும் தாளவகை பலவாறாக அமைந்திருக்கின் றது. அது கட்டளையெனப் பெயர்பெறும். பலவகைப் பதிகங்களுக்கும் ஏற்றவாறு கட்டளைகள் அமைக்கப்பட் டன. நமது நாயனாரது திருநேரிசையும், திருவிருத்தமும், இரண்டு கட்டளையோடு கூடிய கொல்லிப்பண் அமைந் துள்ளன. குறுந்தொகையும், தாண்டகமும் தனித்தனி ஒவ்வொரு கட்டளைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இனி இப்பொழுதுள்ள திருப்பதிகங்களின் சிறப்பை ஒரு சிறிது ஆராய்வாம்.

நமது நாயனாரது தேவாரத் திருப்பாசுரங்கள் உயிர்க் குறுதி பயக்கும் உண்மைகளை அறுதியிட்டு உரைப்பன வாய், சிவாநுபவப்பயன் நிறைந்தனவாய், கற்பாரது உள்ளத்தை யுருக்குவதில் ஒப்பற்ற தன்மை வாய்ந்தவன வாய், இனிய எளிய சொன்னடையுடையனவாய்த் திகழ் கின்றன. தாழ்மை மிக்க அவரது மனம்போல அவ ருடைய திருப்பாடல்களும் தண்ணென்ற ஒழுக்கமுடை

யனவாய்த் திகழ்கின்றன. கடவுளது திருவடியை வருடும் உள்ளத்தாராதலின் அதைமாத்திரமே எடுத்துக்கூறும் பதிகங்கள் இவரது தேவாரத்துள் மிகுதிப்பட்டுள்ளன. 'அரவணையான் சிந்தித்தரற்றுமடி' என்னும் முதற் குறிப்புடைய திருவதிகைத் திருவீரட்டானத் திருப்பதிகமும் 'திருவின்னம்பரான்ற ணிணையடியே' என்று முடியும் திருப்பதிகமும், 'ஐயாறனடித்தலமே' என்று முடியும் திருவையாற்றுப் பதிகங்களிரண்டும், 'தன்பொன்னடிக்கீழெனையே' என்று முடியும் மற்றோர் திருவையாற்றுப் பதிகமும், 'நானடிபோற்றுவதே' என்று திருப்பூந்துருத்திப் பெருமானை வணங்கிய திருப்பதிகமும் பிறவும் சிவபெருமானது திருவடிக் கமலங்களையே முழுவதும் வழுத்துவனவாக அமைந்துள்ளன. இத்தகைய பதிகங்கள் இந்நாயனார் தேவாரத்திலேதான் சிறந்து விளங்குகின்றன.

திருக்குறுந்தொகை, திருத்தாண்டக முதலியன இவர் தேவாரத்தின் கண்ணேயன்றிப் பிற தலைவர் தேவாரங்களுள் காணப்படா. திருக்குறுந்தொகையில் மக்கட்கு அறிவுறுத்தும் சீர்மையும், திருத்தாண்டகத்துள் எல்லாமாயுடனாய் வேறாய் நின்ற சிவபரம்பொருளது இயல்பு கூறும் பெற்றியும் சிறந்து விளங்குகின்றன. இறைவரது பேராற்றலையும் பொருளையும் அடைமொழிகளால் விளக்குமிடத்து அவற்றைப் படர்க்கையிலும் முன்னிலையிலும் வைத்துக் கூறிய தாண்டகங்கள் பலவும் அருச்சனை செய்வதற்குப் பெரிதும் பொருத்தமாக இருத்தலைத் தமிழ் மக்கள் நன்கு உணர்தற்பாலர். போற்றித் திருத்தாண்டகங்கள் ஐந்திற்குக் குறைவில்லை. சில பதிகங்களுள் 'நீயே' என்ற சொல் மிகுதியும் பயின்று வருகின்றது.

ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

படர்க்கையாகக் கூறுமிடத்து 'காண்', 'போலும்', 'கண்டாய்' என்ற சொன் முடிபுகள் பயின்று வருகின்றன.

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழு மறைக ணான்கும்
ஆனவன்கா ணானைந்து மாடினான்காண்
ஐயன்காண் கையிலன லேந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்சேய் தான்காண்
கருதுவா ரிதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே. க

பிறையுறு சடையர்போலும் பெண்ணொரு பாகர்போலும்
மறையுறு மொழியர்போலும் மான்மறை யவன்றனோடும்
முறைமுறை யமரர்கூடி முடிகளால் வணங்கநின்ற
நறவமர் கழர்போலு நாகவீச் சரவனாரே. உ

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே. ௩

இம்மூன்று முடிபுகளின்றியும் அடைமொழிகள் தொகுக்கப்பட்டுவரும் பதிகங்களுமுள்ளன.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமர ரேறே. க

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் றன்னைக்
கற்பகமா யடியார்கட் கருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை யாவடுதண் டுறையுண் மேய
வரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே. உ

தமது நெஞ்சை விளித்துக் கூறும் பதிகங்களும் அப்பர் தேவாரத்திற் சில உள.

நிலைபெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலவர்தன்முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே.

தமது அறிவிற்கும் உணர்ச்சிக்கும் இடையறாப் பேரின்பம் அளிக்கின்றாரென்பதை ஒளியையும் இன்சுவை

யையு முணர்த்தும் சொற்றெருகுதிகளால் விளக்கு மரபு நமது நாயனுர் தேவாரத்தில் பலவிடத்துங் காணப்படும். அதற்கு எடுத்துக்காட்டாக இலங்கும் தேவாரப் பகுதிகளாவன :

தேனைப்பாலைத் திகழொளியை. க

தேனேவானோர் செழுஞ்சுடரே. உ

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே. ௩

மாசொன்றிலாப் பொற்றூண்காண்
மாமணிநற்குன் றெப்பான்காண். ௪

திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலை. ௫

குருகாம் வயிரமாங் கூறுநாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளேதானும்
பருகா வமுதமாம் பாலினெய்யாம்
பழத்தினி னிரதமாம் பாட்டிற்பண்ணும். ௬

அம்மை பயக்கு மமிர்துகண்டா
யந்தேன் றெளி கண்டாய்
....................................
மெய்ம்மையே ஞான விளக்குக்கண்டாய். ௭

திருமணியைத் தித்திக்குந் தேனைப்பாலைத்
தீங்கரும்பி னின்சுவையை. ௮

‘ கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சியான்காண்
.........................................
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண். ௯

...எம்மானை யென்னுள்ளத் துள்ளேயூறும்
அத்தேனை யமுதத்தை யாவின்பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை யரனை. ௧0

…கருதுவா ரிதயத்துக் கமலத்தூறும்
தேனவன் காண்…… கக

………வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன்றில்லாப்
பொன்னுருவை………… கஉ

பாலாகித் தேனாகிப் பழமுமாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையானானை. கங

முத்தினை மணியைப் பொன்னை முழுமுதற் பவளமேய்க்கும்
கொத்தினை வயிரமாலைக் கொழுந்தினை…… கச

……உணர்வாகி அடியேன துள்ளேநின்ற
தேனமுதை……………… கரு

ஆலைக் கரும்பின் றெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. கசு

நமது நாயனார் முழுமுதற் கடவுளைச் 'சைவன்', 'அறிவன்' என்ற மொழிகளால் குறித்திருக்கின்றார்.

செய்யநின் கமல பாதஞ் சேருமா தேவர் தேவே
மையணி கண்டத் தானே மான்மறி மழுவொன் றேந்தும்
சைவனே சால ஞானங் கற்றறி விலாத நாயேன்
ஐயனே யால வாயி லப்பனே யருள்செ யாயே. க

நறுமலர் நீருங் கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்திச்
— … … …
அறிவனே யால வாயி லப்பனே யருள்செ யாயே. உ

'ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்றதற்கிணங்க சிவதலங்கள் பலவும் தொகுத்தமைக்கப்பட்டுள்ள திருப்பதிகங்கள் அப்பர் தேவாரத்துள்ளே மிகுந்துள்ளன. சிவபெருமான் மலைமீது கோயில்கொண்

டெழுந்தருளி யிருக்கும் தலங்களையெல்லாந் தொகுத்து ஓர் பாட்டிலும், அவ்வாறே சுரங்களை யெல்லாம் மற்றோர் பாட்டிலும் இனிதமைத்திருத்தல் காண்க.

கந்தமாதனங் கயிலைமலை கேதாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணாரண்ணை
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப்பத
மகேந்திர மாமலைநீல மேமகூடம்
விந்தமாமலை வேதஞ் சையமிக்க
வியன்பொதியின் மலைமேரு வுதயமத்தம்
இந்துசேகர னுறையுமலை கண்மற்று
மேத்துவோ மிடர்கெடநின் றேத்துவோமே. க

நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளேச்
சுரநாகேச்சுர நாகளேச்சுர நன்கான
கோடீச்சுரங் கொண்டீச்சுரந் திண்டீச்சுரம்
குக்குடேச்சுர மக்கீச்சுரங் கூறுங்கால்
ஆடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர
மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண்கானல்
ஈடுதிரை யிராமேச்சுர மென்றென்றேத்தி
யிறைவனுறை சுரம்பலவு மியம்புவோமே. உ

பாவநாசத் திருப்பதிகத்துள் ஒவ்வொரு தலத்தில் வீற்றிருக்கும் பெருமானுக்கும் அடைமொழி கூறப்பட்டிருக்கின்றது. அவ்வடைமொழிகள் முன்னே காட்டியபடி நமது நாயனாருக்கு ஞானத்தையும் இடையறா வின்பத்தையு மளித்த சிவபெருமானது ஒளியு மின்சுவையுமாய வடிவினைப் பெரிதும் போற்றுகின்றன.

கோலக்காவிற் குருமணியைக்
குடமூக்குறையும் விடமுணியை
ஆலங்காட்டி லந்தேனை
யமரர்சென்னி யாய்மலரைப்

பாலிற்றிகழும் பைங்கனியைப்
பாராய்த்துறையெம் பசும்பொன்னைச்
சூலத்தானைத் துணையிலியைத்
தோளைக்குளிரத் தொழுதேனே. க

மாலைத்தோன்றும் வளர்மதியை
மறைக்காட்டுறையு மணாளனை
ஆலைக்கரும்பி னின்சாற்றை
யண்ணாமலையெம் மண்ணலைச்
சோலைத்துருத்தி நகர்மேய
சுடரிற்றிகழுந் துளக்கிலியை
மேலைவானோர் பெருமானை
விருப்பால்விழுங்கி யிட்டேனே. உ

சிவபெருமானது அடியார்க்கு யாதொரு குறைவுமில்லை, யாதொன்றும் அஞ்சவேண்டுவதில்லை, எந்நாளும் இன்பமேயென்னும் உண்மையைத் தமது அநுபவம் பற்றிச் சிறப்பாகவும் பொதுவாகவும் கூறும் திருப்பாடல்களாவன.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனே மொன்றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே. க

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. உ

சுண்ணவெண் சந்தனச்சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவளநிறமும்
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணென் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை க

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. ௨

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னுமுளோம்
எற்றுக் கோநம னார்முனி வுண்பதே. ரு

மெய்யன்பர்கள் கடவுள் திருவடியை யடைவதே யன்றிப் பிற உயர் பதங்களை விரும்பாரென்பதைப் பின் வரும் பாட்டில் நாயனார் தம்மேல் வைத்துக் கூறி யுள்ளார்.

அண்டர் வாழ்வு மமர ரிருக்கையுங்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.

மக்கள் உறுப்புக்கள் அனைத்தும் சிவவழிபாட்டிற்கே உரியவாக வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தும் திரு வங்கமாலையும் இவர் தேவாரத்தில் அமைந்துளது. கடவுளை மறந்து உலகவாழ்க்கையையே மெய்யென்று நம்பிக் காலங்கழித்தல் பெருந்தவறென்பதை,

கரைந்து கைதொழு வாரையுங் காதலன்
வரைந்து வைதெழு வாரையும் வாடலன்
நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்
விரைந்து போவது வீழி மிழலைக்கே. க

நடலை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெல்லாம்
அடைய நின்றிடு மானைக்கா வண்ணலே. உ

வேம்பினைப் பேசி விடக்கினை யோம்பி வினைபெருக்கித் [டீர்
தூம்பினைத் தூர்த்தங் கோர்சுற்றந் துணையென் றிருந்திர்தொண்
ஆம்பலம் பூம்பொய்கை யாரூ ரமர்ந்தா னடிநிழற்கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித் தொண்டுபட் டுய்ம்மின்களே. ௩

என்று திருப்பாட்டுக்களால் நாயனார் விளக்கிப் போந்தார்.

கடவுளை அச்சத்தினாலாதல் அன்பினாலாதல் வழிபடுதல் இன்றியமையாததென்பது,

அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதி லெய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. க

மன்றத்துப் புன்னை போல மரம்படு துயர மெய்தி
ஒன்றினா லுணர மாட்டே னுன்னையுள் வைக்க மாட்டேன்
கன்றிய காலன் வந்து கருக்குழி விழுப்ப தற்கே
அன்றினா னலமந் திட்டே னதிகைவீ ரட்ட னீரே. உ

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்
[படுமே.

என்ற திருப்பாடல்களால் வலியுறுத்தப்படும்.

இருவகைப் பற்றுக் காரணமாகச் செய்யும் முயற்சியையே சிறப்பாகக் கருதிக் கடவுள் வழிபாட்டைக் கைவிடக் கூடாதென்பது பின்வருஞ் செய்யுட்களால் உணரற்பாற்று.

குழலே யாழ்மொழி யாரிசை வேட்கையால்
உழலே யாக்கையை யூனு மூணர்விலீர்
தழலே நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினேம்
மிழலே யானடி சாரவிண் ணுள்வரே. க

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. உ

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனெ னுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே. ௩

நடலே வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலே சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. ௪

தவமுந் தவமுடையார்க்கே யாமென்பது

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே.

என்ற திருப்பாட்டாற் றெளியப்படும்.

அடியார்கள் ஈசன் றமரென்பதும், கடவுளை யடைகின்றவரை அவர் உறவினராகவைத்து ஆட்கொள்ளு

இன்றுரென்பதும் பின்வரும் பாட்டுக்களில் உணரக்கிடக்கின்றன.

ஞமனென் பானர கர்க்கு நமக்கெலாம்
சிவனென் பான்செழு மான்மறிக் கையினன்
கவனஞ் செய்யுங் கனவிடை யூர்தியான்,
தமரென் றாலுங் கெடுந்தடு மாற்றமே. க

வந்து கேண்மின் மயறீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யானினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி யுயக்கொளுங் காண்மினே. உ

முழுமுதற் கடவுள்மீது மெய்யன்பிலராய் வெளிவேடத்தால் தம்மைப் பிறர் பாராட்டவேண்டுமென்ற வீண் கருத்துடையவராய்ப் பொழுதுபோக்கும் புல்லறிவாளர்க்கோர் நல்லுரை

கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே

என்ற திருப்பாட்டிலும் பாவநாசத் திருக்குறுந்தொகை முழுவதிலுங் கூறப்பட்டுளது.

அங்கியோம்புதலும், கதிரவனைப் போற்றுதலும் சிவபரம்பொருளது வழிபாடாகக் கருதவேண்டுமென்பதை,

எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே, க

அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ

இருக்கு நான்மறை யீசனை யேதொழும்
கருத்தி னைநினை யார்கன் மனவரே ௨

என்ற தேவாரங்கள் வலியுறுத்தும்.

சிவபெருமானிடத்து மெய்யன்பு பூண்டு திருத்தொண்டு புரியும் அடியார்களிடத்துக் கூற்றவன் அணுகலாகாதென்னும் எச்சரிக்கை நவின்ற திறம்

இறையென் சொன்மற வேனமன் றூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்றமர்
நறவ நாறிய நன்னறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே, க

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்னம தீச னடியரை
விடைகொ ளூர்திய னடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே ௨

என்ற திருப்பாடல்களில் நன்று விளங்கும்.

அப்பர் சுவாமிகள் இறைவரை நோக்கி அடியார்க்காகப் பரிந்து பேசுதலைப் பசுபதித் திருவிருத்தப் பதிகத்தொவ்வொரு பாடலிலுங் காண்க. அப்பாடல்களில் இரண்டு வருமாறு:—

உடம்பைத் தொலைவித்துன் பாதந் தலைவைத்த வுத்தமர்கள்
இடும்பைப் படாம லிரங்குகண் டாயிரு ளோடச்செந்தீ
அடும்பொத் தனைய வழன்மழு வாவழ லேயுமிழும்
படம்பொத் தரவரை யாயெம்மை யாளும் பசுபதியே. க

தாரித் திரந்தவி ராவடி யார்தடு மாற்றமென்னும்
மூரித் திரைப்பௌவ நீக்குகண் டாய்முன்னை நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுட ரைங்கணை வேள்வெந்து வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும் பசுபதியே. ௨

நமது நாயனுர் தேவாரத்துள் பழமொழிகள் பல

விடத்தும் மலிந்து கிடக்கின்றன. சிவபெருமானது திருவடிகளை மிகவும் தாழ்ந்திறைஞ்சி இறைபணி நின்றவராகலானும் பல்லாற்றானும் விரிந்த மக்கட் பரப்புக்குத் தமது வாழ்க்கையில் நிகழ்த்திய அரும்பெருஞ் செயல்களால் அரிய எடுத்துக்காட்டாக இலங்கினாராகலானும் சைவசித்தாந்த நுண்பொருள் ஞானத்தை உலகிற்கு எளிய இனிய நடையில் அறிவுறுத்துவான் தோன்றியருளிய பேராசிரியர் திருவாக்கில் பழமொழிகள் உலாவுவது மிகவும் பொருத்த முடைத்தே.

அப்பழமொழிகள் சிலவற்றை ஈண்டுக் கூறுவாம்.

திருவாரூர்ப் பழமொழி யென்ற பதிகத்துள் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஓர் பழமொழி யிருத்தல் காண்க.

..................................ஆரூரனைக்
கையினாற் றொழாதொழிந்து **கனியிருக்கக்**
**காய்கவர்ந்த கள்வ னேனே.** க

..................................ஆரூரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி **முயல்விட்டுக்**
**காக்கைப்பின் போன வாறே.** உ

மதிதந்த வாரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகி யுய்யும்
விதியின்றி மதியிலியேன் **விளக்கிருக்க**
**மின்மினித்தீக் காய்ந்த வாறே.** ந

....................ஆலாலமுண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே **கரும்பிருக்க**
**இரும்புகடித் தெய்த்த வாறே.** ச

பிற பாடல்களில் வரும் பழமொழிகளாவன :—

முன்பெலா மிளைய கால மூர்த்தியை நினையா தோடிக்
**கண்கணை விரும்பி நாளுங் கருத்தழிந் தருத்த மின்றிப்**
**பின்பக லுணங்க லட்டும் பேதைமார் போன்றே னுள்ளம்**
அன்பனாய் வாழ மாட்டே னதிகைவீ ரட்ட னீரே. க

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து **பாழுக்கே நீரி றைத்தேன்**
**உற்றலாற் கயவர் தேரு** ரென்னுங்கட் டுரையோ டொத்தேன். ௨

**மோத்தையைக் கண்ட காக்கைபோல்** வினைகண் மொய்த்துன்
வார்த்தையைப் பேச வொட்டா மயக்கநான் மயங்கு கின்றேன். ௩

**ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய வாதரைப்போல்**
காற்றிற் கடுத்துல கெல்லாந் திரிதர்வர் காண்பதற்கே. ௪

நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும். ௫

என்றவிடத்து அதை மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தை விளக்கும் குறிப்பெனக் கொள்ளாது பழமொழி யென்றே கருதுவாரு முளர்.

**மன்றத்துப் புன்னைபோல** மரம்படு துயர மெய்தி. ௬

**நரிவரால் கவ்வச்சென்று நற்றசை யிழந்த தொத்த**
தெரிவரான் மால்கொள் சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார். ௭

பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல் காலநின் றேத்துமின் றொல்வினை
வெப்பிற் றேன்றிய **வெங்கதிர் கண்டவப்**
**புற்ப னிக்கெடு மாறது போலுமே.** ௮

பழமொழி போல உலகவழக்கிற் பயிலும் சில சொற்றொடர்களும் திருநாவுக்கரசு தேவாரத்தில் காணப்படுகின்றன.

முருகார் நறு மலரிண்டை..........................
இருகாற் குரம்பை யிதுநா னுடைய திதுபிரிந்தால்
தருவா யெனக்குன் றிருவடிக் கீழோர் **தலைமறைவே.** ௧

ஓதுவித்தாய்....................................
..............நின்பணி பிழைக்கிற் **புளியம்வளாரால்**
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. ௨

இதுகாறும் முழுமுதற் கடவுளினியல்பும், சிவனடியார் திறமும், சிவவழிபாடும் ஆராய்ந்ததுபோக, இனி மக்கள் யாக்கையினையும், இயற்கை வருணனையையும், பிறவற்றையும்பற்றி யெழுந்த நாயனாரது திருப்பாடல்களை ஒரு சிறிது ஆராய்வாம்.

யாக்கையை ஒன்பது ஓட்டை வாயிலுடைய ஓர் மாடமென்று பலவிடங்களில் நாயனார் கூறியுள்ளார்.

ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்

என்றது காண்க.

யாக்கையை நமது வீடுபோலவும் வர்ணிக்கின்றார். இரண்டு கால்கள் நட்டு இருமருங்குள்ளதாகலானும், நரம்பென்னுங் கழிகளால் வரியப்பெற்றும் உதிரப் புலாலால் சுவர் வளர்க்கப்பெற்றும், தோல் இறைச்சியால் கூரை வேயப்பெற்றும் ஏழுபலகணிகளையும் இரண்டு வாசல்களையும் உடையதாயு மிருத்தலானும் அது வீட்டையொத்திருக்கின்றது.

கால்கொடுத்தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிரமட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர்கூடி யொளிப்பதற் கஞ்சு கின்றேன்
சேலுடைப் பழனஞ் சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துள்ளானே.

இன்னும் உடம்பானது ஒருமுழ ஆழமும், ஒருமுழ நீளமும், அரைமுழ அகலமுமுள்ள ஒரு குட்டமாகவும், ஒன்பது துறைகளை யுடையதாகவும், அதனில் ஐந்துமுதலைகள் வாழ்வதாயும் வர்ணிக்கப்படுகின்றது.

ஒருமுழ முள்ள குட்ட மொன்பது துறையு டைத்தாய்
அரைமுழ மதனகல மதனில்வாழ் முதலை யைந்து
பெருமுழை வாய்தல் பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகி றவழு மாடக் கச்சியே கம்ப னீரே.

மற்றும்,

ஓம்பினேன் கூட்டை வாளா வுள்ளத்தோர் கொடுமைவைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக் கொள்ளா யொற்றியூ ருடைய கோவே

என்ற திருப்பாட்டில் உடம்பைக் கூடாகவும்,

புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலான் மூடி
ஒழுக்கரு வொன்பதுவா யொற்றுமை யொன்று மில்லை

என்ற அடிகளில் புழுப்பெய்திய சகடாகவும் வருணித்தமை காண்க.

இவ்வாறன்றி உடம்பைத் திருக்கோயிலாகவும், திருவுள்ளம் இறைவரது இருக்கையாகவும் எமது நாயனூர் வேறோரிடத்தில் கூறியுள்ளார்.

காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை யீச னூர்க்குப் போற்றவிக் காட்டி னேமே.

உடம்பை வீடாகவும், உள்ளத்தை விளக்காகவும் மற்றோரிடத்தும் விளக்கியுள்ளார்.

உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காண லாமே.

மேற்போந்தவற்றால், கடவுள்மீது உண்மையான பத்திமை பூண்டொழுகுவார் தமக்கும், சிவசிந்தனை யொரு சிறிதுமின்றி உலகப்பற்றுக்களிலேயே ஆழ்ந்த கருத்துடையவரா யுழலும் மற்றோர்கட்கும் யாக்கையின் பயனும் உள்ளத்தி னியல்பும்பற்றி யெழுந்துள்ள வேற்

றுமை உணரற்பாலது. மெய்யன்புடையார்க்குத் தமது உடம்பே திருக்கோயிலாகவும், உள்ளமே பெருமானிருக்கையாகவும், அன்பே சிவமாகவும் அமைந்திருப்பதால் அவர் எக்காலத்தும் ‘இதயத்துக் கமலத்தூறும் தேனைப்' பருகி ஆராமகிழ்ச்சி யடைகின்றார். இத்தகையாருடைய தூய திருமேனியின் பொலிவையும் நற்றொண்டு புரிவதனால் அஃதடையும் பயனையும் நாயனார் புராணத்துட் பலவிடங்களிலுங் காண்க. மற்றையோர் தம் உடம்போ காமக் குரோதாதிகள் வயப்பட்டுச் சிற்றின்பத்தையே நாடி பாழுங்கிணற்று நீர்போலத் தூய்மையற்று அகத்திருளால் ஒளி மழுங்கிச் சிவபெருமானுக்கன்றி ‘உள்ளக் கொடுமை'க்கே இடமாகக் கிடக்கின்றது. ஆகவே உள்ளத்தில் நிகழும் அன்பிற்கும் அவ்வன்பிற்குரிய செயல்களுக்கும் ஏற்பவே மக்கள் உடம்பானது உயர்பொருளாகவேனும், இழிபொருளாகவேனும் கருதப்படுமென்பது போதரும்.

இவ்வுடம்பிற்றானும் தொண்ணூற்றெட்டு நோய்களும் அணுகி அதனை நலியப்பெறுவண்ணம் காத்துக் கொள்வது அரன்கழலை அன்போடு தொழுதேத்துவார்க்கே முடியுமென்பது பின்வரும் பாட்டால் வலியுறுத்தப்படும்.

நாளு நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளு நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீ ரையாதே
கோளி லியரன் பாதமே கூறுமே.

நமது நாயனார் ஐம்புலன்களை வஞ்சக் கள்வராகவும் அவர்களை முக்கண் மூர்த்தியினது திருவடி நிழலுள் மறைந்து நின்று எய்யலாமென்றுங் கூறுகின்றார்.

புள்ளுவ ரைவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்

முள்ளுடை யவர்க டம்மை முக்கணன் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங் குணர்விற லெய்ய லாமே.

உழவு செய்து நெல்விளைத்தல்போல, சிவகதியை விளைவிக்க வேண்டுமென்பதை,

மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்பொறையெனு நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே

என்ற பாட்டில் உணர்த்துவதறிக.

ஆசையைக் கயிருகவும், அக்கயிற்றைப் பற்றிய உள்ளம் ஊசலாடுவதாகவும், அக்கயிறு அற்றவிடத்து விழுமிடம் ஈசன் திருவடித் தாமரையாகவும் புனைந்து கூறியுள்ள திருப்பாட்டு வருமாறு :—

ஆசைவன் பாச மெய்தி யங்குற்றே னிங்குற் றேனாய்
ஊசலாட் டுண்டுவாளா வுழந்துநா னுழித ராமே
தேசனே தேச மூர்த்தீ திருமறைக் காடு மேய
ஈசனே யுன்றன் பாத மேத்துமா றருளெம் மானே. க

உறுகயி றூசல் போல வொன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானே னதிகைவீ ரட்ட னீரே. உ

நெஞ்சினை ஆழமான ஓர் நீர்நிலை யாகவும் அதிலே வஞ்சமென்பது பெரிய சுழியாகவும் நாயனர் ஓரிடத்தில் வருணித்தது காண்க.

நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுள்ளே
வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் னுமைத் திருவெழுத்
தஞ்சுந் தோன்ற வருளுமை யாறரே.

பஞ்ச பூதங்கள் ஓர் வலையாகுமென்பதும், அது வஞ்ச மாகிய ஆற்றில் வீசப்பட்டிருக்கின்ற தென்பதும், அவ் வலையின்கண் அகப்படா வண்ணம் ஈசனை நெஞ்சினால் நினைக்க வேண்டுமென்பதும்,

பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நானுமா மாத்தூ ரழகனை
நெஞ்சி னுணினைந் தேனினை வெய்தலும்
வஞ்ச வாறுகள் வற்றின காண்மினே

என்ற பாட்டில் அறிவுறுத்தப்படும்.

தொண்ணூற்ருறு தத்துவங்களையும் அவற்றின் செயல்களையும் பற்றிக் கூறுந் திருப்பாட்டுக்களாவன.

முப்பது முப்பத் தாறு முப்பது மிடுகு ரம்பை
அப்பர்போ லைவர் வந்து வதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்ரு லுய்யுமா றறியமாட்டேன்
செப்பமே திகழு மேனித் திருப்புக லூர னீரே. க

துருத்தியாங் குரம்பை தன்னிற் ருெண்ணூற்றங் கறுவர் நின்று
விருத்திதான் றருக வென்று வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு வந்துவந் தடைய நின்ற
அருத்தியார்க் கன்பர் போலு மதிகைவீ ரட்ட னுரே. உ

நமது நாயனுர் கடவுளை வணங்குதலாலே இம்மையி லேயே வல்வினை நீங்கப்பெற்றுப் பயனடையலாமென் பதை அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

இம்மை யம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்
மெய்ம்மை யானினை வார்கடம் வல்வினை
வம்மின் றீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே. க

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்

பிரமன் மாலொடு மற்றெழிந் தார்க்கெலாம்
குரவ ஞுருறை யுங்குட மூக்கிலே. உ

'அஞ்சு' என்ற சொல்லை ஐம்பூதத்திற்கும் ஐம்புலனிற்கும், ஐந்தெழுத்திற்கும், கடவுள் ஐந்து திருமுகத்திற்கும் ஓர் பாட்டில் வைத்து அழகாக வழங்கியிருத்தல் காண்க.

அஞ்சினு லியற்றப் பட்ட வாக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினு லடர்க்கப் பட்டிங் குழிதரு மாத னேனை
அஞ்சினு லுய்க்கும் வண்ணங் காட்டினுய்க் கச்சந் தீர்ந்தேன்
அஞ்சினுற் பொலிந்த சென்னி யதிகைவீ ரட்ட னீரே.

சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் கயிலாயமலையைத் திருமலையென்று சிறப்பித்து ஓர் பாட்டிற் கூறப்படுகின்றது.

கருந்தடங் கண்ணியுந் தானுங் கடனுகைக் காரோ ணத்தான்
இருந்த **திருமலை** யென்றிறைஞ் சாதன் றெடுக்கலுற்றான்
பெருந்தலை பத்து மிருபது தோளும் பிதிர்ந்தலற
இருந்தரு ளிச்செய்த தேமற்றுச் செய்தில னெம்மிறையே.

பெரியபுராணத்துள்ளும் திருக்கயிலாயமலையைத் திருமலையெனச் சிறப்பித்தமை காண்க.

நமது நாயனுர் தேவாரத்துள் கற்பனை நயமும் நகைச்சுவையும் பொருந்திய பாடல்களும் பலவுள. சிவபெருமானது திருமுடியில் கங்கையும் பாம்பும் மதியு மிருப்பதை மிகவும் அழகாகப் பின்வருஞ் செய்யுளிற் கூறுகின்றுர்.

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே.

இதனுள் பாம்பைக்கண்டு கங்கையாகிய நங்கை அஞ்சுவதாகவும், நங்கையை மயிலென்று பாம்பு அஞ்சுவதாகவும், பாம்பு தன்னை விழுங்கிவிடுமென்று மதி யஞ்சுவதாகவும் அமைத்திருத்தல் காண்க. மற்றோரிடத்தில் யானையின் உரியைப் போர்த்திருப்பதால் அதனோடு தோன்றும் பிறையானது மின்னலென்று அஞ்சி சுவாமியினது திருமேனியிலுள்ள நாகம் பயப்படுவதாகக் கூறியுள்ளார்.

நாகத்தை நங்கை யஞ்ச நங்கையை மஞ்ஞை யென்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தி னுரிவை போர்த்துப்
பாகத்தி னிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாக மடங்குமா ரூர னார்க்கே.

இன்னும் கங்கையினது ஆரவாரத்தைக் கேட்டு உமையம்மை ஊடல்கொண்டதாகவும் அவ்வூடலைத் தீர்க்கவே பெருமான் பாடினது சாமவேதமென்றும், பாடல் பாடவே அதற்கேற்ற ஆடலுமாடினரென்றும் நாயனார் செப்பினார்.

சூடினார் கங்கையாளைச் சூடிய துழனிகேட்டங்
கூடினா ணங்கையாளு மூடலை யொழிக்கவேண்டிப்
பாடினார் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி யதிகைவீ ரட்டனாரே.

சிவபெருமானது திருமுடியைக் கொன்றை வளரும் காடெனவும், சிரிக்கின்ற வெண்டலைக்குச் சுடலையெனவும், கங்கைக்கு அது சேருங் கடலெனவும், பாம்புக்குப் புற்றெனவும் திங்களுக்கு வானமெனவும் நயம்பெறக் கற்பித்துளார்.

அங்கட் கடுக்கைக்கு முல்லைப் புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி யூரர் திருமுடியே.

ஓர் செய்யுளுள் கடவுளது திருவருட் செயலாகிய ஐந்தொழிலை நியாயமன்றத்துட் கூறும் வழக்குப்போலப் புனைந்து கூறியுள்ளார். அது வருமாறு :

ஏன்றுகொண் டாயென்னை யெம்பெரு
மானினி யல்லமென்னில்
சான்றுகண் டாயிவ் வுலகமெல்
லாந்தனி யேனென்றென்னை
ஊன்றிநின் ருரைவர்க் கொற்றிவைத்
தாய்பின்னை யொற்றியெல்லாம்
சோன்றுகண் டாய்கச்சி யேகம்ப
மேய சுடர்வண்ணனே.

இப்பாட்டின்கண்ணே, தன்னை யாட்கொண்ட கடவுள் ஆட்கொள்ள வில்லையென்று சொன்னால் உலகமெல்லாம் அதற்குச் சான்று பகருமாதலின், அவர் அதை மறுக்க முடியாதென்று குறிப்பித்தனர். எப்போதுந் தமக்கு உடைமையாக இருந்தாலும் கேவல நிலையில் நின்ற தன்னை ஐவர்க்கு ஒற்றியாகச் சகல நிலையில் புகுத்தியதாகவும், இறுதியில் சுத்த நிலைக்குத் தன்னை ஒற்றி நீக்கி மீட்பித்துக் கொண்டதாகவுங் கூறியது காண்க.

**மாணிக்கவாசக சுவாமிகள்,**

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ

என்றதுபோல 'வடிவுடைமாமலை' என்ற பாட்டில் நாயனார்,

பிடிமத வாரணம் பேணுந் துரக நிற்கப்பெரிய
இடிகுரல் வெள்ளெரு தேறுமி தென்னைகொ லெம்மிறையே

என வினவியது காண்க.

அப்பர் தேவாரத்துள் இயற்கைப் பொருள்களின் வருணனை ஞானசம்பந்தர் தேவாரத்துள் காணப்படுவதுபோல

மிகுதியாகக் கண்டிலமெனினும் சில பாட்டுக்களில் அது பயின்றுவருதல் நோக்கத் தக்கது. திருவதிகைத் திருவிருத்தப் பதிகத்திலுள்ள ஓர் பாட்டு வருமாறு:

பைங்காற் றவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுகர்
அங்காற் குவளைமே லாவி யுயிர்ப்ப வருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடி லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீர னருள்வைத்த வீரட்டமே.

இதனுள், பசியகாலையுடைய தவளைகள் பறைகொட்டப், பாசிலைபடர்ந்த பொய்கையுள் விளங்கும் அழகிய காம்பை யுடைய குவளை மலர்மேல் உயிர்தளிர்க்கும் வண்ணம் செவ்விய காலையுடைய நாரைகள் நெருங்கி யுலாவிச் சேர்ந்து மகிழ்வதை யுரைத்தமை காண்க.

தென் கழிப்பாலை பெருமான்மீது வணங்கிப் பாடி யருளிய பாடலொன்றில், நெய்தல் நிலப்பறவையாகிய குருகு அங்குள்ள தாழைமடற் குருத்தினைத் தனது பிள்ளையென் றெண்ணி அன்பால் தழுவுவதாகப் புனைந் துரைத்தனர்.

நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று
கைதை மடற்புல்கு தென்கழிப் பாலை யதனுறைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன் வைத்த பரிசறியோம்
எய்தப் பெறினிரங் காதுகண் டாய்நம் மிறையவனே

இன்னும் அப்பாட்டினுள் சிவபெருமான் பாம்பினையும் பிறையினையும் ஓரிடத்து வைத்ததை ஓர் வியப்பாகக் கூறி யுள்ளார். பாம்பு பிறையைப் பற்றிக்கொள்ளுமாயின் சிறிதும் இரக்கமின்றி அதனை விழுங்கிவிடும். அவ்வா றிருப்பவும் அவ்விரண்டையும் ஓரிடத்தில் ஒன்றை யொன்று நலியாமல் வைத்தது இறும்பூது அளிப்ப தாயிற்று.

கீழ்வரும் இரண்டு பாட்டுக்களில் திருவலம்புரத்தி லெழுந்தருளி யிருக்கும் பெருமானை நாயனுர் வணங்கும் போது அத்தலத்தின் சிறப்பையே செய்யுள் முழுவதிலும் வருணித்தது காண்க.

செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழ மினிய நாடித்
தங்கயந் துறந்து போந்து தடம்பொய்கை யடைந்து நின்று
கொங்கையர் குடையுங் காலைக் கொழுங்கனி யழுங்கி ஞராம்
மங்கல மனையின் மிக்கார் வலம்புரத் தடிக ளாரே.

இப்பாட்டில், கயல்மீன்களும் சேல்மீன்களும் தத்தமது மடுக்களினின்றும் மேலே பாய்ந்து மரங்களிலுள்ள இனிய பழங்களைத் தாக்கி, அவற்றை அருகேயுள்ள பெரிய பொய்கையில் முழுகித் தண்ணீரெடுக்கும் மங்கையர் மருங்கு திடீரென விழும்படி செய்யவும், அப்பழங்கள் விழுந்தமையால் சிறிது வருந்தினும் மங்கலப்பொருளாதலின் அவற்றை அவர்கள் கைக்கொண்டு வீட்டிற்குச் சென்றனரென்பது குறிப்பிக்கப்பட்டது.

அருகெலாங் குவளை செந்நெ லகவிலை யாம்ப னெய்தல்
தெருவெலாந் தெங்கு மாவும் பழம்விழும் படப்பை யெல்லாம்
குருகினங் கூடி யாங்கே கும்மலித் திறகு லர்த்தி
மருவலா மிடங்கள் காட்டும் வலம்புரத் தடிக ளாரே.

இப்பாட்டின் பொருளாவது :

திருவலம்புரத்தின் பக்கங்களிலெல்லாம் செந்நெல் வயல்களும் அவற்றின்கண்ணுள்ள குவளை, ஆம்பல், நெய்தல் மலர்களும் செறிந்து அழகு செய்தன. வழியின் இருமருங்கும் வைத்துள்ள தென்னை, மா முதலிய மரங்கள் கனிகளை உதிர்த்தன. தோட்டங்களிலே நாரைகள் கூடி மகிழ்ச்சியோடு கூவிக்கொண்டும் இறகுலர்த்திக் கொண்டும் அவ்வூர்க்கு வருகின்றவர்களுக்குத் தக்க தங்கு

மிடம் ஈதெனக் காட்டுவதுபோல் உலாவித்திரிந்தன வென்பதே.

திருப்புத்தூரென்னும் பதியானது, கொன்றைமரங்கள் பொன்போன்ற நறும்பூக்களை யுதிர்ப்ப அவை காந்தண் மலராகிய கையகத்தே விழவும், அதனைக் கண்டு வண்டுகள் பூவினின்றும் தேன் நுகரும் கருத்தால் இசை பாடவும், இவை கலந்து தழைத்தோங்கிய செழும் பொழில்கள் நிறைந்த ஊரென்பதை நமது நாயனார்,

பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

என்ற அடிகளால் பெறவைத்தமை காண்க.

அகப்பொருட் டுறைகளிற் சிலவும் அப்பர் தேவாரத்துள் காணப்படுகின்றன. சிவபெருமானைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் வைத்துப்பாடிய பதிகங்களில், தலைவனது பிரிவாற்றாமையினால் துயருற்ற தலைவி அவனை அழைத்து வரும்படி குயில்கள் பால் தூது விடுப்பதாகக் கூறும் 'குயில்விடுதூது' என்ற துறையை யமைத்தது காண்க.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே.

மற்றோர் பாட்டில் தலைவி கிளியைத் தூதுவிடுவதாக நாயனார் கூறுகின்றார். அது வருமாறு:

ஓது பைங்கிளிக் கொண்பா லமுதட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து

மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் றொடங்குமே.

ஈண்டுத் திருஞான சம்பந்தப்பெருமான் பாடியருளிய திருத்தோணிபுரத்துத் திருப்பதிகம் (பழந்தக்கராகம்) உற்று நோக்கத்தக்கது. பறவைகளைத் தூதுவிடும் தலைவி யினது மனநிலை அப்பதிகத்தினின்றும் நன்கு தெளியப் படும். கிளியை யமைத்துக்கூறும் பாட்டாவது:

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

தலைவி பிரிவாற்றாமையாற் புலம்புவதைக் கண்ட நற்றாய் வியப்பும் கவலையும் கொண்டதாகக் கூறுஞ் செய் யுட்கள் வருமாறு:

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
    தானவனே யென்கின் றாளாற்
சினபவ்ளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
    வெண்ணீற்ற னென்கின் றாளா
லனபவள மேகலையோ டப்பாலைக்
    கப்பாலா னென்கின் றாளாற்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
    சேர்வானைக் கண்டாள் கொல்லோ.

இப்பாட்டில் தலைவனைக் கண்டவிடத்து அவனது புகழை வியந்துகூறும் தலைவியின் தன்மையை நற்றாய் உணர்த்து மாறு காண்க.

முற்றி லாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கு மறிவில ளாகிலுங்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றமூர் தியென் றாளெங்கள் பேதையே

என்றவிடத்து, தோழியர் தலைவி நற்பருவம் அடையா முன்னரே எவ்வாறு தலைவன் பெருமையை யுணர்ந்து காதல்கொள்ளத் துணிந்தாளென்று இறும்பூதுற்றன ரென்பதும்,

வண்ண மும்வடி வுஞ்சென் று கண்டிலள்
எண்ணி நாமங்க ளேத்த நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
மண்ண லேயறி வானிவ டன்மையே

என்ற திருப்பாட்டால் அவர்கள் தாமடைந்த இறும்பூதினைச் சிவபெருமான்பாலே சார்வித்து அவனே தலைவி செயலின் றன்மையை விளக்கவேண்டுகின்றா ரென்பதும் தெளியப்படும்.

பிறிதோர் பாட்டில், பேய்க்கணங்களோடு உறவு கொண்டு சுடுகாட்டினைத் தமது உறைவிடமாக வைத்து வெண்டலையில் பலியேற்றுண்பவராய் உடம்பிலே யொரு பெண்கொடியையு முடையவரா யிருக்கின்ற ஓர் தலைவனை எவ்வாறு தனது மகள் காதலித்தாள் என்று நற்றாய் இரங்குவதாகவும் கூறப்பட்டது. அத்திருப்பாடலாவது:

உறவு பேய்க்கண முண்பது வெண்டலை
யுறைவ தீமமு டலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடற் றோணி புரத்துறை
யிறைவ னார்க்கிவ ளென்கண்டன் பாவதே.

திருநாவுக்கரசுநாயனார் திருத்தொண்டு செய்வதையே சிறப்பாகக் கருதினவராதலாலும் தன்னை எப்பொழுதும் சிவபெருமானுடைய அடிமையாகக் கருதும் தாழ்ந்த எண்ணமுடையவராதலாலும் சிவமாந்தன்மை பொருந்திய திருத்தொண்டர்களின் பெருமையைத் தமது பதிகங்களில் சிறப்பித்துப் பாடியருளி யுள்ளார். திரு ஆவடுதுறைப்

பெருமானை வணங்குங்காலத்துச் சிவபெருமான் பிள்ளையாருக்கு ஆயிரம்பொன் அருளிய செயலினைக் குறிப்பித்தார்.

மாயிரு ஞால மெல்லா மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறைய னாரே.

தமது திருப்பெயரையே மந்திரமாகக் கருதித் திருத்தொண்டு செய்துவந்த அப்பூதியடிகளார் பெருமையை விளக்கிய திருப்பாடல் முற்கூறப்பட்டது காண்க.

இன்னும், திருக்குறுக்கைத் திருநேரிசைப்பதிகத்தில் சண்டேசுரர், கோச்செங்கட்சோழர், சாக்கியர், கண்ணப்பர், மாவலி கணம்புல்லர் இலங்கை மன்னன் முதலிய திருத்தொண்டர்களின் விழுமிய திறத்தையும், மாலும் அயனும் மார்க்கண்டேயரும் சிவபெருமானுக்கு வழிபாடாற்றிய தன்மையையும் நாயனார் உணர்த்தியுள்ளார்.

அப்பதிகம் வருமாறு :

ஆதியிற் பிரம னார்தா மர்ச்சித்தா ரடியிணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கைவீ ரட்ட னாரே. க

நீற்றினை நிறையப் பூசி நித்தலு நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூசித் தாட்டு மந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்ற தென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. உ

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ங

சிலந்தியு மானைக் காவிற் றிருநிழற் பந்தர் செய்து
உலந்தவ ணிறந்த போதே **கோச்செங்க** ணானு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௪

ஏறுட **னேழ டர்த்தா** னெண்ணியா யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை யர்ச்சித்தா னடியி னைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோ ராழி யீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௫

கல்வினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் **சாக்கி யனார்**
நெல்லினார் சோறு ணாமை நீள்விசும் பாள வைத்தார்
எல்லியாங் கெரிகை யேந்தி யெழிறிகழ் நட்ட மாடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௬

காப்பதோர் வில்லு மம்புங் கையுடை யிறைச்சிப் பாரந்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்யக் குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பது பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. ௭

நிறைமறைக் காடு தன்னி னீண்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடன் மண்ணும் விண்ணு நீண்டவா னுலக மெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. ௮

அணங்குமை பாக மாக வடக்கிய வாதி மூர்த்தி
வணங்குவா ரிடர்க டீர்க்கு மருந்துநல் லருந்த வத்த
**கணம்புல்லர்க்** கருள்கள் செய்து காதலா மடியார்க் கென்றுங்
குணங்களைத் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே. ௯

எடுத்தனை னெழிற் கயிலை **யிலங்கையர் மன்னன்** றன்னை
யடுத்தொரு விரலா லூன்ற வலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தன கைந ரம்பால் வேதகீ தங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாளாள் குறுக்கைவீ ரட்ட னாரே. ௧௦

நமது நாயனாருடைய சிற்சில திருப்பாடல்களில் **எதிர்மறையணி** வழங்கியிருத்தலைக் காணலாம்.

அவற்றுளொன்று வருமாறு :

கரும்பு பிடித்தவர் காயப்பட் டாரங்கோர் கோடலியா
லிரும்பு பிடித்தவ ரின்புறப் பட்டா ரிவர்கணிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழணி யாரூ ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதொன்று நானுன்னை வேண்டுவனே.

கரும்பு பிடித்தவரென்பது மன்மதனைக் குறிக்கும். மன்மதன் கரும்பினாற்செய்த வில்லால் சிவபெருமானை யெதிர்த்ததும், அவருடைய நெற்றிக்கண் அழலால் அழிவுற்றதும் திருமுறைகளில் பலவிடங்களிலும் முழங்கப் பெறுவதுவாகும்.

இரும்புபிடித்தவர் அரிவாட்டாய நாயனாராவர். இவர் சிவபெருமானுக்குச் செந்நெல்லும், செங்கீரையும், மாவடுவும் நாடோறும் தவறாது அமுதுசெய்விக்கும் திருத்தொண்டு உடையவராதலால், ஓர்நாள் அத்திருப்பணி தடையுற்றகாலை, மிகவும் வருந்தித் தம் உயிரை நீத்தற் பொருட்டு அரிவாளை யெடுத்து ஊட்டியை அரியலுற்றார். அன்பர்களை ஆட்கொள்ளுவதையே தொழிலாகவுடைய எம்பிரான் உடன்றோன்றி நாயனாருக்கு அருள்புரிந்தனர்.

ஈண்டு அன்பின் செயலாலேயே இன்பம் அடையக் கூடுமென்பதை நாயனார் ‘இரும்பு பிடித்தவர்’ என்ற சொற்றொடரால், எதிர்மறை நயந்தோன்ற வலியுறுத்தினமை காண்க.

சிவபெருமான் உயிர்கள் உய்யும்பொருட்டுப் பல்வேறு வடிவும் இயற்கையுங் கொண்டு விளங்குவாரென்பதை நமது நாயனார்,

ஆயிரந் தாமரைபோலு மாயிரஞ் சேவடியானும்
ஆயிரம் பொன்வரைபோலு மாயிரந் தோளுடையானும்
ஆயிர ஞாயிறுபோலு மாயிர நீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானு மாரூ ரமர்ந்த வம்மானே

என்ற திருப்பாட்டில் பெறவைத்தார். இக்கருத்து புருட சூக்த மந்திரத்தில் அமைந்திருப்பது காண்க. இன்னும் திருவாசகத்திலும், கந்தபுராணத்திலும் இதே கருத்து இனிது விளங்கப்பெற்றிருக்கின்றது.

*வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு*
*நூறுநூ றுயிர மியல்பின தாகி*
*ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்*
*கூறுடை மங்கையுந் தானும்வந் தருளி.*

(கீர்த்தித்திருவகவல்).

*எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றின்*
*அவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கரு டருவாய் போற்றி.*

(கந்தபுராணம்).

தம்மை அன்புடன் தொழுதேத்துவார்க்கு இனியராதலால் சிவபெருமானை **நச்சுவார்க்கினியர்** என்று நாயனார் அழைத்தது காண்க.

*கச்சையே ராவர் போலுங் கழறயணி மிடறர் போலும்*
*பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்*
*இச்சையான் மலர்க டூவி யிரவொடு பகலுந் தம்மை*
**நச்சுவார்க் கினியர்** *போலு நாகவீச் சரவ னாரே.*

இஃது ஆசிரியர் நச்சினார்க்கினியர் சைவரென்பதைக் குறித்தல் காண்க.

சரித்திர ஆராய்ச்சியைத் தழுவிய சில குறிப்புக்களும் அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றன. சிவபெருமான் மதுரைத் தமிழ்ச்சங்க நில்வியகாலத்தே தருமிக்குப் பொற்கிழியளித்த திறம் திருப்புத்தூர்த் திருத்தாண்டகமொன்றில் போற்றப்படுகின்றது. அப்பாட்டு வருமாறு :

*மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்*
*விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்*

**நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி**
**நற்கனகக் கிழிதருமிக் கருளி னேன்காண்**
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

திருப்பூவணத் திருத்தாண்டகத்தில் மாணிக்கவாசக ருக்காகச் சிவபெருமான் வைகையாற்றில் புரிந்த திருவிளை யாடலை அமைத்துப் பாடியுள்ளார்.

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்று
மணிகிளரு முருமென்ன வடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்று
மணமலிந்த நடந்தோன்று மணியார் **வைகைத்**
**திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றுஞ்**
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

இக்குறிப்பு **மாணிக்கவாசகர்காலம்** மூவர்க்கு முற்பட்ட தென் பதை யுணர்த்துமென்க.

நமது நாயனார் தாம் உலகுய்யும் பொருட்டு உவந் தளித்த திருப்பாடல்களை அமிழ்தினுமினிய தமிழ்மொழி யில் திருவாய் மலர்ந்தருளியது தமது நிறை தவத்தின் பயனெனக் கருதிக் கடவுளை வணங்குகின்றார்.

**பன்னியசெந் தமிழறியேன்** கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியி லேனை.

கந்தமலர்....................................
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூற் றமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானை.

எத்திசையும் வானவர்க டொழநின் றானை
யேறூர்ந்த பெம்மானை யெம்மா னென்று
பத்தனாய்ப் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை,

சலம்பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்,

என்றமை காண்க.

திருஞான சம்பந்தப்பெருமான் தேவார முழுவதிலும் தமிழின் பெருமையைத் தமது திருப்பெயரோடு இணைத்துப் பாடியதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமழபாடியில் எழுந்தருளியிருக்கும் பிரானைப் 'பண்ணு ரின்றமிழாய்' என்று வழுத்தியதும், திருவிளையாடற் புராணமுடையார் முதலியோரும் தமிழ்த்தாயைப் பெரிதும் போற்றிப் பாடியிருத்தலும் தமிழின் பெருமையை நன்கு விளக்கும்.

அப்பர்பெருமான் தமது தேவார முதற்றிருப்பதிகத்தின்கண்ணே,

நெஞ்ச முமக் கேயிடமாக வைத்தேன்
நினையா தொருபோது மிருந்தறியேன்

என்றும்,

சலம்பூவொடு தூப மறந்தறியேன்

என்றும் மொழிந்திருப்பதின் பொருள் மிகத் தெளிவாக விளங்கவில்லை. சமணசமயம் நின்று சைவம் புகுந்தவுடன் பாடிய திருப்பதிகத்திலே அவ்வாக்கியங்கள் அமைதலே அதற்குக் காரணமென்க. முதலிரண்டு சொற்றொடர்களும் அவரது முற்செய் பெருந்தவத்தின் தன்மையைத் தெரிப்பன என்பர். பண்டை நற்றவத்தில் ஒரு சிறிது வழுவினமையினாலே சமணசமயம் புகுந்தவர் அவ்

வழுவின் பயனை நுகர்ந்த பின்னர் வழுவிலாது முதல்வனை அடைதற் பொருட்டுத் தாமியற்றிய நற்றவத்தின் பயனாகச் சூலைநோய் நீக்கத்தை வேண்டுகின்றாராதலின் அப்பகுதிகள் சமணசமயம் புகுதற்குமுன் இருந்த நிலையினையே குறிக்கும். சிலர் சமணசமயக் கடவுளுக்குச் செய்யப்பட்ட பூசனை பாடல் முதலியவற்றைச் சிவபெருமானுக்குச் செல்லுவதாக நாயனார் குறிப்பித்தாரென்பர். அவ்வாறாயின் அச்சமயத்தை நாயனார் இகழ்ந்ததற்குக் காரணம் புலப்படாது. எதிர்காலத்தில் தாம் இயற்றும் தவத்தினைக் குறித்தாரென்பதற்கு அச் சொற்றொடர்கள் இறந்த காலத்தில் வந்துள்ளமையால் திருப்பதிகம் பாடுவதற்கு அறிவுபெற்றவுடன் சமண சமயத்தின் இழிபும் தமது மேலை மெய்த் தவத்தின் விழுமையும் புலனாகப் பெற்றாராதலின், அத்தவத்தின் பயனை உற்றவிடத்து உதவும் வண்ணம் இறைவர்பால் வேண்டினரென்க.

......ஓவாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டும்..............

என்றபடி இடைவிடாது செய்த நற்றவத்தின் பயனாகவே துன்பநீக்கமும் இன்பப்பேறும் எய்துமாகலான் ஈண்டும் அவ்வாறே கொள்ளப்படும்.

உயர்ந்தேன் மனை வாழ்க்கையு மொண்பொருளு
மொருவர்தலை காவலி லாமையினால்

என்றது கடவுளது திருவருளை ஒரு சிறிது மறைக்கும் செருக்கின் இயல்பை உணர்த்தியவாறு மென்பர். தாம் சிறிது வழுவிச் சமண சமயம் புகுதற்கு அத்தகைய செருக்கே காரணமென்பார் அவ்வாறு கூறினாரென்க. மனை வாழ்க்கை யென்றது இல்லாளோடுகூடிய வாழ்க்கையே யன்றிச் செல்வக்குடியிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்

திருந்ததையும் குறிக்கும். நமது நாயனர் செல்வவாழ்க்கைக் குடியிற் பிறந்தோர். அவர் இல்லற வாழ்க்கை நடத்தவில்லை யென்பது தெளிவு. சமணசமயத்துள்ளும் துறவு நிலையையே மேற்கொண்டிருந்தா ராகலானும் அச்சமயம் புகுதற்குமுன் அவர் மணவாழ்க்கை புகாமையினும் ஈண்டு மனை வாழ்க்கை யென்பது இல்லறத்தைக் குறியாதென்க. அங்ஙனம் கொள்ளின் அஃது அவரது முற்பிறப்பில் நிகழ்ந்த செயலாகக் கருதற்பாலதேயன்றிப் பிறிதில்லை.

## கச. தேவாரத் திருக்குறட் கருத்தொருமை

அப்பர் தேவாரத்தில் திருவாரூர்த் திருந்தாண்டகப் பதிகமொன்றிற் போந்த ஓர் திருப்பாட்டினுடைய குறிப்புப் பொருளும் திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' என்னும் முதலதிகாரத்தின் நுட்பப் பொருளும் ஒத்திருப்பதை ஈண்டு ஒருவாறு சுட்டுதும். அத்திருப்பாடல் வருமாறு:

முன்ன மவனுடைய நாமங் கேட்டாண்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானுள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தா
ளகன்று ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாடன் னுமங் கெட்டா
டலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே.

திருக்குறள் முதலதிகாரமாவது:—

### கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. க

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனின். உ

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். ௩

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. ச

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. ரு

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். சு

தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. எ

அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. அ

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளை வணங்காத் தலை. கூ

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். க0

## 'முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்'

என்ற விடத்து அவனது (முழுமுதற் கடவுளது) நாமம் யாதென்ற கேள்வி யெழுகின்றது. அதற்குத் தக்கவிடை திருக்குறளின் முதலதிகாரத்து முதற்பாட்டிலுள்ள 'ஆதி பகவன்' என்ற சொற்றொடராகும். 'ஆதி' யென்றது சிவ சத்தியை. 'பகவன்' என்பது பகவு, அன் என்ற இரண்டு சொற்களாலாய் 'கூறன்' என்ற பொருளை யுணர்த்தும். பகவு என்பதற்குப் பிளவு, கூறு என்ற பொருள் 'எட்பக வன்ன சிறுமைத்தேயாயினும்' என்ற குறளிற் காண்க. 'ஆதி பகவன்' என்ற சொற்றொடரும் 'உமையொருபாகன்' என்ற சொற்றொடரும் 'குவளைக்கண்ணிக்கூறன்' என்ற சொற்றொடரும் ஒருபொரு ளுடையன.

'மூர்த்தி யவனிருக்கும்வண்ணம்' என்பதன் பொருள் இனி ஆராயற்பாலது. திருக்குறள் இரண்டாம் பாட்டி னுள் 'வாலறிவன்' என்ற சொற்றொடரால் ஆசிரியர் திருவள்ளுவர் கடவுட்டன்மையை விளக்கினார். அச்சொற் றொடருக்கு மெய்யறிவுடையான் என்று பொருள் கொள் ளுங்கால் கடவுள் சத்துப்பொருள் என்பதும், சித்துப் பொருள் என்பதும் வெளிப்படும். 'நற்றாள்' என்பதால் பிறவி யறுத்து எல்லையற்ற வீட்டின்பத்தைத் தரும்

திருவடி யுடையானென்பது பெறப்படுதலின், அவன் ஆனந்தப் பொருளுமாவன் என்பதும் தெளியப்படும். ஆதலால் இக்குறளுள் அவன் வண்ணங் கூறப்பட்டது காண்க.

'பின்னை யவனுடைய வாரூர்கேட்டாள்'

என்றதால் அவன் கோயில்கொண்டு வீற்றிருக்கும் திருவாரூர் என்ற தலத்தைப்பற்றிக் கேட்டாளென்பது பெறப்படும். திருவாரூர் நிலமகட்கு இருதயமான இடம் என்பது.

பூதம் யாவையி னுள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை யிதய கமலமா
மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால் (திருமலைச்சிறப்பு-கக)

என்ற ஆசிரியர் சேக்கிழார் திருவாக்காற் பெறப்படும். ஆதலால் 'ஆரூர்கேட்டாள்' என்ற சொற்றொடர் உருவகமாக இருதய ஆகாசத்தில் தியானஞ்செய்யு முறையை யுணர்ந்தாளென்பதைக் குறித்து நின்றது. அஃது அதர்வசிரசு என்னும் உபநிடதத்தில் தியானிக்குமிடம் கூறுமிடத்து முத்தி விழைந்தோர் இருதய ஆகாசமத்தியிலே முழுமுதற் கடவுளைத் தியானிக்கற்பாலர் என்றமையால் விளங்கும். அதுவே தகரவித்தை யெனப்படும். இதை ஆசிரியர் திருவள்ளுவநாயனார் 'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்' என்ற வாக்கியத்தாற் பெறவைத்தார். மலர் என்பது இதயம். மிசையென்பது ஆகாசம். ஏகினான் என்பது நடனஞ் செய்தான் என்ற பொருளில் வந்தது. உயிர்க்குயிராய் உள்ளத்தாமரையின் மேவி எல்லாவற்றையும் இயக்கும் முழுமுதற் கடவுளது திருவடியையே இடையறாது நினைத்தலே வீட்டின்பத்திற்கு ஏதுவாமாக

லின் அதனை யுணர்தல் இன்றியமையாததாகும். 'நில மிசை நீடுவாழ்வார்' என்பது நிலவுலகத்திலே தகர வித்தை பயின்றோர் சீவன்முத்தராக அகத்தியமுனிவர் போன்று நெடு நாளாக இருப்பர் என்று பொருள் கொள் வாருமுளர். அவ்வாறன்றி 'நிலமிசை' யென்பதற்கு இந்த இடத்தில் 'நிலம்' என்பதை நிலமுதல் நாததத்துவம் இறுதியாகவுள்ள எல்லாப் புவனங்களையும் குறிப்பிட்ட தாகக் கொண்டு 'மிசை' யென்பதால் அவற்றையெல் லாங் கடந்த வீட்டினைக் குறிப்பதாகக் கொள்ளுதல் சிறந்த பொருளாகும்.

'பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்'. 'அவனுக்கே' என்ற பிரிநிலை ஏகாரத்தின் ஆற்றலால் பிற பொருள்க ளிடத்துப் பற்றிலாதவள் என்பது பெறப்படும். அஃது அத்தகைய பெருமானைச் சார்ந்தார்க்கே இயலுமென் பதை ஆசிரியர் திருவள்ளுவர்,

> வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டு மிடும்பை யில

என்ற குறளாற் குறிப்பித்தார்.

**'அன்னையையு மத்தனையும் அன்றே நீத்தாள்'**

'அன்னை' யென்பது பிறவி எடுத்தற்குக் காரண மாகிய இருவினையையாதல் உடம்பையாதல் குறிக்கும். 'அத்தன்' என்பது ஆணவமலத்தைக் குறிக்கும். ஆணவ மலமே இருள் எனப்படுவது. ஆகவே இத்தேவார அடி யின் பொருளும்.

> இருள்சேர் இருவினையுஞ் சேரா

என்ற திருக்குறளடியும் ஒரே கருத்துடையன வென்பது போதரும்.

***'அகன்றுள் அகலிடத்தா ராசா ரத்தை'***

என்றவிடத்து, மலநீக்கமானவிடத்து இறைபணி நிற்றலை மேற்கொண்டு உலகத்தார் ஒழுக்கத்தைக் கைவிட்டா ளென்பது பெறப்படும். 'அகலிடத்தார் ஆசாரம்' ஐம் பொறி வாயிற்பட்டதாய் நிலையில்லா ஒழுக்கமாதலின் அதனை நீக்கவேண்டு மென்பார்

*பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்*

என்றருளினார்.

**'தன்னை மறந்தாள்'** என்பதால் தற்போதங் கெட்டாள் என்பது பெறப்படும். தன்னுணர்ச்சியே மனக்கவலைக்குக் காரணமாதலின் தலைவனை யுணர்ந்து தற்போதங் கெட்ட காலையே மனக்கவலை நீங்குமென்பார்.

*தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்*
*மனக்கவலை மாற்ற லரிது*

என்றார்.

**'தன்னுமங் கெட்டாள்'** என்றவிடத்து உலகத்திலே நாமம் விளங்குவதற்குக் காரணமாகிய பொருள் இன்ப மாதியவற்றைக் கடந்தாளென்பது பெறப்படும். 'பிற வாழி நீந்தலரிது' என்று குறள் அமைந்தவிடத்து அறத் திற் பிறவாகிய பொருளும் இன்பமுமாகிய கடல்களை நீந்தல் அரிது என்பது பெறப்படுகின்றதாகலான் திருக் குறள் எட்டாஞ் செய்யுளின் பொருளும் தேவார அடி யின் பொருளும் ஒத்திருத்தல் காண்க.

***'தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே'***

என்றதன் பொருளையே எதிர்மறையாக 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' என்றார் திருவள்ளுவர். இதன் கண் தாள், தலை என்ற சொற்கள் வந்தமை காண்க.

அவை புணர்ச்சியால் 'தாடலை' யென்றாயவிடத்து 'ட' கரமானது எவ்வாறு ஈரெழுத்துக்களை அடக்கி நிற்கின்றதோ, அது போலவே கடவுளும் உயிரும் முத்தியில் கலந்திருப்பாரென்று சைவசித்தாந்த நூலுட்கூறப்பட்டது. திருவடி முத்தியையே சிறப்பாகத் தேவாரத்துள்ளும் இத்திருக்குறளுள்ளும் குறிப்பித்தமை காண்க. கடவுளுடைய தாளிலே உயிரினது தலையானது பொருந்துதலையே முத்தியென்பது சைவக் கருத்தாகும். 'தலைவன் தாளே' என்ற ஏகாரத்தால் அத்திருவடியை யிடைவிடாது சிந்தித்தலாகிய முயற்சி யொன்றிலேயே வீடு அடையலாமென்பதும், அஃதில்வழி வீடெய்தல் அரிதென்பதும் பெறப்படும். இதனை ஆசிரியர் பத்தாவது குறளினால் வலியுறுத்துகின்றார்.

> பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
> ரிறைவ னடிசேரா தார்.

முற்றும்

## வரலாற்று நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சிவஞான முனிவர் வரலாறு | ... | 1 | 4 |
| ஆண்டாள் வரலாறு | ... | 0 | 4 |
| செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும் | ... | 0 | 4 |
| திருஞான சம்பந்தர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 2 | 0 |
| அப்பர்சுவாமிகள் சரித்திரம் | ... | 1 | 8 |
| சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 2 | 0 |
| மணிவாசகப் பெருமான் வரலாறு | ... | 1 | 8 |
| சேக்கிழார் சுவாமிகள் வரலாறு (அச்சில்) | | | |
| சந்தானசாரியர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 0 | 12 |

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.